REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2023 ஜூலை 7 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 159 | Friday 07, July, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## ஹஜ் கடமைக்காக சென்ற மூன்று இலங்கையர் மரணம்

### முஸ்லிம் கலாசார திணைக்களம் தெரிவிப்பு



மக்கா மற்றும் மதீனாவில் ஹஜ் யாத்திரையின் போது இந்த வருடம் மூன்று இலங்கை யாத்திரீகர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஹஜ் கடமைக்காக சென்ற மூன்று இலங்கையர் அங்கு மரணித்தமையை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

06

## ஜனாதிபதியை சந்தித்த முஸ்லிம் தரப்பினர் 11 முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முஸ்லிம் தரப்பினருக்கும் இடையிலாண முக்கிய சந்திப்பொன்று புதன்கிழமை (05) நடைபெற்றது. ஆசாத் சாலியின் ஏற்பாட்டில், பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பு, சுமார் 45 நிமிடங்கள் நீடித்தன.

இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் முஸ்லிம்களுக்கான தீர்வுகள் குறித்தே, இப்பேச்சில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கு பதில் வழங்கியுள்ள ஜனாதிபதி ரணில் இந்தியாவுக்கு சென்றுவந்த பின்னர் இவ்விவகாரம் தொடர்பில், உடனடி கவனம் எடுப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் சமய விவகார சட்டத்தை பௌத்த அமைச்சு கபளீகரம் செய்தமை, இஸ்லாமிய பாடப்புத்தக விவகாரம், முஸ்லிம் அரச அதிகாரிகளின் உள்ளீர்ப்பு, காணி விவகாரம் உள்ளிட்ட மற்றும் பல விடயங்கள் இதில்,உரையாடப்பட்டன.

இதில் பலவற்றுக்கு சாதகமான பதில் வழங்கிய ஜனாதிபதி, மேலும் சில விடயங்களை கையாள்வதற்காக தனது செயலாளருக்கு உத்தரவுகளையும் பிறப்பித்தார். எதிர்வரும் வாரங்களில் மற்றுமொரு பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவும்ஜனாதிபதி இதன்போது இணக்கம் தெரிவித்ததாக தெரியவருகிறது.

## பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைக்கும் பணி ஆரம்பம்

### கட்டம் கட்டமாக திருத்தி சமர்ப்பிக்கப்படும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதிமன்ற செயற்பாடுகளையும் ஆணைக்குழுக்களையும் அரசியலாக்காவிட்டால் சகல சட்டங்களையும் சிறந்த முறையில் செயற்படுத்த முடியுமென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல் நோக்கத்துக்காக பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும் அரசியல் அழுத்தங்களால்,

06

IMF நிபந்தனைக்கு அரசு எந்த சட்டத்தையும் தயாரிக்கவில்லை

## சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட சொத்துகள் அரசுடமையாக்கப்படும்

### புதிதாக வரவுள்ள ஊழல் ஒழிப்பு சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டவிரோதமான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்கும் அதிகாரம் புதிதாக கொண்டுவரப்படவுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதனை ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு மற்றும் நீதிமன்றம் என்பவற்றுக்கு வழங்கும் வழிமுறைகள் தற்போது

06

## வெளிநாட்டுத் தூதுவர்கள் 09 பேர் 'எல்ல ஒடிஸி'க்கு நட்புறவுப் பயணம்



இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்த புதுடில்லியிலிருந்து கடமையாற்றும் 09 வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென "எல்ல ஒடிஸி"விசேட நட்புறவு சுற்றுப்பயணமொன்று வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் இலங்கை சுற்றுலா

06

# இலங்கை மத்திய வங்கியினால் வட்டி வீதங்கள் குறைப்பு



## வாடிக்கையாளர்களுக்கு விரைவில் பலன்களை அனுபவிக்க முடியும்

**வங்கி, நிதி நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்களை செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் வட்டிக்குறைப்பின் பயன் கிடைப்பதுடன் அதனை கண்காணிக்க மத்திய வங்கி நடவடிக்கை**

இலங்கை மத்திய வங்கியால் கொள்கை வட்டி வீதம் நூற்றுக்கு 02 வீதம் குறைக்கப்பட்டதன் நன்மையை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும்வாடிக்கையாளர்களுக்குவிரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மத்திய வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

வட்டி விகிதங்களை குறைப்பதற்கான பலனை வாடிக்கையாளர்களுக்கு விரைவில் வழங்குவதற்காக நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளை நெருக்கமாகவும் கடுமையாகவும் கண்காணிக்கும் நடவடிக்கையில் இலங்கை மத்திய வங்கி ஈடுபட்டுள்ளதாக ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இம்மாதத்துக்குரிய நிதிக் கொள்கை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியில் நேற்று (06) பிற்பகல் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் இணைந்து கொண்ட போதே ஆளுநர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த ஆளுநர், நிதிக் குழு எடுத்த முடிவுக்கமைய விசேடமாக கடன் வட்டி வீதம் போதுமானளவு மற்றும் வேகமாக குறையுமென எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். அத்துடன், தாம் எடுத்த கொள்கைகளின் நன்மையை நபர்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு விரைவாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வங்கித் தொகுதியிடம் கோரிக்கை விடுத்தார்.

தேசிய பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக மீண்டும் இந்த ஆண்டு இறுதிக்குள்

06

## வடக்கில் 80 வீதமான காணிகள் மீண்டும் பொதுமக்களிடம் கையளிப்பு

### எவரையும் மகிழ்விக்க அங்கு முகாம்கள் அகற்றப்படாது –பிரமித்த



**ஸாதிக் ஷிஹான்**

யாருடைய அழுத்தங்களுக்காகவோ அரசியல் தேவைகளுக்காகவோ தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவ்வித தீர்மானங்களையும் இந்த அரசாங்கம் எடுக்காதென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார். அதேபோன்று வடக்கில் 80 வீதமான காணிகள் பொதுமக்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், எவரையும் சந்தோஷப்படுத்தும் நோக்கில் முகாம்களை அகற்றவில்லை. மாறாக உரிய முறையில் ஆராயப்பட்டே

06

## ஆகஸ்ட் 01 ஆம் திகதியை சிறுத்தைகள் தினமாக பிரகடனப்படுத்தவும் -சஜித்




தேசிய சிறுத்தைகள் தினமாக ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியை பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

06

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

### 19 ஆம் திகதி குழு நிலையில் திருத்தம் சபாநாயகர் சபையில் அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஊழல் எதிர்ப்பு சட்டம் நேற்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் பல விடயங்கள் திருத்தம் செய்யப்பட்டதுடன்

06

## குருநாகல் - தம்புள்ளை வீதி விபத்தில் தம்பதிகள் பலி

### லொறி–மோட்டார்சைக்கிள் மோதி அனர்த்தம்



ஆறாம் ஆண்டில் கல்வி கற்கும் தமது ஒரே மகளை அழைத்துச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளம் தம்பதியினர், குருநாகல் தம்புள்ளை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தனர்.

படகமுவ பகுதியில்

06

## உதயநிதியுடன் ஆளுநர் செந்தில் கலந்துரையாடல்

### இலங்கை – தமிழக உறவு குறித்து கருத்துப்பரிமாறினார்



இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், புதன்கிழமை தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். தமிழ்நாட்டுக்கு மிக நெருக்கமான நாடாக இலங்கை இருப்பதால்,

06

## பலஸ்தீன அகதி முகாம்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்

### அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் – ஹக்கீம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீன அகதிமுகாம் மீது மேற்கொண்டுள்ள தாக்குதலை அரசாங்கம் கண்டிக்க வேண்டும் எனவும், இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி பாராளுமன்றத்தில்

06

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

### இவ்வருடத்தில் 50,264 பேர் பாதிப்பு



நாட்டில் நாளொன்றுக்கு 189 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுவதுடன் நடப்பாண்டில் ஜனவரி முதல் ஜூலை (05) வரையான காலப்பகுதிக்குள் 50ஆயிரத்து 264 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு நேற்று (05) வெளியிட்டுள்ள அறிக்கையில்

06

## சீமெந்தின் விலை ரூ. 300 ஆல் குறைப்பு

### விரைவில் என்கிறார் அமைச்சர்




சீமெந்து விலை குறைக்கப்படவுள்ளதாக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சீமெந்து மூடையொன்றின் விலை 300 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மனித புதை குழி அகழ்வு

## உடைகளுடன் 13 சடலங்களின் எச்சங்கள் பல கண்டுபிடிப்பு



**மாங்குளம் குரூப் நிருபர்**

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் பகுதியில் கடந்தவாரம் விடுதலைபுலிகளின் சீருடையாக இருக்கலாமென்ற சந்தேகத்தில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்கள் தொடர்பிலான மேலதிக அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை(06)

06

## ICC மகளிர் அணி தர வரிசையில் முதலிடம்

### சமரி அத்தபத்து வரலாற்றுச் சாதனை




ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் துடுப்பாட்ட வீராங்கனைகளின் தர வரிசையில், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சமரி அத்தபத்து முதலிடத்தை பிடித்து வரலாற்று சாதனையை பதிவு செய்தார்.

06

## அரசியல் கைதிகள் விடயத்தில் அநீதியான சட்டம் அமுலில்

### பாராளுமன்றில் கஜேந்திரகுமார் உரை



அரசியல் கைதிகள் விவகாரத்தில் அநீதியான சட்டமே நாட்டில் பின்பற்றப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்று கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாக தடுத்து வைக்கப்பட்டுள்ள

06

## பாடசாலையில் பிள்ளைகளை இணைக்க போலிச் சான்றிதழ்

### கண்டியில் கிராமசேவகர் ஒருவர் கைது



கண்டி, பிரதேசத்திலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையொன்றில் மாணவிகளை சேர்ப்பதற்காக போலிச் சான்றிதழை தயாரித்த குற்றச்சாட்டில், கிராம சேவகர் ஒருவரை கண்டி விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது. வரெல்லாகம பிரதேசத்தில் வசிக்கும் 58 வயதுடைய கிராம அதிகாரி ஒருவரே, கைதானவராவார்.

06

# பொருளாதார ஸ்திரத்தன்மை நோக்கி பயணிக்கும் "கொழும்புத் திட்ட" யோசனைக்கு பாராட்டு

இலங்கை மீண்டுமொருமுறை பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி பயணிப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள "கொழும்புத் திட்ட" யோசனைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.



போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கும் 'கொழும்பு திட்டத்தின்' திட்ட பொதுச் செயலாளர் கலாநிதி பெஞ்சமின் பி. ரெய்ஸூக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று அமைச்சு காரியாலயத்தில் நடைபெற்றது. நாட்டில் தற்போது காணப்படும் நிலைமையையும் ஸ்திரதன்மையையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அரசு செயற்படும் விதம் தொடர்பாக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் இங்கு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அங்கு பொருளாதார துறையின் வளர்ச்சிக்காக டிஜிட்டல் பயன்படுத்துதல் குறித்து அரசு விசேட கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். 'கொழும்பு திட்டத்தின்' திட்டப் பொதுச்செயலாளர் கலாநிதி பெஞ்சமின் பி ரெய்ஸ் கருத்து தெரிவிக்கையில் இலங்கை மீண்டும் ஒருமுறை பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி பயணிப்பது குறித்து பாராட்டு தெரிவித்தார். போதைப்பொருள் நிவாரணம் உள்ளிட்ட அரச அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக தமது திட்டம் விசேட ஒத்துழைப்பை பெற்றுக் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி நடைபெற உள்ள கொழும்பு திட்டத்தின் 72 ஆவது நிறைவு விழாவில் கௌரவ விருந்தினராக கலந்து கொள்ளுமாறு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கு திட்ட பிரதிநிதிகளால் இச்சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுக்கப்பட்டது. 'கொழும்பு திட்டத்தின்' திட்டப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட விசேடப் பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள்.

## ஆயிரமாவது ஜும்ஆவும் உணவு வழங்கலும்



மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசலில் 1000ஆவது வார ஜும்ஆவை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள "ஆயிரமாவது ஜும்ஆ குத்பாவும், உணவு போஷணம் வழங்கும் நிகழ்வும்" இன்று (07) நண்பகல் நேரத்தில் பள்ளிவாசலில் இடம்பெறும்.

ஜும்ஆ நிகழ்வைத் தொடர்ந்து மாபெரும் கந்தூரியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அந்நூர் ஜும்ஆ பள்ளி நிர்வாகம் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.

## ஊடகவியலாளர் றபீக் பிர்தௌஸின் தந்தை காலமானார்

(மருதமுனை தினகரன் நிருபர்)



சிரேஷ்ட ஊடகவியலாளரும்,நிந்தவூர் அட்டப்பள்ளம் சஹிதா வித்தியாலய அதிபருமான றபீக் பிர்தௌஸின் தந்தை ஆதம் பாவா அஹமது லெவ்வை (05) புதன்கிழமை காலமானார். அன்னாரின் ஜனாஸா புதன்கிழமை அஸர் தொழுகையின் பின்னர் நிந்தவூர் மஸ்ஜிதுல் ஜன்னா பள்ளிவாசலில் தொழுகை நடாத்தப்பட்டு, முத்தகீன் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# நெற்கதிர்களின் பாதிப்பிற்கு அதிகளவு வெப்பமே காரணம்

## மட்டு. அரசாங்க அதிபரிடம் நெல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பில் சிறுபோக வேளாண்மை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதற்கான காரணத்தினைக் கண்டறிய மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வேண்டுகோளின் பேரில், வத்தளைகொட நெல் ஆராய்சி நிலைய ஆராய்ச்சியாளர்கள் மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் செவ்வாய்கிழமை (04) விஜயம் செய்து களப்பணியில் ஈடுபட்டனர்.



இதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவுக்கும் நெல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

நெற்கதிர்களின் பாதிப்பிற்கு அதிகளவான வெப்பத்தின் தாக்கம் ஒரு காரணியாக இருப்பதை கண்டறிந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் இரசாயன பசளை பாவனை தொடர்பாகவும் நிலத்திற்கு தேவையான நுன்பசளைகளை பரிசோதனை செய்து குறைபாடான பசளைகளை இட வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியதுடன், மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தினை தமது தலைமையகத்திற்கு அறிக்கையிடுவதாக நிபுணர்கள் இதன் போது தெரிவித்தனர்.

இதுதவிர, தொற்றுக்களில் இருந்து பாதுகாக்க வயல் நிலங்களை முறையாக பண்படுத்துதல், அறிமுகம் செய்யப்பட்ட புதிய நெல் இனங்களை பயிரிடுதல், வயல் நிலங்களில் உள்ள மண்ணினை பரிசோதனை மேற்கொண்டு பரிந்துரைசெய்யப்பட்ட இரசாயன பசளைகளைப் பயன்படுத்துவதனூடாக, அதிகளவான விளைச்சளை பெற்றுக் கொள்ள முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஜெகன்நாத், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிராந்தியப் பிரதிப் பணிப்பாளர் வீ. பேரின்பராஜா, கமநல அமைப்பின் பிரதிநிதிகள், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



ஏறாவூர் நகர சபையும், ஏறாவூர் குரல்கள் அமைப்பும் ஏற்பாடு செய்திருந்த பெருநாள் வசந்தம் நிகழ்வின் போது, ஏறாவூர் கிட்ஸ் கொலேஜ் மாணவர்கள் இராணுவத்தினரை ஒத்த சீருடையில் தோன்றிய காட்சி. (படம்: ஏறாவூர் சுழற்சி நிருபர்)

## சீரான உணவுப் பழக்கம் இன்மையால் மக்கள் தொற்றா நோயினால் பாதிப்பு

### வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட்

(ஒலுவில் விசேட நிருபர்)

சீரான உணவுப் பழக்க வழக்கம் இன்மையால் அதிகமான மக்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார். தேசிய போசாக்கு மாதத்தினை முன்னிட்டு பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்த போசாக்கு உணவு தொடர்பான விழிர்ப்புணர்வு செயலமர்வு சனிக்கிழமை (01) சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ். எம். அப்துல் மலீக் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தொடர்ந்து உரையாற்றுகையில், பிள்ளைகளின் பாதுகாப்பான உணவு விடயத்தில் பெற்றோர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்
DNCWS

**வழங்கல் தொடர்பான அறிவித்தல்**

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்கள வழங்கல் சபை தலைவர் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து கீழ்வரும் பணிகளுக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகிறார். (PVC குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்கள்)

| பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | தகைமைகள் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபாவில் | பிணைப் பாதுகாப்பு ரூபாயில் | பத்திரம் வெளியிடப்படும் இடம், தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் கேள்வி முடிவுறும் திகதி |
|---|---|---|---|---|
| CBOs மாவட்டங்களுக்கு PVC குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் (களுத்துறை, மாத்தறை மற்றும் கண்டி) ஒப்பந்த இல: **DNCWS/ PRO/2023/ PVC/01** | PVC குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்கள் | 4,000.00 | 350,000.00 | பணிப்பாளர் (வழங்கல்) தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல.1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடை தொ.பே - 0112775403 கேள்வி முடிவுறும் திகதி மற்றும் நேரம் **2023 ஜூலை 28ஆம்** திகதி, காலை **10.00** மணி |
| * **கேள்வி திறக்கப்படும் திகதியிலிருந்து 91 நாட்கள் செல்லுபடியாக வேண்டும். (2023 ஒக்டோபர் 06ஆம் திகதி)** | | | | |

**மேற்குறிப்பிட்ட விடயத்துக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

01. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு **மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய ரசீதுடன் எழுத்து மூலமான ஆவணமொன்றை** (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், **கணக்கிலக்கம் - 0007040440 - இலங்கை வங்கி**) தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் சமர்ப்பிக்கவும்.
02. கேள்விப்பத்திரங்களை **2023 ஜூலை 07ஆம் திகதி முதல் 2023 ஜூலை 27ஆம் திகதி வரையில்** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் **வழங்கல் பிரிவில்** சாதாரண வேலை நாட்களில் **09.00** மணி முதல் **15.00** மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடிவதோடு பத்திரங்கள் வெளியிடப்படும் இடத்தில் சாதாரண வேலை நாட்களில் **இலவசமாக கேள்விப்பத்திரங்களை பரிசீலனை செய்ய** முடியும்.
04. முத்திரையிடப்பட்ட கேள்விகளை திணைக்களத்தின் 2ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள **(வழங்கல் பிரிவில்) கேள்விப் பெட்டியிலிடவும்** அல்லது கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு **பதிவுத்தபால்** அல்லது **குரியர்** மூலமாக அனுப்பி வைக்கவும்.
05. **அனைத்து கேள்விகளும் 2023 ஜூலை 28ஆம் திகதி காலை 10.15 மணிக்கு திறக்கப்படும்.** இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும். **பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.**
06. **பிணைப் பாதுகாப்பு,** பணிப்பாளர் நாயகம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல.1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடை என்று குறிப்பிடப்பட வேண்டும். அவை **2023 நவம்பர் 24ஆம்** திகதி வரை செல்லுபடியாக வேண்டும்.

தலைவர்,
திணைக்கள வழங்கல் சபை,
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இல. 1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடை.
07.07.2023

**கல்பிட்டி பிரதேச சபை**

**வாகன திருத்தவேலைக்காக விலைமனு கோரல்**

கல்பிட்டி பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வாகன திருத்தவேலைக்கான விலைக்கோரல் படிவங்கள் 2023-07-07ஆம் திகதி முதல் 2023-07-20ஆம் திகதி வரையில் மு.ப. 08.30 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன், விண்ணப்பப் படிவங்கள் 2023-07-22ஆம் திகதி மு.ப. 09.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் படிவங்கள் திறக்கப்படும்.

இந்த வாகன திருத்தவேலைக்காக பிரதேச சபைக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைகள் சகிதமான கேள்விப் படிவங்களை செயலாளர், கல்பிட்டி பிரதேச சபை, கல்பிட்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைகளைக் குறிப்பிட்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வாகனத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கான விலைமனு எனக் குறிப்பிடுதல் வேண்டும். திருத்தவேலைகள் தொடர்பான மேலதிக தகவல்களை கல்பிட்டி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது 0322260274/275 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வாகன விடயப்பொறுப்பு அலுவலரைத் தொடர்புகொண்டு விசாரிக்கலாம் என்பதுடன் வாகனங்களை 2023-07-07ஆம் திகதி முதல் அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை கல்பிட்டி பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

- வாகன திருத்தவேலைக்கு இயைபான நிபந்தனைகள் விலைக்கோரல் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும்.

**அட்டவணை**

| தொ. இல. | வாகன இலக்கம் | வாகனத்தின் வகை | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும் - ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | RD-8048 | Tractor | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 2. | RD-1604 | Tractor | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 3. | JX-2295 | Tractor | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 4. | 49-5857 | Tractor | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 5. | 5-542008 | Tractor | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 6. | GE-5502 | Tractor | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 7. | LL-6915 | Tipper | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 8. | HG-2601 | Three Wheel | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 9. | 301-4390 | Car | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 10. | Silver 1 | Water Bowser | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |
| 11. | Silver 2 | Water Bowser | 1,000.00 | 500.00 (வரிகள் சகிதம்) |

கேள்வியை ஏற்றுக்கொள்வது தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை கல்பிட்டி பிரதேச சபையின் கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**மங்கள ராமநாயக்க,**
**செயலாளர்,**
**கல்பிட்டி பிரதேச சபை.**
**2023-07-06.**

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 7 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්


தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் - | 04.37 |
| லுஹர் - | 12.17 |
| அஸர் - | 03.44 |
| மஃரிப் - | 06.32 |
| இஷா - | 07.48 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஆணி 23

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# பாராளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் வசதிக்கு புதிய முத்திரை

## முத்திரைப் பணியகத்தினால் நேற்று வெளியீடு




பாராளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் தேவைகளுக்காக 50 ரூபா பெறுமதியான புதிய முத்திரை வெளியிடப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பாராளுமன்ற நூலகத்தில் நேற்று (06) இவ்வெளியீடு இடம்பெற்றது.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகம் இந்த முத்திரையை வெளியிட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களின் பலதரப்பட்ட அஞ்சல் தேவைகளை எளிதாக நிறைவேற்றிக்கொள்வதற்கு, சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு இம்முத்திரை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், அமைச்சர் பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன, தபால் மாஅதிபர் எம். ஆர்.பி. சத்குமார உள்ளிட்ட அதிகாரிகள் சிலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## யாழ் – சென்னைக்கு தினசரி விமான சேவை

### எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சென்னைக்கிடையிலான பயணிகள் விமான சேவை எதிர்வரும் (16) முதல் தினசரி விமான சேவைகளாக நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து காலை 9.35 க்கு புறப்படும் விமானம் யாழ்ப்பாணத்திலிருந்து 12.00 க்கு புறப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நான்கு நாட்கள் மட்டுமே விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கிராண்ட்பாஸ் இளைஞன் வெட்டிப் படுகொலை

### கூரிய ஆயுதங்களால் தாக்கிய குழு தப்பியோட்டம்

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகலகம் வீதியில் இளைஞரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் புதன்கிழமை (05) மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த 25 வயதுடைய இளைஞர் நாகலகம் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு குழு அவரைத் துரத்திச் சென்று தாக்க முற்பட்டது. இதன்போது அவர்களிடமிருந்து தப்பிக்க அருகிலுள்ள கடையொன்றுக்குள் அவ்விளைஞன் ஓடியுள்ளார். இதன்போது அவரை துரத்திச் சென்ற குழுவினர் அந்த இளைஞரை கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால், அவர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய தொழில் கண்காட்சி 2023 அனுசரணை Dialog Enterprise

### இலங்கையின் உள்ளூர் கைத்தொழிலாளர்களின் மிகப்பெரிய கண்காட்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது

Powered by INDUSTRY 2023 | Dialog ENTERPRISE

டயலொக் எண்டர்பிரைஸ் (Dialog Enterprise) மூலம் இயங்கும் தேசிய தொழில் கண்காட்சி 2023, ஜூனின் 22ஆம் திகதியன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் ஆகியோர் உட்பட கைத்தொழில் அபிவிருத்தி சபை தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

20இற்கும் மேற்பட்ட தொழில்துறைகளைச் சேர்ந்த சுமார் 750 கூடங்களைக்கொண்ட மேற்படி கண்காட்சி, ஜூனின் 22 முதல் 25 வரை நடைபெற்றது. தனி நபர்கள், தனியார் மற்றும் முப்படைகளைச் சேர்ந்தவர்கள் என 350 தனித்துவமான கண்காட்சியாளர்கள் தமது தயாரிப்புகள், தீர்வுகள் மற்றும் தொழில்நுட்பத்தைக் காட்சிப்படுத்தினர். நாடு முழுவதிலுமிருந்து சுமார் 100,000 பார்வையாளர்கள் மேற்படி தேசிய தொழில் கண்காட்சியை பார்வையிட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். உள்ளூர் கைத்தொழில்கள் மற்றும் தொழில்முனைவோரின் உச்சக்கட்ட முன்வைப்புகளாக இக்கண்காட்சி அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட கார்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், ஜூனின் 21ஆம் திகதியன்று காலிமுகத்திடலிலிருந்து பண்டாரநாயக்க மண்டபம் (BMICH) வரை கார் கண்காட்சியொன்றும் நடைபெற்றது. பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இதில் கலந்துகொண்டதுடன், நிறைவு விழாவில் அமைச்சினால் இலங்கையில் ஒரு சர்வதேச தொழில் கண்காட்சியின் அவசியத்தை எடுத்துரைக்கும் விதமாக 2024ஆம் ஆண்டின் தொழில் கண்காட்சிக்கான திகதியை அர்ப்பணிப்புடன் நிர்ணயித்து உறுதிசெய்யப்பட்டது.



Dialog Enterprise [illegible] Hong Zhou Wong.

Dialog Enteprise கூடத்திற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன வருகை தந்தபோது, பிரதமரை டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வரவேற்றார். "டயலொக் எண்டர்பிரைஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் தேசிய கைத்தொழில் கண்காட்சிக்கு அனுசரணை வழங்குவதை அரசாங்கம் பெரிதும் பாராட்டுகின்றது. மேலும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள புதிய மற்றும் புதுமையான தொழில்நுட்பம் உள்ளூர் தொழில்துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பாதையை திறக்கும் என்று நான் நம்புகிறேன்" என பிரதமர் இங்கு குறிப்பிட்டார்.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தனது குழுவினருடன் Dialog Enterprise கூடத்திற்கு விஜயம் செய்தார். இங்கு தனது கருத்துகளை தெரிவித்த அமைச்சர், "உள்ளூர் கைத்தொழில்களுக்கு தேசிய கைத்தொழில் கண்காட்சி போன்ற களத்தை வழங்குவதில் அமைச்சு மகிழ்ச்சியடைகிறது. மேலும் இந்நிகழ்வுக்கு Dialog Enterprise அனுசரணை வழங்கியதை நாங்கள் பாராட்டுகிறோம். இக்கண்காட்சிக்கு வருகை தரும் தொழில்துறையினர் மற்றும் வர்த்தகத் துறையினருக்கு இங்கு வழங்கப்படும் விளக்கமளிப்புகள் பயனுள்ளதாக இருக்கும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்" என்றார்.

Dialog Enterprise சரியான நேரத்தில் வணிக மேம்பாட்டு உதவி மற்றும் வழிகாட்டுதலுடன் சமீபத்திய தொழில்துறை 2023 தொழில்நுட்பத்தை காட்சிப்படுத்தியது. நிறுவனம் தேசிய தொழில் கண்காட்சியின் "Signature Enterprise Experience Stall" கூடத்தை பெருமையுடன் முன்னிலைப்படுத்தியது. அதிநவீன பாதுகாப்பு தீர்வுகள், IoT (இன்டர்நெட் ஓவ் திங்ஸ்), இணைப்பு, டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் வணிக நிதி மற்றும் கண்காணிப்பு மற்றும் ஃப்ளீட் முகாமை தீர்வுகள் இதில் அடங்கும். டயலொக் நிபுணர்கள் குழு, உலகத் தரம் வாய்ந்த வணிகப் பங்காளிகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து, வணிகச் சமூகத்தின் தேவைகளைப் பற்றி விவாதிக்கவும், அவர்களின் தேவைகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்ளவும், மேற்படி கண்காட்சி கூடங்களில் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"Dialog Enterprise குழுமத்தின் பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் மேலும் தெரிவிக்கையில், " Dialog Enterprise இல் நாங்கள் எப்போதும் பெரிய மற்றும் சிறிய வணிகங்களின் மாற்றத்தை மேம்படுத்துவதற்கு புதுமையான டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் தளங்களை வழங்க முயற்சி செய்கிறோம். எங்கள் தொழில்களை புதுப்பித்தல் மற்றும் புத்துயிர் பெறுவதற்கான தேசிய முயற்சியை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். மேலும் அவர்களின் இலக்குகளை அடைய அரசாங்க அதிகாரிகள், முகவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வணிகங்களுடன் நெருக்கமாக பணியாற்ற அர்ப்பணிப்புடன் செயலாற்ற உறுதிபூண்டுள்ளோம்" என்றார்.

நிகழ்ச்சியின் நிறைவில் B.M.I.H. மெய்நிகர் கண்காட்சி https://vindustryexpo.idb.lk/ இல் ஜூலை 9ஆம் திகதிவரை நடைபெறும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது.


## கொழும்பு மாநகர சபை

### நிலுவை வரிப் பணம் சேகரிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் (ஒப்பந்த அடிப்படையில்)

நிலுவை வரிப்பணம் சேகரிப்பதற்காக கொழும்பு நகரத்தினுள் நிரந்தர வதிவிடமுடைய கீழ்க்காணும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.(உயர்) தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் வயது வருடங்கள் 25-50க்கு இடைப்பட்டவர்களாகவும், சிறந்த ஆளுமை படைத்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.
- கொழும்பு நகரத்தினுள் நிரந்தர வதிவிடம் தொடர்பில் நிரூபித்தல் வேண்டும்.
- களத்தில் கடமை புரிதல் தொடர்பில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- பணத்தில் ரூபா.100,000 மற்றும் காப்புறுதிப் பிணை மூலம் ரூபா.500,000 பிணை வைக்க முடிந்தவராக இருத்தல் வேண்டும்.

இப்பதவிக்கு நிரந்தர ஓய்வூதிய சம்பளமோ, சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு பணமோ செலுத்தப்படமாட்டாது என்பதுடன் சேகரிக்கின்ற நிலுவை பணத்தின்படி தரகு (Commission) பணம் மட்டும் செலுத்தப்படும் வகையில், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். ஒப்பந்த காலம் ஆண்டுதோறும் நீடிக்கப்படுவதுடன் சேகரிக்கப்படுகின்ற நிலுவை பணத்தின் அளவு, மகிழ்ச்சிகரமான மக்கள் தொடர்பாடல், ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடமைகளை புரிதல், போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, ஒப்பந்த காலம் நீடித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

விண்ணப்பதாரியின் பெயர், வதிவிடம், வயது, கல்வித் தகைமைகள், ஏனைய தகைமைகள், விண்ணப்பதாரி பற்றிய தகவல்களை பெறக்கூடிய உறவினர் அல்லாத இருவரினது தகவல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய (Bio Data) சுயவிபரக் கோவை மற்றும் உரிய தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களுடன் மாநகர பொருளாளர், மாநகர பொருளாளர் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு-07 எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். இந்த அறிவித்தல் கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, 2023 ஆகஸ்ட் மாதம் 04ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் 'நிலுவை வரிப்பணம் சேகரிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் - 2023' என குறிப்பிடப்படல் வேண்டும்.

அடிப்படை தகைமைகள் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்பு தொடர்பிலான இறுதித் தீர்மானம் கொழும்பு மாநகர சபைக்கு உரித்தானது.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன**
**மாநகர ஆணையாளர்.**



## வரையறுக்கப்பட்ட புத்தளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### 2023.06.30ம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட முழு அங்கத்தவர் பெயர் பட்டியல் மற்றும் 2023.06.30ம் திகதிக்கான அங்கத்தவர் பெயர் பட்டியல் காட்சிப்படுத்தல்

வ/ப புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2023.06.30ம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட முழுமையான வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியல் (2022.06.30ம் திகதி வரையான அங்கத்தவர்களாகிய) மற்றும் 2023.06.30ம் திகதிக்கு அங்கத்தவர் பெயர் பட்டியல் 2023.07.11 முதல் 2023.07.25 வரை கீழ்க்காணும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும். அதனடிப்படையில் அங்கத்துவம் பெற்றுள்ள சகலரினதும் பெயர்கள் அங்கத்தவர் பெயர் பட்டியலுக்கு உற்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் உங்களது பெயர், அங்கத்துவ இலக்கம், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என பரீட்சித்துப் பார்த்து அவற்றில் ஏதேனும் திருத்தங்கள், மேன்முறையீடுகள் அல்லது எதிர்ப்புக்கள் இருப்பின் அது பற்றி எழுத்துமூலம் செயலாளர், வ/ப புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மஸ்ஜித் வீதி, புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். அத் திருத்தங்கள், மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் 2023.07.11 முதல் 2023.07.25 வரை ஏற்கப்படும் அக்காலத்திற்குள் திருத்தங்கள், மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் ஏதேனும் சமர்ப்பிக்கப்படாத விடத்து, அப்பட்டியல் சரியான பட்டியலாகக் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மேலும் தெரிவிக்கிறேன்.

| பிரதேச இலக்கம் | பிரதேசம் | காட்சிப்படுத்தப்படும் இடங்கள் | பிரதேச இலக்கம் | பிரதேசம் | காட்சிப்படுத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | நகர இல 1 | புத்தளம் கிராமிய வங்கி | 8 | பாலாவி | பாலாவி கிராமிய வங்கி |
| 2 | நகர இல 2 | | 9 | அட்டவில்லு | கல்அடிய கிராமிய வங்கி |
| 3 | வட்டகண்டல் | வனாத்தவில்லு கிராமிய வங்கி | 10 | பொத்துவில்லு | பொத்துவில்லு கிராமிய வங்கி |
| 4 | விஜயபுரம் | | 11 | சிரம்பியடி | சிரம்பியடி கிராமிய வங்கி |
| 5 | வனாத்தவில்லு | வனாத்தவில்லு கிராமிய வங்கி | 12 | கல்லடி | கல்லடி கோப் சிட்டி கிளை |
| 6 | எழுவன்குளம் | எழுவன்குளம் கிராமிய வங்கி | 13 | மொனரவெவ | வனாத்தவில்லு கோப் சிட்டி கிளை |
| 7 | கரதீவு | கரதீவு கோப் சிட்டி கிளை | 14 | மானபேரிய | சிரம்பியடி கிராமிய வங்கி |

சங்கத்தின் சகல பிரதேசங்களுக்கும் உரித்தான அங்கத்தவர் பெயர் பட்டியல்களில் பிரதிகள் காட்சிப்படுத்தலுக்காக சங்கத்தின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக www.membercoop.net இணைய தளத்திற்கு பிரவேசித்து அங்கத்தவர் பெயர் பட்டியலைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**செயலாளர்,**
**வ/ப புத்தளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**மஸ்ஜித் வீதி, புத்தளம்.**
**தொலைபேசி - 032-2265270**

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 18

### குறள் தரும் சிந்தனை



அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

உண்டது செரித்ததா என்பதை உணர்ந்து, நன்கு பசியெடுத்த பிறகு உடலுக்கு ஒத்து வரக்கூடிய உணவை அருந்த வேண்டும்.

## மதநல்லிணக்கத்தை சீர்குலைக்க ஒருபோதும் இடமளிக்கலாகாது!

இலங்கையானது பல மதங்களையும் பல இனங்களையும் சேர்ந்த மக்கள் வாழும் ஓர் அழகிய தேசமாகும். இந்நாட்டில் இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் ஐக்கியமாகவும் புரிந்துணர்வு நல்லெண்ணத்துடன் ஆரம்ப காலம் முதல் வாழ்ந்து வருகின்றனர்.

443 வருடங்கள் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகியிருந்த இந்நாட்டுக்கு இன மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டனர். சுதந்திரத்திற்கு பின்னரும் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனுமே செயற்படலாயினர்.

ஆனாலும் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதையும் தனித்துவ அடையாளங்களுடன் முன்னேற்றப் பாதையில் பயணிப்பதையும் விரும்பாத உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் மக்கள் மத்தியில் ஐயங்களையும் சந்தேகங்களையும் விதைக்கலாயினர். அதுவே அவர்களுக்கு அற்ப இலாபங்களை அளிக்கக் கூடியதாகும்.

இதன் காரணத்தினால்தான் 2009 வரையான சுமார் 25 வருடங்கள் இந்நாடு உள்நாட்டு யுத்தத்திற்குள் தள்ளப்பட்டிருந்தது. இந்த யுத்தத்தினால் முழு நாடுமே பாரிய இழுப்புகளுக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுத்ததோடு 20, 30 வருடங்கள் பின்னடைவுக்கும் உள்ளாகின.

அந்த யுத்தத்தினால் நாடோ, மக்களோ எந்த நன்மையையுமே அடையவில்லை. அனைத்துமே இழப்புக்களும் வேதனைகளும் அழிவுகளும் தான். அதனால் அவ்வாறான ஒரு ஆயுத மோதல் இனியொரு போதும் இம்மண்ணில் தோற்றம் பெற்றுவிடக்கூடாது என்பதே அனைத்து மக்களதும் வேணவாவாக உள்ளது.

இவ்வாறான நிலையில் மதங்களுக்கு மத்தியில் நிலவும் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் சீர்குலைக்கும் வகையிலான முயற்சிகள் 2010 ஆண்டின் பின்னர் இந்நாட்டில் தோற்றம் பெறலாயின. ஆனால் நாட்டின் சுபீட்சத்தையும் பல்லின மக்களின் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் நேசிக்கும் அனைத்து மக்களும் அதற்கு ஆட்சேபனையும் எதிர்ப்பும் தெரிவிக்கலாயினர்.

ஏற்கனவே இனரீதியில் தோற்றுவிக்கப்பட்ட சந்தேகங்கள் ஐயங்களினால் ஏற்பட்ட இழப்புக்களின் வடுக்கள் மறைவதற்குள் மத ரீதியிலான பிளவுகளுக்கான முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இம்முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பலவீனங்களும் நிலவின.

இந்நிலையில் 2014 இல் அழுத்கம, பேருவளை கலவரம் இடம்பெற்றது. அதன் பின்னர் கிந்தோட்ட, திகன என்றபடி கலவரங்கள் இடம்பெற்றன. 2019 இல் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் அதனைத் தொடர்ந்து மினுவாங்கொட, குளியாப்பிட்டி என்றபடி கலவரங்கள் இடம்பெற்றன.

இக்கலவரங்கள் அனைத்தும் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை. அவையும் இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் தான் வழிவகுத்தன.

இவ்வாறான சூழலில் 2020 இல் தோற்றம் பெற்ற கொவிட் 19 பெருந்தொற்று பரவுதல் அச்சுறுத்தலோடு மனிதாபிமானப் பார்வை மேலோங்கியதோடு, பொருளாதார நெருக்கடி காலத்தில் மேலும் வலுப்பெற்று எல்லோரும் இலங்கையர் என்ற பார்வையை உருவாக்கியது.

பொருளாதார நெருக்கடியின் அசௌகரியங்கள் நீங்கி நாட்டில் மீண்டும் இயல்பு நிலை ஏற்பட்டு வருகின்றது. இச்சூழலில் மீண்டும் மத ரீதியிலான பிளவுகளை உருவாக்கவும் வளர்க்கவும் முயற்சிகள் ஆங்காங்கே தலைகாட்டலாயின. அதனால் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் சீர்குலைக்கும் முயற்சிகளைக் கட்டுபடுத்துவது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அந்தடிப்படையில் சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட புத்த சாசனம், மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, 'மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் ஒடுக்கவும் மத நல்லிணக்கத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கவும் யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பில் சட்ட நவடிக்கைகளை முன்னெடுக்கவென எந்த மதத்தையும் இழிவுபடுத்த இடமளிக்காத வகையில் புதிய சட்ட ஏற்பாடொன்றை கொண்டு வரவிருப்பதாகவும் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் வகையில் இச்சட்ட ஏற்பாடு அமைந்திருக்கும்' என்றுள்ளார்.

அதேநேரம் நாட்டில் தொல்பொருள் கட்டளைச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அச்சட்டத்தற்கு முரணாக எவரும் செயற்பட முடியாது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் இவ்வறிவிப்பை நாட்டின் சுபீட்சத்தையும் அமைதி நல்லிணக்கத்தையும் உண்மையாக விரும்பும் அனைத்து தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

உண்மையில் இன ரீதியாகவோ, மத ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ வேற்றுபட்டிருந்தாலும் அனைவரும் மனிதர்கள் தான். அந்த அடித்தளத்தில் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட்டு நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும். அது வளமான தேசத்திற்கு பிரதான அடித்தளமாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# களனி பல்கலைக்கழகத்தில் பாலின வேறுபாடுகளுக்கான சர்வதேச மாநாடு

## களனி பல்கலைக்கழக பாலின ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பம்




பாலின வேறுபாடுகள் தொடர்பான இரண்டாவது சர்வதேச மாநாட்டை (ICGD '23) நடத்த களனி பல்கலைக்கழகத்தின் பாலின ஆய்வு மையம் தயாராகி வருவதால் அதுகுறித்த எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இந்த மாநாட்டின் முதன்மை நோக்கம் பாலின சமத்துவத்தை நிலைநாட்டுவதும் சமத்துவத்தை மேம்படுத்துவதும் ஆகும். பாலின சமத்துவத்தை வளர்ப்பதில் சமூகங்கள் எதிர்கொள்ளும் பன்முக சவால்கள் மற்றும் பாலின வேறுபாடுகளை தெளிவுபடுத்தும் ஆய்வுக் கட்டுரைகளைச் சுற்றியே விவாதத்தின் மையப்புள்ளி உள்ளது.

பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படும் முறைகளை ஆராய்வதன் மூலமும், அந்தந்த பாலினக் கொள்கைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலமும், ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களின் விலைமதிப்பற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு தளத்தை வழங்க இந்த மாநாடு முயற்சிக்கிறது. இந்த நிகழ்வானது உள்ளூர் மற்றும் சர்வதேச அறிஞர்கள், உலகெங்கிலும் பயன்படுத்தப்படும் வெற்றிகரமான வழிமுறைகளின் தாக்கத்தை பெரிதுபடுத்தி, சக வாழ்வுக் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடக்கூடிய சூழலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில், பரந்த அளவிலான கருப்பொருள்களை உள்ளடக்கிய பல ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 70 இற்கும் மேற்பட்ட ஆக்கங்கள் பெறப்பட்ட நிலையில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், இளங்கலை மாணவர்கள் மற்றும் முதுகலை மாணவர்களின் நுண்ணறிவுப் பங்களிப்புகளை கல்விச் சமூகம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

ஆராய்ச்சி கருப்பொருள்களாவன:

பாலினம், நிலையானதன்மை, அபிவிருத்தி, கல்வி, சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம், தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, சக்தி மற்றும் சமத்துவம், ஆட்சி மற்றும் உரிமைகள், பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியம், ஊதிய இடைவெளி, ஊதியங்கள் மற்றும் அதிகாரமளித்தல், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை, பாலினம் மற்றும் உலகளாவிய மோதல்கள்

ஜுலை 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் மாநாடு நடைபெறும். அனைத்து பங்கேற்பாளர்களும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) இலங்கைப் பிரதிநிதி திருமதி அசுசா குபோடா (Ms.AzusaKubota) மற்றும் முதுநிலைப் பேராசிரியரும் மற்றும் களனிப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான திருமதி நிலாந்தி டி சில்வா (Ms. NilanthiDe Silva) ஆகியோரால் வரவேற்கப்படுவார்கள்.

முதன்மை உரையை களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையின் புகழ்பெற்ற கல்வியாளரும் சிரேஷ்ட தலைவருமான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க (Professor Maithree Wickramasinghe) ஆற்றுவார்.

இலங்கை, இந்தியா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் மியன்மார் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்பர். பாலின சமத்துவமின்மையைத் தணிப்பதில் தனியார் துறையின் முக்கிய பங்கை ஆராய்வதற்காக, இந்தியாவின் பாடலி புத்ரா பல்கலைக்கழகத்தைச் (Patali Putra University )சேர்ந்த பேராசிரியர் சுனிதா ஷர்மாவின் சிறப்பு விரிவுரையும் இக்கருத்தரங்கில் இடம்பெறும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பாலின வேறுபாடுகளுக்கான தேசிய மாநாடு வெற்றி பெற்றதை அடுத்து, களனி பல்கலைக்கழகத்தில் பாலின கல்விக்கான மையம் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அறிவு பரிமாற்றத்தில் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.இந்த மதிப்புமிக்க மாநாட்டின் மூலம் மதிப்பிற்குரிய ஆராய்ச்சியாளர்கள் எல்லைகளைத் தாண்டி, உலகளாவிய தளத்தில், தங்கள் விலைமதிப்பற்ற நிபுணத்துவத்தை வழங்குவார்கள்.

ஒரு தேசம் மற்றும் சமூகம் என்ற வகையில், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மிகவும் சமத்துவமான உலகத்தை வளர்த்து, பாலின வேறுபாடுகளைக் குறைக்க தேவையான அறிவு மற்றும் புரிதலுடன் நம்மைநாமே ஆயத்தப்படுத்த வேண்டியுள்ளது. சமத்துவம், ஒற்றுமை, அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலம் என்பவற்றின் மாற்றத்தை நோக்கி பயணத்தை மேற்கொள்வதே சிறந்தது.

**கலாநிதி அனுஷா எதிரிசிங்க...**
இயக்குனர் பாலின ஆய்வு மையம்
களனி பல்கலைக்கழகம்

# கல்முனை பிரதேச மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிய மர்ஹூம் எம்.சி.அஹமட்



கல்முனை தொகுதியின் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக 14 வருடங்களும், கல்முனை பட்டின சபைத் தலைவராக 13 வருடங்களும் சேவையாற்றிய மர்ஹூம் எம்.சி.அஹமட் அவர்களின் 15 ஆவது சிராத்த தினம்கடந்த 03.07.2023 அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

அவர் ஆற்றிய சேவைகள் என்றும் மக்கள் உள்ளத்தில் நிலைத்திருக்கும். மர்ஹூம் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் தலைமையில் உள்ள இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் மகாநாட்டை கல்முனையில் ஒரு சிறிய பாடசாலையில் மிகச் சிறப்பாக நடத்தினார். இறுதிநாள் நிகழ்ச்சிகளில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கலந்து கொண்டார். இவ்விடத்தில் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இவ்வேண்டுகோளை கட்டாயம் நிறைவேற்றுவேன் என மேடையில் பதியுதீன் முன்னிலையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உறுதி வழங்கினார்.

1970 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டு டொக்டர் பதியுதீன் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டவுடன் இம்மகளிர் கல்லூரியை ஸ்தாபிக்க இடவசதி இல்லை என்ற பிரச்சினை ஏற்பட்டபோது இப்பாடசாலையில் சுற்றியிருந்த அவரது உறவினர்களும் நெருங்கிய ஆதரவாளர்களும் காணிகளை தர மறுத்த போது தன்னுடைய அரசியல் செல்வாக்கை உபயோகித்து இக்கல்லூரிக்கு காணி பெற்றுக் கொடுத்தார். இக்கல்லூரிக்கு மஹ்மூத் மகளிர் கல்லூரி எனப் பெயரிட்டார்.

கல்முனை சாஹிரா கல்லூரியில் அகில இலங்கை தமிழ்த்தின விழாவை நடத்தி கல்வியமைச்சின் உயரதிகாரிகள், கல்விஅமைச்சர் போன்றவர்களை இக்கல்லூரிக்கு அழைத்து வந்து அதன் மூலமாக பல கட்டடங்களையும் ஏனைய வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

அதுமட்டுமல்லாமல் தனது தொகுதியிலுள்ள பல தமிழ்ப் பாடசாலைகளையும் தரம் உயர்த்தினார். காரைதீவு தமிழ் மகாவித்தியாலயத்திற்கு ஒரு விஞ்ஞான கூடத்தை பெற்றுக் கொடுத்தார்.

கல்முனையில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்றவற்றை நிறுவினார். கல்முனையில் சலுசலா, C.W.E போன்றவற்றை நிறுவி வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுத்தார். இவரது காலத்தில் இப்பிரதேசம் விவசாயத்தில் முன்னேற்றம் கண்டது.

கிட்டங்கி பாலத்தை நிறுவியதன் மூலம் அப்பகுதி மக்களின் கஷ்டத்தை போக்கினார். விவசாயத்தைப் போன்று மீன்பிடித் தொழிலும் இவரது காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. இவர் பல மீனவர் கூட்டுறவு சங்கங்களை நிறுவி அதன் மூலம் மீனவருக்கு இயந்திரப் படகுகள், மீன்பிடி வலைகள், வள்ளங்கள் பெற்றுக் கொடுத்தார்.

கல்முனை வைத்தியசாலையை தரம் உயர்த்தி தளவைத்தியசாலையாக மாற்றி அதற்குரிய வசதிகளை செய்து கொடுத்தார்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்தினார். கல்விக்கூடங்கள், பொதுஸ்தாபனங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றில் ஒற்றுமையை வளர்த்தார். இவரை ஏழை மக்களும் இலகுவாக நெருங்க முடியும்.

இவரது எண்ணக்கருவில் உருவாக்கியதுதான் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி. இவ்வாறாக பல வகையிலும் கல்முனைப் பிரதேசத்திற்கு அவர் பணியாற்றியுள்ளார்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# சீனா-பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டத்தின் 10 ஆண்டு நிறைவும் பாகிஸ்தானின் வளர்ச்சியும்



சீனா_பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டமானது, பாகிஸ்தானின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளது என்று பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் தெரிவித்தார். சீனா_ பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டத்தின் தசாப்தத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் உரையாற்றிய பிரதமர், இந்தப் பாரிய திட்டம் பாகிஸ்தானின் அபிவிருத்திற்கு பாரியளவில் பங்காற்றியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

"நிலக்கரி மின்உற்பத்தி நிலையங்கள், வெகுஜன போக்குவரத்துத் திட்டம் மற்றும் வீதி உட்கட்டமைப்பு உள்ளிட்ட சீனா_ பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான திட்டங்கள் பாகிஸ்தானின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளன. இத்திட்டமானது பாகிஸ்தான் மற்றும் சீன அரசுக்கு இடையிலான கடின உழைப்பு மற்றும் அயராத அர்ப்பணிப்பின் விளைவாகும்.

ஜுலை 2013 இல் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப் பெய்ஜிங்கிற்கு விஜயம் செய்து சீன_ பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஜுலை 5, 2013 அன்று சீனா_ பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டத்தின் மறக்கமுடியாத ஒப்பந்த நிகழ்வை நாங்கள் கண்டோம், அங்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் நவாஸ் ஷெரீப் இதன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்" என்று அவர் கூறினார்.

"சீனா_ பாகிஸ்தான் பொருளாதார திட்டமானது மிகவும் வெளிப்படையான திட்டம். சீன அரசும் நிறுவனங்களும் பல திட்டங்களில் $25.4 பில்லியன் முதலீடு செய்துள்ளன. பாகிஸ்தான் மக்களின் நல்வாழ்வுக்காக சீனா இத்திட்டத்திற்கு அளித்த ஆதரவுக்காக சீன அதிபரை பாராட்டுகின்றோம். மேலும் ,பாகிஸ்தான் முஸ்லீம் லீக் தலைவர் நவாஸ் ஷெரீப் மற்றும் நிதியமைச்சர் இஷாக் தார், திட்டமிடல் அமைச்சர் அஹ்சன் இக்பால், தொழில் முனைவோர் மற்றும் திறமையான தொழிலாளர்கள் உள்ளிட்ட அவரது குழுவினரின் அர்ப்பணிப்பையும் அவர் இங்கு நினைவு கூருகின்றோம்.

விவசாயம், சிறப்புப் பொருளாதார வலயங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கனிம வளங்களை ஆய்வு செய்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இத்திட்டமானது ஒரு பாரிய முன்னேற்றத்தை உருவாக்கும்" என்று கூறிய அவர் கடந்த அரசாங்கம் இத்திட்டம் குறித்து தவறான எண்ணங்களை ஏற்படுத்தியதால், அது தாமதமாக செயல்படுத்தப்படுவதாக வருத்தம் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் அளவிலான ஒப்பந்தத்திற்காக காத்திருக்கும் போது, பாகிஸ்தானை ஆதரித்ததற்காக ஜனாதிபதி ஜி மற்றும் சீன அரசாங்கத்திற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். ஜுலை 12 ஆம் திகதி நடைபெறும் சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தால் முன்னர் மீறப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக அவர் உறுதியளித்தார். சீனா உட்பட சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இஸ்லாமிய மேம்பாட்டு நிதியம் ஆகியவை பாகிஸ்தானின் நிதி நெருக்கடியை சமாளிக்க உதவின என்றும் அவர் கூறினார்.

நிதியமைச்சர் இஷாக் தார், திட்ட அமைச்சர் அஹ்சன் இக்பால், தகவல் அமைச்சர் மரியம் ஔரங்கசீப் மற்றும் சீன பொறுப்பாளர் பாங் சுங்சு ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அகதிமுகாமிலிருந்து முருகனை விடுவிக்கக் கோரி நளினி தொடுத்த வழக்கில் நீதிமன்றத்தின் உத்தரவு



ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறையில் இருந்து விடுதலையான முருகனை அகதிமுகாமில் இருந்து விடுவிக்கக் கோரி முருகனின் மனைவியான நளினி தொடர்ந்த வழக்கில் மேல்நீதிமன்றம் புதிய உத்தரவு விடுத்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள்கைதியாக இருந்து உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட முருகனை, அகதிகள் முகாமில் இருந்து விடுவிக்கக் கோரி அவரது மனைவி நளினி தாக்கல் செய்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த நளினி, முருகன் உள்ளிட்டோரை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்திருந்தது.

வெளிநாட்டுப் பிரஜையான முருகன் திருச்சியில் உள்ள அகதிகள் முகாமில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில், தனது கணவரை அகதிகள் முகாமில் இருந்து விடுவித்து தன்னுடன் சேர்ந்து வாழ அனுமதிக்க கோரி, நளினி மத்திய அரசுக்கு மனு அனுப்பியிருந்தார்.

அந்த மனு மீது முடிவெடுக்க உத்தரவிடக் கோரி, நளினி தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கில், லண்டனில் வசிக்கும் மகளுடன் சேர்ந்து வாழ கணவர் முருகன் விரும்புவதாகவும், கடவுச்சீட்டு பெறுவது தொடர்பாக அவர் இலங்கை தூதரகத்தை தொடர்பு கொள்ள வேண்டியுள்ளதாகவும் நளினி குறிப்பிட்டுள்ளார்.

அகதிகள் முகாமில் உள்ள அவரால் அங்கிருந்து வெளிவர முடியவில்லை எனவும், அதனால் திருவான்மியூரில் வசிக்கும் தன்னுடன் சேர்ந்து வாழ வகைசெய்யும் வகையில் முருகனை அகதிகள் முகாமில் இருந்து விடுவிக்க வேண்டும் எனவும் நளினி கோரியுள்ளார். வழக்குகளில் சிறைவாசம் அனுபவித்த பல வெளிநாட்டவர்களை சில நிபந்தனைகளின் அடிப்படையில் உறவினர்களுடன் தங்க அரசு அனுமதித்துள்ளதாகவும், சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகுவதற்கு அரசு அனுமதித்துள்ளதாகவும் நளினி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி என்.சேஷசாயி, வழக்கு குறித்து மத்திய மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# அல்-குர்ஆனை ஓதும் ஒழுங்குகள்



அல்குர்ஆனை ஓதும்போது பேண வேண்டிய மூன்று ஒழுங்குகள் குறித்து இமாம் கஸ்ஸாலி (ரஹ்) குறிப்பிட்டுள்ளார்கள். தக்ஸீஸ், தஅஸ்ஸுர், தரக்கி என்ற சொற்களால் அவர் அவ்வொழுங்குகளை அடையாளப்படுத்தியுள்ளார்.

அந்த வகையில் தக்ஸீஸ் என்பது குறிப்பாக்குதல் ஆகும். அல்குர்ஆனை நாம் ஓதும்போது அல்லது விளங்க முனையும்போது எம்மில் உருவாக்கிக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஒரு மனோநிலைதான் அது. அல்குர்ஆனிய வசனங்கள் பொதுவாக யாரையோ நோக்கி பேசுகிறது என்று நோக்காது, அது என்னோடு பேசுகிறது என்று நோக்குவதாகும். அதாவது பொதுமைப்படுத்துவதை தவிர்த்து குறிப்பாக்குதலாகும்.

அல் குர்ஆனில் காணப்படும் ஒரு ஏவல், விலக்கல், நன்மை கிடைப்பதாக சொல்லப்படும் நன்மாராயணம், தண்டனை கிடைப்பதாக சொல்லப்படும் எச்சரிக்கை, குர்ஆனியக் கதைகள், நபிமார்களின் வரலாறுகள், வரலாற்று நிகழ்வுகள் போன்றவற்றை கண்ணுற்றால், ஓதினால், செவிமடுத்தால் அது தமக்கான ஏவலாகவும் விலக்கலாகவும் கருதப்பட வேண்டுமேயொழிய அது பிறருக்கானது எனக் கருதலாகாது. அதிலிருந்து தன்னை மாற்றிக்கொள்வதற்கான பாடங்களையும் படிப்பினைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக 'அவர்களது நிகழ்வுகளில் அறிவுடையோருக்கு படிப்பினைகள் இருக்கிறது. இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியல்ல, இதற்கு முன்னால் வந்த வேதங்களை உண்மைப்படுத்துகிறது. அனைத்து விடயங்களையும் விவரித்துக் காட்டுகிறது. நம்பிக்கை கொண்ட சமூகத்தவருக்கு நேர்வழியாகவும் அருளாகவும் உள்ளது' (யூசுப் 111).

இதனை எமக்கானதாக நோக்க வேண்டும். குர்ஆனில் இருந்து நாம் படிப்பினைகளைப் பெற வேண்டும். முன்னைய வேதங்களை நாம் நம்புவதுடன் அல்குர்ஆனிலிருந்து நேர்வழியையும் அருளையும் பெற்றுக்கொள்ளவும் தவறலாகாது.

நபிமார்களின் வரலாறுகளிலிருந்து நாம் படிப்பினைகள் பெற வேண்டும். நபிமார்கள் சோதனைகளும் கஷ்டங்களும் ஏற்பட்ட போது பொறுமையுடன் இருந்தது போன்று நாமும் பொறுமை காக்க வேண்டும். இறையுதவி வரும்வரை சத்தியப்பாதையில் உறுதியாக இருக்க வேண்டும். அல்குர்ஆன் தன்னை அகிலத்தாருக்கான நேர்வழி, அருள், பிரகாசம், உபதேசம், பார்வையை திறந்துவிடக்கூடியது, ஞாபகமூட்டக்கூடியது, தெளிவுபடுத்தக்கூடியது என்றெல்லாம் குறிப்பிடுகிறது. அவற்றை நாம் அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதனைத்தான் இமாம் மாலிக் இப்னு தீனார் (ரஹ்), 'அல்குர்ஆனைச் சுமந்திருப்பவர்களே! அல்குர்ஆன் உங்களில் எதனை ஏற்படுத்தியுள்ளது என்பதனைப் பார்க்கவில்லையா! மழை பொழியும் போது எவ்வாறு தாவரங்கள் முளைக்குமோ அவ்வாறுதான் அல்குர்ஆன் உள்ளத்திலே நல்ல விடயங்களை ஏற்படுத்தும்' என்று வினா எழுப்பி விளக்கியுள்ளார்.

மேலும் தஅஸ்ஸுர் என்பது அல்குர்ஆனால் தாக்கமுறுதல் என்பதைக் குறிக்கும். அல்குர்ஆனை ஓதும்போது வசனங்களை நுணுக்கமாக நோக்கி உள்ளத்தில் ஆழமான பலதரப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்திக்கொள்வதாகும். இது இரண்டாவது ஒழுங்காகும்.

கவலையான விடயங்களின்போது கவலைப்படுவது பயங்கரமான விடயங்களை அஞ்சுவது, எதிர்பார்க்க வேண்டிய விடயங்களை எதிர்பார்த்திருப்பது போன்ற விடயங்களில் நாம் அப்படியே இருந்துவிடுவது. அல்குர்ஆனால் நாம் தாக்கமுற்று ஒன்றித்துப்போக வேண்டும்.

உதாரணமாக சூறா தாஹாவின் 82 வது வசனத்தில் அல்லாஹ் தன்னை 'நிச்சயமாக நான் அதிகம் மன்னிப்பவனாக உள்ளேன்' என்கிறான். அதனைத் தொடர்ந்து யாரை மன்னிப்பேன், எத்தகைய பண்புகள் உள்ளவனை மன்னிப்பேன் என்பதனைக் குறிப்பிடுகிறான். இங்கு நான்கு நிபந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன. 'தவ்பா செய்கின்றவர்கள், ஈமான் கொள்கின்றவர்கள், நல்லமல்கள் செய்கின்றவர்கள், பின்னர் நேர்வழியை பெற்றவர்கள்' இவ்வசனங்களால் தாக்கமுற்று இப்பண்புகளை எம்மில் வளர்த்துக்கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும்.

'காலத்தின் மீது சத்தியமாக... மனிதன் நஷ்டத்திலே இருக்கிறான். ஈமான் கொண்டவர்கள், நல்லமல்கள் புரிகின்றவர்கள், சத்தியத்தைக் கொண்டும் பொறுமையை கொண்டும் பரஸ்பரம் உபதேசம் செய்து கொண்டவர்கள் தவிர' என்று சூறா அஸ்ர் குறிப்பிடுகிறது. இவ்வசனங்களை ஓதுகின்ற ஒருவர் காலத்தின் பெறுமதி பற்றியும், நட்டமடையாது இருப்பதற்கான வழிகள் பற்றியும், ஈமான், அமல், சத்தியம், பொறுமை, இவற்றுக்கிடையிலான தொடர்புகள் பற்றியெல்லாம் சிந்தித்துணர்ந்து, தாக்கமுற்று தன்னை மாற்றிக் கொள்கின்றவனாக இருக்க வேண்டும்.

'அல்லாஹ்வின் அருள் முஹ்ஸினீன்களுக்கு மிகவும் நெருக்கமானது (அஃராப் 56). இவ்வசனத்தை ஓதும் ஒருவர் 'முஹ்ஸின்' என்றால் யார்? 'இஹ்ஸான்' என்றால் என்ன? அல்லாஹ்வின் அருளுக்கும் இஹ்ஸானுக்கும் இடையிலான தொடர்பு யாது? என்று சிந்தித்து தாக்கமுற வேண்டும். இப்படியாக அனைத்து அல்குர்ஆன் வசனங்களையும் நோக்க வேண்டும்.

இதனைத்தான் இமாம் வுஹைப் இப்னு வுர்த் (ரஹ்) 'நாம் பல பேச்சுகளையும் உபதேசங்களையும் செவிமடுத்துள்ளோம். ஆனால் அவை உள்ளத்தைக் கசியச் செய்யவில்லை. கவலையை ஏற்படுத்தவில்லை. ஆனால் அல் குர்ஆனை ஓதுவதும் அதனை விளங்குவதும் அதனை நுணுக்கமாக நோக்குவதும் உள்ளத்திலே தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது' என்கிறார். (இஹ்யா 285 – 287)

அதேநேரம் 'தரக்கி' என்பது அல் குர்ஆனின் தரத்துக்கு உயர்ந்து நிற்றல் என்பதைக் குறிக்கும். அல்குர்ஆனை செவிமடுத்தாலும், ஓதினாலும் விளங்க முனைந்தாலும் அதன் தரத்துக்கு எம்மை உயர்த்திக் கொள்ள முனைய வேண்டும். அதனை எமது தரத்துக்கு இறக்க முனைய கூடாது.

அதனை செவிமடுப்பது அகிலத்தாரின் இரட்சகனின் பேச்சை செவிமடுப்பதாகும். அதனை விளங்குவது மாட்சிமை பொருந்திய ஒருவனுடன் உறவாடுவதாக அமையும். உலக நிலையில் இத்தகைய ஒருவருடன் பேசும்போது கதைக்கும்போது எவ்வாறு நாம் நடந்து கொள்கிறோம் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அல்குர்ஆனை ஓதுவது அல்லது வாசிப்பது என்பது இரண்டு படித்தரங்களை கொண்டது. அதில் குறைந்தது அல்லாஹ்வின் முன்னிலையில் நின்று அல்லாஹ்வுக்கு அதனை வாசித்துக்காட்டுவது என்ற மனநிலையோடு அல்குர்ஆனை ஓதுவது அவசியம். அல்லாஹ் தன்னை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஓதுவதை செவிமடுத்துக்கொண்டு இருப்பதாகவும் கருத வேண்டும். உண்மையில் இந்த நிலை அல்லாஹ்வை மதிப்பதுடன் தொடர்பான ஒரு நிலையாகும். இது கௌரவமான முறையில் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனிடம் விண்ணப்பிப்பதாக அமையும்.

இரண்டாவது: அல்லாஹ் தன்னை பார்த்துக்கொண்டிருப்பதாக, தன்னோடு அன்பாக பேசுவதாக, அவனோடு அவனது அருள்கள், அவன் செய்த நல்லவைகள் பற்றி கதைத்துக்கொண்டிருப்பதாக உள்ளத்தால் உணர வேண்டும். இது நான்கு உணர்வுகளுடன் தொடர்புபடுவதோடு அல்லாஹ்வுடன் வெட்க உணர்வோடு நடந்து கொள்வதும் அவனைக் கண்ணியப்படுத்துவதும் ஆகும். அது அவன் சொல்வதை காது கொடுத்து கேட்பதையும் அவன் சொல்வதை புரிந்துகொள்வதையும் குறிக்கும்.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# ஈமானில் சுத்தம் பெற்றுள்ள முக்கியத்துவம்

சுத்தம் சுகம் தரும் என்பது நாம் அறியாததல்ல. நபி (ஸல்) அவர்கள் 'சுத்தம் அது ஈமான் எனும் இறை நம்பிக்கையின் ஒரு பகுதி' என்று எடுத்துரைத்தார்கள். மனிதன் கடைபிடிக்க வேண்டிய கட்டாயக் கடமைகளில் தூய்மையும் ஒன்று.

என்றாலும் நாம் கவனம் செலுத்தாமல் விட்டுவிட்ட ஒன்றாக அது உள்ளது. அதனால் உணவு, உடை, உடல், இருப்பிடம் என யாவற்றிலும் நாம் தூய்மையைப் பேண வேண்டும்.

சுத்தம் என்பது இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதனால் இறை நம்பிக்கை என்பது வெறும் மனதளவிலான நம்பிக்கை மட்டுமல்ல. அது செயலளவிலானதும் கூட. அதனையே மேற்படி நபிமொழி எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அதனால், நாம் சாப்பிட முன் கைகளைக் கழுவ வேண்டும், சாப்பிட்ட பின்பும் கைகளை கழுவி, வாய் கொப்பளிக்கவும் வேண்டும். தூய்மையான ஆடைகளை அணிய வேண்டும். தினமும் குளிக்க வேண்டும், மலம், சிறுநீர் கழித்த பின் அவ்வுறுப்புக்களையும், கைகளையும் நன்கு கழுவ வேண்டும். காலணி அணிய வேண்டும், வீட்டையும், வீட்டு வாசலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும், உறங்கச் செல்ல முன்னர் படுக்கை விரிப்புக்களை உதறிக்கொள்ள வேண்டும். இவ்வாறு மனிதன் தன் அன்றாட வாழ்வில் தினமும் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து தூய்மை முறைகள் குறித்தும் இஸ்லாம் வலியுறுத்திக் கூறியுள்ளது. இவை அனைத்தும் திருக்குர்ஆனிலும், நபிமொழிகளிலும் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில், "மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில், அனுமதிக்கப்பட்டவற்றையும், பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள்; ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான்". (அல் குர்ஆன் 2:168)

"நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள். நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்".

(அல் குர்ஆன் 2:172)

"ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அழகாக்கிக் கொள்ளுங்கள். உண்ணுங்கள், பருகுங்கள், எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ், அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை". (அல் குர்ஆன் 7:31)

"உம் ஆடைகளைத் தூய்மையாக்கி வைத்துக் கொள்வீராக. மேலும் அசுத்தத்தை வெறுத்து (ஒதுக்கி) விடுவீராக".

(அல் குர்ஆன் 74:4,5)

"(நபியே!) அல்லாஹ் தன் அடியார்களுக்காக அளித்திருக்கும் (ஆடை) அலங்காரத்தையும், நல்ல (மேலான) உணவையும் (ஆகாதவையென்று) தடுப்பவர் யார்?" என்று கேட்டு 'அது இவ்வுலகத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு(ம் ஆகுமானதே! எனினும்) மறுமை நாளில் (அவர்களுக்கு மட்டுமே) சொந்தமானது' என்றும் கூறுங்கள். அறியக்கூடிய மக்களுக்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம்".

(அல் குர்ஆன் 7:32)

"நம்பிக்கையாளர்களே...! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் (அதற்கு முன்னர்) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்கள் கைகளையும், கணுக்கால்கள் வரையில் உங்கள் இரு பாதங்களையும் கழுவிக்கொள்ளுங்கள். அன்றி, (உங்கள் கையில் நீரைத் தொட்டு) உங்கள் தலையை தடவிக் கொள்ளுங்கள். நீங்கள் முழுக்குளிப்புடையவர்களாக இருந்தால் (கை, கால்களை மட்டும் கழுவினால் போதாது. உடல் முழுவதையும் கழுவி) தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கஷ்டத்தைத் தர அல்லாஹ் விரும்பவில்லை. எனினும், அவன் உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், தன் அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கி வைக்கவுமே விரும்புகின்றான். (இதற்காக) நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக!".

(அல் குர்ஆன் 5:6)

இவ்வாறு சுத்தம் பற்றி இஸ்லாம் மிக விரிவாக எடுத்தியம்பியுள்ளது. இருந்தும் கூட நாம் பல சந்தரப்பங்களில் தூய்மையைப் பேணாதவர்களாக இருக்கின்றோம். கவனக்குறைவாக நடந்து கொள்கிறோம். அதன் விளைவு நம்மை மட்டுமல்ல நம்மைச் சுற்றியிருப்பவர்களையும், நம் சந்ததியினரையும் பாதிக்கவே செய்கிறது. இது மறுக்க முடியாத உண்மையாகும்.

குறிப்பாக இன்றைய காலப்பகுதியில் இந்நாட்டில் டெங்கு வைரஸ் காய்ச்சல் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு வீட்டுச்சூழலையும் சுற்றாடலையும் சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திராததே அடிப்படைக் காரணமாகும்.

ஆனால் இஸ்லாம் எடுத்தியம்பியுள்ளபடி, நாம் சுத்தத்தை உரிய ஒழுங்கில் பேணுவோமாயின் டெங்கு வைரஸ் ஒரு அச்சுறுத்தலாகவே இராது. ஆனால் அதில் ஏற்பட்டுள்ள பலவீனங்களின் விளைவாக இவ்வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்கு ஏற்ற வாய்ப்புக்கள் துரதிஷ்டவசமாக அதிகரித்துள்ளன. அதன் விளைவாகவே டெங்கு பெரும் சவாலாகியுள்ளது.

சுத்தம் பேணப்படுவதில் ஏற்பட்டுள்ள பலவீனங்களின் விளைவாக இந்நிலை ஏற்பட்டுள்ள போதிலும் இஸ்லாம் சுத்தத்திற்கு அளித்துள்ள முக்கியத்துவம் குறித்து நினைவூட்டப்படாத நிலைமை காணப்படவே செய்கிறது.

ஆகவே இஸ்லாம் சுத்தத்திற்கு அளித்துள்ள முக்கியத்துவம் குறித்து கொண்டு வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்வோம்.

அபூமதீஹா...

# வயோதிப பெற்றோருடன் பிள்ளைகள் நடந்துகொள்ள வேண்டிய முறை

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'அவனுடைய மூக்கு மண்ணாகட்டும் (அவன் கேவலம் அடையட்டும்) என்று மூன்று முறை கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! யார்? (யாரைப் பற்றி இப்படி கடிந்துரைக்கிறீர்களா?) என்று வினவ

'வயோதிப நிலையில் தன் தாய் தந்தையரில் ஒருவரோ இருவருமோ உயிருடன் இருக்கையில் (அவர்களை நல்ல முறையில் கவனித்து) சுவனம் செல்லாதவன்' என்று குறிப்பிட்டார்களென அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

வயது முதிர்ந்த தன்னுடைய தாய், தந்தையரோடு நல்ல முறையில் நடந்து கொள்ளாத காரணத்தால் இழிவுக்கும், கெட்ட பெயருக்கும் ஆளான ஒருவன், சுவனம் செல்லும் பேற்றினை இழப்பான் என்ற செய்தியை நபி (ஸல்) அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள்.

தள்ளாத வயதிலுள்ள தாய் தந்தையருக்கு பணிவிடை செய்து அவர்களை உபசரித்து அவர்களுடைய தேவைகளுக்கு பணம், பொருள் கொடுத்து மகிழ்விப்பவன் சுவனத்திற்கு தகுதியானவன் என்பதையே இந்நபி மொழி எடுத்தியம்புகிறது.

பொதுவாக முதுமை மற்றும் உடல் பலவீனத்தின் காரணமாக பெற்றோருக்கு பணிவிடை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். எனவே அவர்களை நல்லமுறையில் பராமரிப்பது பிள்ளைகளின் மீது கடமையாகும். பொருளாதார விஷயத்தில் அவர்கள் பலவீனமுற்றிருக்கும் போது அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் நோயுற்றால் அவர்கள் மீது அன்பு காட்டி தகுந்த சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் ஏதேனும் ஆபத்தில் சிக்கிக் கொண்டால், துன்பத்திற்கு ஆளானால் அவர்களின் கவலையைப் போக்கவும் மனதைத் தேற்றவும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி அவர்களைச் சந்தித்து அன்பு காட்ட வேண்டும். அவர்களிடம் உரையாடும் போது அவர்களின் கண்ணியமும் மரியாதையும் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுடன் நடந்து செல்லும் போது பின்னால் செல்ல வேண்டும். அவர்களுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள், 'ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அறப்போருக்குச் செல்ல அனுமதி கோரினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், உன்னுடைய பெற்றோர் உயிருடன் இருக்கின்றனரா? என அவரிடம் வினவ அவர் 'ஆம்' என பதிலளித்தார். அவ்வாறெனில், அவர்களுக்காக (உழைத்து பணிவிடை செய்து) நீர் அறப்போர் செய்யும் என்ற கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

'தாய் தந்தையருக்கு அறச்சேவை செய்யும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருப்பதன் ஊடாக அவர்களுக்கு ஓய்வும் சுகமும் கிடைக்கும் பொட்டு பொருட்களை செலவிட வேண்டும். அதனால் உங்கள் உடல் சோர்வுற்றுப் போகும் அளவிற்கு அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும். அவர்களுடன் பணிவாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களது நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு மனத் திருப்தியை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் ஜாஹிமா (ரழி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழியொன்று இவ்வாறு பதிவாகியுள்ளது/. 'நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அறப்போரில் கலந்துகொள்ள அனுமதி கோரினேன். அப்போது நபிகளார், உன்னுடைய தாய் தந்தையர் உயிருடன் இருக்கின்றனரா? என அன்னார் வினவ நான் 'ஆம்' என்றேன். அச்சமயம் நபி (ஸல்) அவர்கள், 'நீர் அவர்களுடன் இரும், சுவனம் அவர்களுடைய காலடியில் உள்ளது. (அவர்களுடன் நல்லமுறையில் நடந்து கொண்டால் 'சுவனம்' கிட்டும்' என்று குறிப்பிட்டார்கள்.

(ஆதாரம்: மிஷ்காத்)

இதேவேளை நபிமொழித் தொகுப்பான அபூதாவூத்தில் பதிவாகியுள்ள ஹதீஸொன்றில், 'ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து '(யாரஸூலுல்லாஹ்) உங்களிடம் ஹிஜ்ரா (அல்லாஹ்வின் திருப்தியை நாடி நாட்டைத் துறத்தல்) ஒப்பந்தம் செய்ய வந்துள்ளேன். (எனது இந்த எண்ணத்தின் காரணமாக) என்னுடைய தாய் தந்தையரை அழுத வண்ணம் விட்டு வந்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார். அப்போது, நபி (ஸல்) அவர்கள், அவர்களிடம் திரும்பச் சென்று அவர்கள் சிரித்து மகிழச் செய்வாயாக' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு நபிமொழியில் 'ஒருவர் ஏமன் நாட்டிலிருந்து ஹிஜ்ரத் செய்து நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அவரிடம் நபிகளார், ஏமனில் உமக்கு யாரேனும் உறவினர்கள் உண்டா?' என வினவ தமக்கு பெற்றோர் உள்ளனர் என அவர் பதிலளித்தார். அதனால் நபி (ஸல்) அவர்கள் மேலும் இவ்வாறு வினவினார்கள்.

'உமக்கு பெற்றோர் ஹிஜ்ரத் செய்ய அனுமதி தந்தார்களா? எனக் கேட்க அவர் 'இல்லை' என்றார். அப்படியாயின் நீர் திரும்பிச் சென்று அவர்களிடம் அனுமதி பெற்று வாரும். அவர்கள் அனுமதி அளித்தால் நீர் அறப்போரில் பங்கு கொள்ளலாம். இல்லை என்றால் அவர்களுடன் அன்பும் கருணையும் காட்டி வாஞ்சையுடன் நடந்து கொள்ளும்' என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள்

(ஆதாரம் அபூதாவூத்)

எனவே வயோதிபப் பெற்றோரைப் பராமரிப்பது அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது உள்ளிட்ட விடயங்களில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே நபிகளாரின் வழிகாட்டலாகும்.

தொகுப்பு: ஜத்து மைஸரா அப்துல் காதிர்...

# கொழும்பு ஹம்ஸா கல்லூரியில் ஆசிரியர் பாராட்டு விழா

கொழும்பு, ஹம்ஸா கல்லூரியின் 1987 ஆம் வருட தொகுதி பழைய மாணவ, மாணவிகள் இணைந்து ஆசிரியர் ஆசிரியைகளுக்கான பாராட்டு விழா, பிள்ளைகளுக்கான சாதனை விழா என்பன நாளை (08) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியின் லத்தீப் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கல்லூரி அதிபர் நளீவ் றபாய்டீன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிறிமியர் மெடிக்கல் சென்டர் அன்ட் லபோறறி சேர்விசஸின் உரிமையாளர் வைத்திய கலாநிதி றிஸ்வி சாலி பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

கனடாவில் உள்ள மிலோனாஸ் கிறிஸ் நிறுவனம் இதற்கு அனுசரணை வழங்கியுள்ளது.

## இலங்கை மத்திய...

நிலையானதாக மாறுமெனவும் ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார். தேசிய கடன் மறுசீரமைப்புக்கு உட்படுத்தும் நடவடிக்கை காரணமாக அரசுக்கு நிதியை பெற்றுக் கொள்ளும் அழுத்தம் பெருமளவு குறைந்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். அதன்படி வட்டியை தீர்மானிக்கும் போது நிச்சயமற்ற தன்மை மற்றும் அது தொடர்பான பயங்களும் வெகுவாக குறையும். இதனால் அரசுக்கு குறைந்த செலவில் நிதியத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பாடசாலையில் பிள்ளைகளை ...

தனது பெயரையும் கல்வி அமைச்சின் கடிதத் தலைப்பையும் பயன்படுத்தி போலியான ஆவணங்களைத் தயாரித்து வழங்கிய இவர், 29 பிள்ளைகளை பாடசாலையில் அனுமதித்துள்ளார். இதுகுறித்து, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலக்க முன்னர் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உடைகளுடன் 13 சடலங்களின்...

ஆரம்பமாகியது. இதன்போது நேற்று மாலை மேலும் பல எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் நேற்று ஆரம்பமான இவ்வகழ்வுப் பணியின் போது, முன்னதாக அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு அருகில் காணப்பட்ட பகுதிகள் தோண்டப்பட்டன.

அதே நேரம் பிளாஸ்ரிக் பொருள், வயர் உட்பட சில சான்றுப் பொருட்களும் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டன.

முதல் நாள் அகழ்வில் 13 எலும்புக் கூடுகள் காணப்பட்டதுடன், இன்னும் பல இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மேலதிக அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. எதிர்வரும் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் சகல திணைக்களங்கள் மற்றும் சட்டத்தரணிகளுடன் இடம் பெற உள்ள கலந்துரையாடலின் பின்னர், புதைகுழி தொடர்பான மேலதிக அகழ்வுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளன.

## வடக்கில் 80 வீதமான...

தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் மேலும் விளக்கமளித்த அமைச்சர் :

வடக்கில் அமையப் பெற்றுள்ள முகாம்கள் தொடர்பில் ஆராய்ந்து நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு, பாதுகாப்பு அமைச்சு விசேட குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டி காட்டினார். வடக்கில், இன மற்றும் மத பேதங்களுக்கு அப்பால் பொதுமக்கள் ஒன்றிணைந்து வாழ்கின்றனர். அதே சமயம் சில அடிப்படை வாத அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளுமே பிரிவினைகளை ஏற்படுத்த முற்படுகின்றனர்.

அதேபோன்று இந்து சமுத்திரத்தை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் சட்ட விரோத ஆட்கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்கு தேவையான திட்டங்களை இலங்கை கடற்படையினர் மிகவும் அர்ப்பணிப்புக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக பாரிய நிதி செலவிடப்படுகிறது.

அத்துடன் முப்படையை அரசியல் மையப்படுத்த ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. யுத்தத்திற்கு பின்னர் முப்படைகளை முறையாக ஒருங்கமைக்க தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றார். முப்படை வீரர்களையும் சிவில் பாதுகாப்பு படையினர் களையும் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்த இதற்கு பின்னர் ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரத்தைக் கொண்ட தேசிய மாணவர் படை அணியை வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மேலும் விஸ்திரிப்பதற்கு தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடகிழக்கு பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்புகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் என்றார்.

இதேவேளை அனர்த்த முகாமை செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவித்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர், 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் அனர்த்தங்கள் காரணமாக சுமார் 60 பில்லியன் ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன. இது பாரிய தொகையாகும். சில சந்தர்ப்பங்களில் அனர்த்தங்களை காரணம் காட்டி நிவாரணங்கள் பெறுவதில் பாரிய துஷ்பிரயோகங்கள் இடம் பெற்று வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளன. எனவே, எதிர்காலத்தில் இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்குத் தேவையான புதிய சுற்று நிரூபங்களை கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்

## டெங்கு நோயாளர்களின்...

சுட்டிக்காட்டியுள்ளது. நாடு முழுவதும் தற்போது மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருவதால், பொது மக்கள் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும். நாடு முழுவதிலுமுள்ள 43 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்தவகையில், கடந்த ஜனவரி முதல் ஜூலை (05) வரையான காலப்பகுதிக்குள் நாடு முழுவதும் 50ஆயிரத்து 264 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஹஜ் கடமைக்காக சென்ற ...

உறுதிப்படுத்தியுள்ளது. புனித ஹஜ் கடமைக்காக இலங்கையில் இருந்து சென்ற இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளனர். கொலன்னாவையைச் சேர்ந்த ஹாஜியானி ஒருவர் மாரடைப்பு காரணமாக மக்காவில் மரணித்துள்ளார். கொழும்பைச் சேர்ந்த ஹாஜி ஒருவர் மதீனாவில் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தொன்றின் போது மரணித்துள்ளார். குருணாகலை, பானகமுவ பகுதியைச் சேர்ந்த ஹாஜி ஒருவர் கடந்த வாரம் மாரடைப்பு காரணமாக மினாவில் உயிரிழந்துள்ளாரென்பதை திணைக்களம் உறுதி செய்துள்ளது. இந்த வருடம் இலங்கையிலிருந்து சுமார் 3,500 பேர் ஹஜ் கடமைக்காக சென்றனர்.

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலம்...

மேலும் பல திருத்தங்கள் சேர்க்கப்பட்டன. இதற்கான குழுநிலையை எதிர்வரும் (19) முன்னெடுப்பதற்கு நேற்றைய தினம் தீர்மானிக்கப்பட்டது. இச்சட்டமூலத்தை எதிர்வரும் (19) நிறைவேற்றுவதற்கு சபையில் நேற்று தீர்மானிக்கப்பட்ட போதும்,

நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் இணக்கப்பாட்டுக்கிணங்க நேற்று அந்த சட்ட மூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது. எனினும், இதற்கான திருத்தங்கள் எதிர்வரும் (19) பாராளுமன்ற அமர்வில் குழுநிலை வேளையில், மேற்கொள்ளப்படுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதம் நடைபெற்றது. உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முதலாவது திருத்த யோசனையில் சட்ட வரைபின் 28 பக்கங்கள்,

திருத்தம் செய்யப்பட வேண்டும். அதே போல் இரண்டாவது திருத்த யோசனையிலும் பல விடயங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டுமென விவாதத்தின் இறுதியில் சபை முதல்வர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். சபை முதல்வரின் இந்த நிலைப்பாட்டை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர். இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல சட்டமூலத்தை நிறைவேற்றாமல் தொடர்ந்து இழுபறி நிலைக்கு அரசாங்கம் கொண்டு செல்வதாக குற்றம் சாட்டினார்.

ஆகவே, உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்றி அதன் பின்னர் திருத்தங்களை முன் வைக்கலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த சபாநாயகர், சபை முதல்வர் முன்வைத்த யோசனைக்கு சபை இணக்கமா என வினவினார். இதன்போது குறிப்பிட்ட சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதன் திருத்தங்களை எதிர்வரும் (19) குழுநிலையில் திருத்தங்களை மேற்கொள்வோம் என்றார். இதற்கு எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து, உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

## குருநாகல் தம்புள்ளை வீதி...

லொறியொன்று மோதியதி இவ்விபத்து நிகழ்ந்தது.இதில்,தம்பதிகள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக தொரடியாவ பொலிஸார் தெரிவித்தனர். அமில புஷ்பசிறி (34) மற்றும் அவரது மனைவி சத்துரராணி குமாரி (33) ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை (06) மாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகல் கட்டுவன மஹிந்த கல்லூரியில் கல்வி கற்கும் தமது மகளை அழைத்துச் செல்வதற்காகச் சென்றபோதே, தம்பதியினர் இந்த விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். அதிவேகமாக வந்த லொறி ஒன்றே வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல், மோட்டார் சைக்கிளை மோதியதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## உதயநிதியுடன் ஆளுநர் ...

இருதரப்பு உறவு பல நூற்றாண்டுகளாகத் தொடர்வதாகவும், தமிழ்நாட்டின் ஆதரவு இலங்கை மக்களால் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்பட்டு வருவதாகவும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

## பலஸ்தீன அகதி முகாம்கள்...

தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பலஸ்தீனில் அகதி முகாம்கள் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன. இஸ்ரேல் இராணுவத்தினர் அங்குள்ள அகதி முகாம்களில் மேற்கொண்ட தாக்குதலில் 12பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நடவடிக்கையை எதிர்த்து பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இலங்கையிலுள்ள இஸ்ரேல் தூதுவர், வெளிவிவகார அமைச்சரை சந்தித்திருக்கின்றார். ஆகக்குறைந்தது எமது கண்டனத்தையாவது நாம் தெரிவிக்க வேண்டும். அரசாங்கத்தின் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும்.

## ஆகஸ்ட் 01 ஆம் திகதியை...

ஒகஸ்ட் 2021 இல் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS) முன்மொழியப்பட்டதன் பிரகாரம் ஒகஸ்ட் (01) இலங்கை சிறுத்தைகள் தினமாக அறிவிக்கப்பட்டதென்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் வேளையில், நாட்டில் சூழல் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். விலங்கினங்களை பாதுகாக்கும் அதே வேளையில், சுற்றுச்சூழல் சுற்றுலா மூலம் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். ஒரு குறிப்பிட்ட நாளை தேசிய தினமாக பிரகடனப்படுத்தும் போது விசேட நடைமுறையொன்று கடைப்பிடிக்கப்படுகிறது.இதனால், இவ்விடயம் தொடர்பில் தாம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பதாக சபைத் தலைவர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

## ICC மகளிர் அணி தர ...

நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிராக நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், சமரி அதபத்து 03 போட்டிகளில் 02 சதங்களை அடித்து சாதனை படைத்துள்ளார்.

இந்த பிரகாசிப்புகளின் அடிப்படையில் இலங்கை மகளிர் கிரிக்கெட் தரவரிசையில் முதலிடம் பிடித்த, முதல் வீராங்கனை என்ற பெருமையையும் இவர் பெற்றுக்கொண்டார்.

## சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட...

தயாரிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமையவே ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் தயாரித்துள்ளதாக குறிப்பிடுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் ஆரம்பப் பணிகள் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை சமர்ப்பித்து அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையிலிருந்து, நான் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

கால மாற்றத்தைத் தொடர்ந்து மீண்டும் அந்தப் பணிகள் என்னிடம் வந்து சேர்ந்துள்ளன.

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு ஊழல் மோசடிகளே பிரதான காரணமென மக்கள் அழுத்தமாக வலியுறுத்தினர். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை இயற்ற அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியது. ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான நீதியான சமூக அமைப்பு உட்பட பல்வேறு தரப்பினரது ஆலோசனைக்கமையவே ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினர் . நீதிமன்றம் பல திருத்தங்களை முன்வைத்துள்ளது.மறுபுறம் டிரான்ஸ்பேரன்ஷி நிறுவனம் உட்பட எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைகளை சட்டமூலத்தில் உள்வாங்கியுள்ளோம்.இதற்கமைவாகவேதிருத்தசட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் பிற நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தால், அச்சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கும்,முறைகேடான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்குவதற்குமான அதிகாரம் ஸ்தாபிக்கப்படவுள்ள ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கும், நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட உள்ளது.இதற்கேற்ற வகையிலான விதிமுறைகளே சட்டமூல ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் கைதிகள் விடயத்தில்...

அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். பயங்கரவாத் தடைச்சட்டத்தை இல்லாது செய்ய வேண்டுமென கடந்த அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போது 19 பேர் இந்தச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இதுவே, அனைவரது கருத்தாகவும் உள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்தபோது, அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகிவிட்டன. ஏனைய நாடுகளில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர்.


# இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

LAKE HOUSE தினகரன் தினகரன் வாரமஞ்சரி

### திறந்த கட்டுரைப் போட்டி

**தொனிப் பொருள்**

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

**பரிசுத் தொகை**

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

**கட்டுரையின் வடிவம்**

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீ தியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk

முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஜூலை 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.


## பயங்கரவாத தடைச்...

சட்டத்திலிருந்து குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதும் தவறானதே என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்விரு முறைமையும் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் மாத்திரம் ஊழல் மோசடிகளை ஒழிக்க முடியாதென குறிப்பிட்ட அவர், இதற்கு நாட்டு மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டம் மூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், இலஞ்சம் கொடுப்பதும் இலஞ்சம் வாங்குவதும் குற்றம் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சட்டம் இயற்றிய பின்னர் ஓரிரு இரவில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.சிறந்த மாற்றத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினர் கடந்த காலங்களில் யோசனைகளை முன்வைத்துள்ளனர்.

குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களின் உளவியல் நிலை பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் இந்த புதிய சட்டமூலத்துக்கு அமைய சாட்சியாளர்கள் மற்றும் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

விசேட சட்ட நிபுணர்களின் வழிநடத்தலுக்கு அமையவே இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தலைமையிலான குழுவினால், 2004 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் ஒழிப்பு சாசனத்துக்கு அமைவாகவே இது, தயாரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமையவே ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதென விமர்சித்துக் கொண்டிருப்பதைவிட, சட்டமூலத்தை இயற்றுவது குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை கட்டம் கட்டமாக மாற்றியமைக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு தற்போது நிலைமை கட்டம் கட்டமாக மாற்றமடைந்துள்ளமை சிறந்ததாகும்.

நல்லாட்சி அரசாங்கம் அரசியல் காரணங்களை முன்னிலைப்படுத்தி பலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி விசேட நீதிமன்றங்கள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், இறுதியில் எந்த குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. ஆளும் தரப்பினர் எதிர்த்தரப்பினரை திருடன் என்பதும் எதிர் தரப்பினர் ஆளும் தரப்பினரை திருடன் என்று விமர்சிப்பதும் வழமையாகியுள்ளது.

இலங்கையின் ஊழல் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகிறது. எனவே,விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருக்காமல் சட்டத்தை இயற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தகவல் வழங்குநர் என குறிப்பிட்டுக் கொண்டு வியாபாரம் செய்பவர்கள் உள்ளார்கள். ஆகவே தகவல் வழங்குநர் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.உறுதியான தகவல்களுடன் ஊழல் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்களை தகவல் வழங்குநர்கள் முன்வைக்க வேண்டும்.

சகலரும் திருடன் என்று குறிப்பிடுவது உண்மையான திருடனின் பாதுகாப்பு கவசமாக காணப்படுகிறது.ஆகவே திருடர்களை பாதுகாக்கும் சூழலை மக்கள் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டுத் தூதுவர்கள்...

ஊக்குவிப்பு பணியகம் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் சுதந்திரம் மற்றும் இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், இந்த எல்ல ஒடிஸி சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது. சர்வதேச சமூகத்துடனான இலங்கையின் நீடித்த உறவை இது மேலும் பிரதிபலிக்கிறது.

அழகிய மலைநாட்டைக் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயணம் ஜூலை 01 முதல் 03 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காலனித்துவ காலத்தை நினைவுகூரும் விசேட ரயிலான வைஸ்ரொயிஸ் விசேட ரயிலில் ( Viceroy Special ) தூதுக் குழுவினர் பயணம் செய்தனர்.இராஜதந்திரக் குழுவினர் கண்டியில் இருந்து நுவரெலியா வரை குளிர் மலைப்பகுதிக்கு பயணித்ததோடு, இலங்கையின் அழகையும் விருந்தோம்பலையும் அனுபவித்தனர். பல்வகைமை நிறைந்த நக்கிள்ஸ் மலைத்தொடர், இலங்கையின் உயரமான ரயில் நிலையமான பட்டிபொல, மற்றும் மூடுபனியுடனான மலைகளிடையே மறைந்திருக்கும் புதுமைகளையும் கண்டுகளித்தவாறு சென்றனர்.ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட ரயில் சமிக்ஞை செயல்முறை, நாட்டின் ரயில்சேவையில் இன்னும் பின்பற்றப்படும் சமிக்ஞை டெப்லெட் முறையைப் பார்க்கும் வாய்ப்பும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், இந்த ரயில் பாதையில் பயணிக்கும் போது காணக்கூடிய 20 ஆம் நூற்றாண்டின் அற்புதமான நிர்மாணமான எல்ல ஒன்பது வளைவுகள் பாலம் மற்றும் தெமோதர புகையிரத வளைவு ஆகியவற்றை வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. காலனித்துவ வரலாற்றிலும் பெருமையிலும் ஊறிப்போன தேசிய மரபுரிமைச் சின்னமான நுவரெலிய கிராண்ட் ஹோட்டலுக்கும் இவர்கள் சென்றனர். வெளிநாட்டவர்களிடையே பிரபலமான இலங்கை விருந்தோம்பலை அனுபவிக்கவும், பேத்ரோ தேயிலை தோட்டத்தில் உலகப் புகழ்பெற்ற "சிலோன் டீ" தேநீரை சுவைக்கவும் இவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நுவரெலியா ஜனாதிபதி இல்லத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்பும் இத்தூதுவர்களுக்குக் கிடைத்தது.

இந்த விசேட சுற்றுப் பயணத்துக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் என்பன அனுசரணை வழங்கியிருந்தன.

# INVITATION FOR BIDS (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

01. The Chairman, Local Authority, Procurement Committee (LAPC)on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Renovation of Skanthapuram Library at Karachchi Pradeshiya Sabha, Kilinochchi** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Without VAT) (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/ COU/001/2023 | Renovation of Skanthapuram Library, Karachchi Pradeshiya Sabha, Kilinochchi | 6.74 | C8, C7 and C6 (Building) | 90 Days |

02. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure and Public Finance Circulars No. 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Building Construction** for grades mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

04. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

05. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi**, (T.P No: 0212285761, Fax No: 021285690) and inspect the bidding documents at the address given below from **07th July 2023 until 20th July 2023 from 09:00 Hrs to 14:00 Hrs** on normal working days.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi from 07th July 2023 until 20th July 2023 from 09:00 Hrs to 14:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs. 2,000.00).** The method of payment will be by cash.

07. Bids shall be delivered in duplicate to the address below at **Secretary, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** at or before **14.00 Hrs on 20th July 2023.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.


08. Bids shall be valid up to **21st September, 2023** (77 days). All bids shall be accompanied by a Bid-Security of Rs.68,000.00. Bid Security shall be valid up to **19th October, 2023.**

09. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **17th July 2023 at Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**Chairman,**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Kilinochchi.**
07.07.2023

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



101 சொகுசு வாகனங்கள் விற்பனைக்கு

CAX-7111 BMW, 2016, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 041352

113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

KK-3355 Suzuki Swift, 2014, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 041355

**Repeat Your ad For Better Offers**

## சனாதிபதி அலுவலகம்

### உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறி முறையின் இடைக்கால செயலகம்

# வெற்றிடங்கள்

சனாதிபதி அலுவலகத்தின் கீழ் அமைச்சரவைத் தீர்மானத்தினால் தாபிக்கப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்திலுள்ள வெற்றிடங்களுக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடங்கள் பற்றிய விபரங்களுக்கு www.presidentsoffice.gov.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.**

**சனாதிபதி அலுவலகம்,**
**காலி முகத்திடல்,**
**கொழும்பு-01.**

# பிரசித்த ஏல விற்பனை

02ம், 03ம் நவம்பர் 2022, 03ம், 04ம் ஜனவரி 2023, 01ம், 02ம் மார்ச் 2023, 03ம், 04ம் ஏப்ரல் 2023, 03ம், 04ம் மே 2023, 01ம், 02ம் ஜீன் 2023 இல் "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கணேமுல்ல, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய, சிலாபம், கொச்சிக்கடை-நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மீனுவங்கொட, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, மாவனல்ல, கல்பிட்டிய, கெக்கிரவா, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, தம்புள்ள, கந்தலை | 25 ஜீலை 2023 |
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, இரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை,தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான,நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை, பதுளை நகர கிளை, அம்பலாந்தோட்டை | 26 ஜீலை 2023 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, பண்டாரவளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா. | 27 ஜீலை 2023 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம, மஹரகம நகர கிளை, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, ஜம்பெட்டா, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிராண்ட்பாஸ், கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, அடிமை தீவு, கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03, தலைமை அலுவலகம் கொழும்பு 07 | 28 ஜீலை 2023 |
| செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிச்சோலை, ஆரயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாணநகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டைஎ, சங்கானை, ஏறாவூர், வாகரை, மத்தியமுகாம், சேருநுவர, கிரண், கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, திருக்கோவில், திருகோணமலை நகர கிளை, பேசாலை, தெல்லிப்பளை. | 29 ஜீலை 2023 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. .'.பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

**LB FINANCE**
உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# மக்கள் வங்கி

## கொட்டாவ கிளை

**1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்.**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 29D பிரிவின் கீழ், 2023.05.31ஆம் திகதி நடைபெற்ற மக்கள் வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. **திருமதி பூர்ணிமா ஷசி பிரபா ஹல்பவத்தகே**
2. **திரு. கம்மான விதானேலாகே சமிந்த விஷ்வஜித் பெரேரா**
3. **திருமதி. பெரியப்பெரும ஆச்சிகே சீலவதி அல்விஸ் பெரேரா (ஆயுள் அக்கறை கொண்டவர்)**

மக்கள் வங்கி சார்பில் 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவு (பிரிவு 43) சட்டத்திற்கு ஏற்ப பிரசித்த நொத்தாரிசும் மற்றும் சட்டத்தரணியுமான திருமதி W.A.R.S. அபேரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.10.26ஆம் திகதியிடப்பட்ட 0029671 இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் ஈட்டு முறி மற்றும் பிரசித்த நொத்தாரிசும் மற்றும் சட்டத்தரணியுமான திருமதி K.D.I. சேனாரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.06.24 ஆம் திகதியிடப்பட்ட 0029671 இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் ஈட்டு முறி மீது வருமதியான கொடுப்பனவில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் தவணை தவறியுள்ளனர்.

அத்தோடு சொல்லப்பட்ட ஈட்டு முறிகள் மீது பதினான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய் தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ.1,425,045.92) தொகை மற்றும் இருபத்தொரு இலட்சத்து எண்பதாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு ரூபாய் பன்னிரண்டு சதம் (ரூ. 2,180,886.12) தொகை மற்றும் பதிமூன்று இலட்சத்து முப்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது ரூபாய் எழுபத்து மூன்று சதம் (ரூ. 1,331,239.73) தொகை மற்றும் பதிநான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து இருநூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் நாற்பது சதம் (ரூ. 1,453,294.40) தொகை என்பன மக்கள் வங்கிக்கு தற்போது வருமதியாகவும் மற்றும் சேர வேண்டியதாகவும் உள்ளன.

பதினான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய் தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ.1,425,045.92) மற்றும் 2022.11.18ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் வழங்குதல் வீதம் +6.5 % சதவீதத்தில் பதினொரு இலட்சம் (1,100,000.00) தொகை மீதான மேலதிக வட்டி மற்றும் இருபத்தொரு இலட்சத்து எண்பதாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு ரூபாய் பன்னிரண்டு சதம் (ரூ. 2,180,886.12) தொகை மற்றும் 2022.11.18ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் வழங்குதல் வீதம் +6.5 % சதவீதத்தில் பதினாறு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து முந்நூற்று முப்பது ரூபாய் இரண்டு சதம் (1,665,330.02) தொகை மீதான மேலதிக வட்டியையும் மற்றும் பதிமூன்று இலட்சத்து முப்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது ரூபாய் எழுபத்து மூன்று சதம் (ரூ.1,331,239.73) தொகை மற்றும் 2022.11.18ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் வழங்குதல் வீதம் +6.5 % சதவீதத்தில் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது ரூபாய் முப்பத்தெட்டு சதம் (998,879.38) தொகை மீதான மேலதிக வட்டியையும் மற்றும் பதிநான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து இருநூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் நாற்பது சதம் (ரூ. 1,453,294.40) தொகை 2022.11.18ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் வழங்குதல் வீதம் +6.5 % சதவீதத்தில் பதிமூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து இருநூறு ரூபாய் (1,322,200.00) தொகை மீதான விற்பனைத் திகதி வரை மேலதிக வட்டியையும், விற்பனைக் கிரயம் மற்றும் சொல்லப்பட்ட மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29L இன் கீழ் மீட்டுக் கொள்ளப்படக்கூடிய தொகையையும் கொடுப்பனவுகள் (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 2018.10.26 ஆம் திகதியிடப்பட்ட 0029671 இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் ஈட்டு முறி மற்றும் 2020.06.24 ஆம் திகதியிடப்பட்ட 0029671 இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் ஈட்டு முறி என்பவற்றினால் மேற்படி வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகளை கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் திரு. பிரேமசிரி வடுகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**ஈடு வைக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகளின் விபரம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில், இல. 587B- மத்தேகொட மத்தி கிராம சேவகர் பிரிவில், மத்தேகொட என்ற கிராமத்தில் அமைந்துள்ள அதனகத்தேயுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கி நில அளவை தலைமை அதிபதியால் அளந்து தயாரிக்கப்பட்ட 520008 ஆம் இலக்கத்தைக் கொண்ட நிலஅளவை வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு 28 ஆம் வலயத்தில் துண்டம் 0042 என அடையாளமிடப்பட்ட காணி பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஐந்து பூச்சியம் ஹெக்டெயார்கள் (0.0350 ஹெக்டெயர்கள்) விஸ்தீரணத்தைக் கொண்டு ஹோமாகம காணிப்பதிவகத்தில் 0029671 பிரிவு/இருமடியிலக்க உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**கையொப்பம்**
**பிராந்திய முகாமையாளர்**
**(கொழும்பு வெளிப்பிராந்தியம்)**

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் (கொழும்பு வெளிப்பிராந்தியம்)**
**இல: 177A, ஹய்லெவல் வீதி,**
**நுகேகொட**

PEOPLE'S BANK

**The Housewives' companion Classifieds on Daily News**

# இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி

## (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்.**

### விற்பனை அறிவிப்பு

கடன் இலக்கம் : **101730000016 மற்றும் 101521000106**
கடனாளியின் முழுப் பெயர் : **பொது முகாமையாளர்: அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் (SD&CC)**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.05.19ஆம் திகதி 2333ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2023.05.19ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2023.07.26ஆம் திகதி பி.ப. 03.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி, தலைமைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

04.06.2019ஆம் திகதி 2087ஆம் இலக்கத்தைக் கொண்ட அடகுப்பத்திரத்தின் படி **ஆறு கோடி அறுபத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நூற்று அறுபத்து எட்டு ரூபா தொன்னூற்று மூன்று சதம் (66,962,168.93) 2023.03.31** ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**01. முதலாவது கடன் தொகை 101730000016**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான மூன்று கோடி எழுபத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஆறு ரூபா இருபத்து நான்கு சதம் (37,937,696.24) மற்றும் 2023.03.31 ஆம் திகதி வரை நிலுவைக்கான வட்டியாக இரண்டு கோடி மூன்று இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு ரூபா தொன்னூற்று இரண்டு சதத்திற்கான (ரூபா 20,361,624.92) வட்டியுடன் இதன்படி முழுத் தொகையான ஐந்து கோடி எண்பத்து இரண்டு இலட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து முந்நூற்று இருபத்து ஒரு ரூபா பதினாறு சதத்தையும் (ரூபா 58,299,321.16)

**இரண்டாவது கடன் தொகை 101521000106**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான ரூபா இருபத்து ஐந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஒரு ரூபா ஐந்து சதம் (ரூபா. 2,583,501.05) மற்றும் 2023.03.31 ஆம் திகதி வரை நிலுவைக்கான வட்டியாக அறுபது இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்து ஆறு ரூபா எழுபத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 6,079,346.72) இதன்படி முழுத் தொகையான எண்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஏழு ரூபா எழுபத்து ஏழு சதத்தினையும் (ரூபா 8,662,847.77) இதன்படி இரண்டு கடன்களின்

கூட்டுத் தொகையாக ஆறு கோடி அறுபத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நூற்று அறுபத்து எட்டு ரூபா தொன்னூற்று மூன்று (ரூபா 66,962,168.93) சதத்தினையும்

(02) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான மூன்று கோடி எழுபத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஆறு ரூபா இருபத்து நான்கு (37,937,696.24) சதத்திற்காக அறவிட வேண்டிய 20.00% வீத வருடாந்த வட்டியினையும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இருபத்து ஐந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்த ஐந்நூற்று ஒரு ரூபா ஐந்து (ரூபா. 2,583,501.05) சதத்திற்காக அறவிட வேண்டிய 9.89% வீத வருடாந்த வட்டியினையும், 2023.04.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏளத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,

(03) 2023.04.01 ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட கடனின் மொத்த நிலுவைத் தொகையான இரண்டு கோடி முப்பத்து ஆறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐந்நூற்று இரண்டு ரூபா நாற்பத்து ஐந்து (ரூபா 23,624,502.45) சதத்திற்காக மாதாந்தம் 2.00% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

(04) 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் **2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி** நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கடன் இலக்கம்: 101730000016 மற்றும் 101521000106**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், களனி பிரதேசசபை எல்லையில், பேலியகொட நகரசபை எல்லையில், இலக்கம். 174 கிராமசேவகர் பிரிவில் கங்கபட 6மற்றும் 7ஆம் இலக்க பிரிவில் பராக்கிரம மாவத்தையில் பேலியகொடையில், வரிமதிப்பீட்டிலக்கம் 322,322/1,322/3 ல், அமைந்துள்ள காணிக்கு 18.11.2006ஆம் திகதி, நில அளவையாளர் நாயகதத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட PP GAM 3554 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி

**1ஆம் இலக்க கணித்துண்டின் எல்லைகளாக:**

வடக்கே பராக்கிரம மாவத்தை மற்றும் PP GAM 3399 ஆம் இலக்க காணிவரைபடத்தின் 116 ஆம் இலக்க காணித்துண்டும் கிழக்கே PP GAM 3399ஆம் இலக்க காணிவரைபடத்தின் 117ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் வரிமதிப்பீட்டிலக்கம் 322/7 உடைய காணியும் மற்றும் அரசுக்கு சொந்தமான நீர்கொழும்பு பாதையும். தெற்கே களனி கங்கையும் மேற்கே பராக்கிரம பாதையில் எச்.பி. சத்தாதிஸ்ஸ கல்தேரா என்பவருக்கு சொந்தமான காணியும் (வரிமதிப்பீட்டிலக்கம் தெரியவில்லை)அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பூச்சியம் தசம் ஒன்று இரண்டு மூன்று மூன்று ஹெக்டயர்களாகும். (0.1233) ஆகும். இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக PP GAM 3554 ஆம் இலக்க காணிவரைபடத்தின் கொழும்பு காணிப்பதிவு காரியாலயத்தில் பாகம் G263/09 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக:**

வடக்கே PP GAM 3399 ஆம் இலக்க காணிவரைபடத்தின் 119, 120ஆம் இலக்க காணித்துண்டுகளும் கிழக்கே PP GAM 3399 ஆம் இலக்க காணிவரைபடத்தின் 122ஆம் இலக்க காணித்துண்டும், வரிமதிப்பீட்டிலக்கம் 202 கண்டி வீதி டாக்டர் பதீர் என்பவருக்கு சொந்தமான காணியும் தெற்கே களனி கங்கையும் மேற்கே கண்டி வீதியில் அமைந்துள்ள காணியும் (இதன் வரிமதிப்பீட்டிலக்கமோ அல்லது இதன் உரிமையாளரோ தெரியவில்லை) மற்றும் PP GAM 3399 ஆம் இலக்க காணிவரைபடத்தின் 119ஆம் இலக்க காணித்துண்டும்,அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பூச்சியம் தசம் பூச்சியம் ஏழு ஏழு இரண்டு ஹெக்டயர்களாகும். (0.0772) ஆகும். PP GAM 3554 ஆம் இலக்க காணிவரைபடத்தின் இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக கொழும்பு காணிப்பதிவு காரியாலயத்தில் பாகம் G263/10

என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொதுமுகாமையாளர்**
**திகதி 04.07.2023**

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி**
**சேர். சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு -02**

## தேசிய லொத்தர் சபை

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.07.05
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத்** — சீட்டிழுப்பு இலக்கம் 5166 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 3 3 8 7 0 3

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1196 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,105,200.80
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 02 15 57 67

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1514 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,000,000.00
ஆங்கில எழுத்து P — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 28 38 44 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1621 — லக்கி 7 சூப்பர் பரிசு 2023.07.14 அன்று எடுக்கப்படும் ரூ. 13,251,889.52
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 8 0 6 6 0 0

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3408 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,014,888.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 33 50 76 77

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 475 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,618,204.20
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 21 34 35 48 — விசேட இலக்கினம் மேஷம்

# தினகரன், தினமின, டெயிலிநியூஸ் இணையத்தளம் புதுப்பிக்கப்பட்டு நேற்று அங்குரார்ப்பணம்



லேக்ஹவுஸ் வெளியீடுகளான தினகரன், தினமின, டெயிலிநியூஸ் பத்திரிகைகளின் இணையத்தளங்கள் மீள புதுப்பிக்கப்பட்டு நேற்று லேக்ஹவுஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திரி காரியவசம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நிகழ்வில் நீதிப் பணிப்பாளர் ஜனக்க ரணதுங்க,செயற்பாட்டுப் பணிப்பாளர் மஞ்சுல மாகும்புர, ஆசிரிய பீடப்பணிப்பாளர் சிசிர பரணதந்திரி,தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், தினமின பத்திரிகை ஆசிரியர், சிலுமின பத்திரிகை ஆசிரியர், டெயிலிநியூஸ் பத்திரிகை ஆசிரியர் மற்றும் ஏனைய அதிதிகளும்,ஊழியர்களும் கலந்து கொண்டனர். படங்கள் சுலோச்சன கமகே

## நுவரெலியாவில்

# 23 மது விற்பனை நிலையங்களை அமைக்கும் அனுமதியை நிராகரிக்கவும்



நுவரெலியாவில் மேலும் 23 மது விற்பனை நிலையங்களை அமைக்க அனுமதி கோரி அதற்கான விண்ணப்பங்களை மதுவரி திணைக்களம் மற்றும் கலால் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.இவ் விண்ணப்பங்களை நிராகரிப்பதுடன், நகரில் புதிய மது விற்பனை நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்க கூடாது என 'இலங்கை சமூக நடவடிக்கை மாற்றம்' எனும் அமைப்பு மற்றும் சர்வமத குருமார்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா மாநகரில் சட்டப் பூர்வ அனுமதி பெற்று இயங்கும் மது விற்பனை நிலையங்களுக்கு அப்பால் நகரில் பல இடங்களில் அனுமதி இன்றி மது விற்பனை நிலையங்கள் இயங்குகிறது இவைகளை கண்டறிந்து தடை செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் 'இலங்கை சமூக நடவடிக்கை மாற்றம்' எனும் அமைப்பு தலைமையில் நுவரெலியா கூட்டுறவு சங்க விடுதியில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை இவ் அமைப்பு நேற்று முன்தினம் மாலை நடத்தியது.

இதன்போது தமது கருத்துக்களை தெரிவித்த சர்வ மத குருமார்கள் நுவரெலியா உல்லாச நகரம் என்பதனால் அதிகமான மதுபான கடைகளை அமைத்து நகருக்கு வருபவர்களை மது அடிமைகளாக்க இடமளிக்க முடியாது. அதேநேரத்தில் நுவரெலியாவில் இளம் சமூகத்தினர் பலர் மதுவுக்கு அடிமையாகி சமூக சீர்கேட்டு நடவடிக்கைகளில் ஈடுப்படுவதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அதேபோல குடும்பஸ்தர் பலர் மதுவுக்கு அடிமையாகி தாம் உழைக்கும் பணத்தை மதுவுக்கு செலவு செய்து வருவதால் குடும்ப வாழ்க்கையில் பிணக்குகள் ஏற்பட்டு நிம்மதி இழந்து சண்டை சச்சரவு என்று பொலிஸ், நீதிமன்றமென அலைகின்றதுடன் நோய்களுக்கும் ஆளாகி விடுகின்றனர்.

எனவே நுவரெலியா நகரம் மட்டுமன்றி தோட்டப்பகுதிகளை உள்ளடக்கிய நகரங்களிலும் அளவுக்கு அதிகமான மது விற்பனை நிலையங்கள் அதிகரிக்கிறது.இவைகளை அமைக்க இடம் கொடுக்காது சர்வ மத குருக்கள் மற்றும் அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க இளைஞர்கள் , கல்விமான்கள்,சமூக மாற்ற சிந்தனையாளர்கள் கைகோர்க்க வேண்டும். அதேநேரத்தில் பாடசாலைகள்,மத வழிபாட்டு தளங்கள் காணப்படும் பகுதிகளில் அமைந்துள்ள மது நிலையங்களின் தூரத்தை கணக்கிடட்டு அவை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்தால் நடவடிக்கைகளை மேற்கொண்டு அகற்ற அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

ஆ.ரமேஸ்



குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மின்னியல் டிஜிட்டல் தொழில்நுட்ப ஸ்மாட் வகுப்பறை திறந்து வைப்பு நிகழ்வும் மற்றும் எட்டு மாத காலத்திற்கான பகல் போசண உணவு வழங்கி வைக்கும் நிகழ்வும் ஐயமிட்டுண் என்ற தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் பாடசாலை அதிபர் எஸ்.சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம அதிதியாகக் ஐயமிட்டுண் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் சமூகஜோதி ஞானதீபம் செல்வராசா முரளிதரன், மத்திய மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் துரை மதியுகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை; கூலித்தொழிலாளர்களுக்கு நிவாரணம் தேவை

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை மாற்றத்தினால் அன்றாடம் கூலித் தொழில் செய்யும் மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கடும் காற்று மற்றும் தொடர்ச்சியாக மழையும் பெய்து வருகிறது.

இதன் காரணமாக நாளுக்கு நாள் இம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகிறது.இந்த நிலையில் குடும்ப வருமானத்திற்காக நாளாந்தம் உழைத்து வாழும் மக்கள் தொழிலுக்கு செல்ல முடியாது சொல்லொணா துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நுவரெலியா,தலவாக்கலை,அக்கரப்பத்தனை,நானுஓயா,கந்தப்பளை, மீப்பிளிமான,அம்புகளை,பட்டிப்பொல,இராகலை உள்ளிட்ட பல பிரதேசங்களில் வசிக்கும் வறுமைக்குள்ளான மக்கள் மரக்கறி விவசாய தோட்டங்களின் தொழிலை நம்பியே வாழ்கின்றனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக முற்றாக பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழில் நடவடிக்கைகளினால் பெரும்பாலானோர் தமது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.


அதேபோல பெருந்தோட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

கடும் காற்று மற்றும் பலத்த மழை காரணமாக மரம் முறிவு,மண்சரிவு, கடும் குளிர்,போக்குவரத்து பாதிப்பு,மின்சார தடை, அனர்த்தங்கள் போன்ற விடயங்களில் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ள இம் மக்களும் தொழில் இழந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் வாழ்வாதார பாதிப்புக்களை இக்கால சூழ்நிலையில் எதிர்கொள்ளும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஆ.ரமேஸ்

# யெகோவாவின் சாட்சிகளின் மாநாடுகள் இலங்கையில்



2019 இற்குப் பிறகு இலங்கையில் முதன்முறையாக ஏழு பெரிய மாநாடுகளை யெகோவாவின் சாட்சிகள் நேரடியாக நடத்துகிறார்கள்.

உலகம் முழுவதும் உள்ள யெகோவாவின் சாட்சிகள் சுமார் நூறு வருடங்களுக்கும் மேலாக விளையாட்டரங்குகளிலும் மண்டபங்களிலும் திரையரங்குகளிலும் மாநாடுகளை நடத்தி வருகின்றார்கள். இருந்தாலும் 2020ல் பரவிய கொவிட்19 பெருந்தொற்று காரணமாக நேரடியாக நடத்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பின்பு 2022ல் சிறிய அளவிலான கூட்டங்களும் வீட்டுக்கு வீடு ஊழியமும் மறுபடியும் நேரடியாக ஆரம்பிக்கப்பட்டன. ஆகவே பெருந்தொற்றுக்கு பின்னர் இந்த வருடம் முதல் முறையாக உலகம் முழுவதும் பிரமாண்டமான அளவில் மாநாடுகளை நேரில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"பொறுமையோடு இருங்கள்"! என்ற தலைப்பிலான சுமார் 6000 மாநாடுகள் உலகின் பல பாகங்களில் நடைபெறும். இலங்கையில் மொத்தமாக ஏழு மாநாடுகள் நடைபெற உள்ளன. இந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களில் ஆறு பாகங்களாக இடம்பெறும். இவை ஒவ்வொன்றும் பொறுமை என்ற குணத்தைப் பற்றியும், இன்று எம் வாழ்வில் அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப்பற்றியும் நடைமுறையான ஆலோசனைகள் பைபிளில் இருந்து வழங்கப்படும். சனிக்கிழமை காலை நிகழ்ச்சியின் முடிவில் முழுக்காட்டுதல் இடம்பெறும். அத்துடன் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட இரண்டு பாகங்களை கொண்ட ஒரு வீடியோ நாடகம், சனி மற்றும் ஞாயிறு மாலை நிகழ்ச்சிகளில் காண்பிக்கப்படும்.

இம்மாநாட்டில் அனைவரும் கலந்துகொள்ளலாம். அனுமதி முற்றிலும் இலவசம். இந்நிகழ்ச்சி பற்றி மேலதிக தகவல்களையும், வேறு எங்கே எப்போது இம்மாநாடு நடைபெறும் என்பதையும் அறிந்து கொள்ள, jw.org வெப்சைட்டில் "எங்களைப் பற்றி " என்ற பகுதியில் பாருங்கள்.



பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூப் புக்ரி கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.நிகழ்வில் பாகிஸ்தான் நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்ஸல் அஹமட் மரைக்கார் உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், கண்டி மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

# பாகிஸ்தானில் அதிகரிக்கும் பயங்கரவாதத் தாக்குதல்கள்

## பத்து தினங்களில் ஆறு பாதுகாப்பு படையினர் பலி

பலூசிஸ்தானில் வாகன ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் வீரர்கள் மீது மறைந்திருந்த பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு வீரர்கள் மரணமடைந்ததாக இராணுவ தகவலை ஆதாரம் காட்டி கடந்த மூன்றாம் திகதி ஏஆர்வை செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது. இச் சம்பவத்தில் ஒரு வீரர் காயமடைந்தார்.

கடந்த சில மாதங்களாக பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து வருவதாகவும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டில் பயங்கரவாதத் தாக்குதல்கள் 27 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாகவும் பாக். சமாதான கற்கை நிலைய அறிக்கையை மேற்கோள் காட்டி ஜியோ நியுஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி, தேரர், ஸ்மாயில்கான் பகுதியில் நடைபெற்ற மோதலில் மூன்று பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டன. இப்பகுதியில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு இவர்களே காரணம் என்று இராணுவத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது.



அகில இலங்கை புத்தசாசன பாதுகாப்பு சபையினால் அண்மையில் 'சாசன கீர்த்தி ஸ்ரீலங்கா புத்ர' விருது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்ட பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமாரவை, பேருவளை பொலிஸ் நிலைய பொலிஸ் பொது மக்கள் பிரிவு ஆலோசனை சபை ஆலோசகர் இக்பால் சம்சுதீன் நேற்று (06) சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தபோது எடுத்த படம்.



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே கொடுக்கப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.**

உலகில் நிமிடத்திற்கு நிமிடம் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. இவற்றை நாம் பல ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். அத்தகைய ஊடகங்களில் செய்திப் பத்திரிகையும் ஒன்றாகும். செய்திப் பத்திரிகைகள் நமது அறிவை வளர்க்கத் துணை புரிகின்றன. தற்போதைய ஊடகங்களில் கணினி முக்கிய இடத்தை வகிக்கின்றது. உலக விடயங்களை மட்டுமல்ல எமக்கு தேவையான எந்தவொரு தகவலையும் நொடிப்பொழுதில் பெற்றுக் கொள்ள இது உறுதுணையாகின்றது.

1. தற்போதைய ஊடகங்களில் முக்கிய இடத்தை வகிப்பது எது?

……………………………………………………………………………

2. பத்திரிகையின் முக்கிய பயனாக பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது யாது?

……………………………………………………………………………

3. நொடிப்பொழுதில் பெற்றுக் கொள்ளல் என்ற தொடரின் கருத்து யாது?

……………………………………………………………………………

4. இப்பந்தியிலுள்ள காலப்பெயர் ஒன்றினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………

5. உலகில் என்பதன் ஒத்தகருத்து யாது?

……………………………………………………………………………

6. பந்தியிலுள்ள தன்மை பன்மை பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக.

……………………………………………………………………………

**II. வெற்றிடத்துக்கு பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

7. ஒலிம்பிக் போட்டியில் மூன்றாம் பரிசாக ………………………… பதக்கம் வழங்கப்படுகின்றது. (வெண்கலப் / வென்கலப்)

8. விஞ்ஞானிகள் ………………………… யில் ஈடுபட்டனர். (ஆராய்ச்சி / ஆரய்ச்சி)

9. இன்று பல ………………………………… வேலைக்கு வரவில்லை. (தொழிலாழர்கள் / தொழிலாளர்கள்)

**III. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

10. வேண்டும் / புத்திசாலித்தனம் / அறிவை / வேண்டுமென்றால் / வளர்த்துக் கொள்ள / வளர

……………………………………………………………………………

11. இரவில் / ஏழையாக / நன்றாக / வேண்டும் / இருந்தாலும் / உறங்க

……………………………………………………………………………

**IV. பின்வரும் சொற்றொடர்களின் கருத்தை எழுதுக.**

12. கண் மலர்தல் - ……………………………………………………

13. கண் வளர்தல் - ……………………………………………………

**V.**

14. பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களை எழுதுக.

i. கீரி - ………………………… ii. நாய் - …………………………

iii. கிளி - ………………………… iv. சிங்கம் - …………………………

15. பின்வரும் சொற் கூட்டங்களிலுள்ள வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக.

i. நூல், புத்தகம், கயிறு, பனுவல் ii. மதி, சந்திரன், நிலா, சூரியன்

16. பின்வரும் கூற்றுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

i. பாடல்களை இயற்றுபவர் ……………………………………………

ii. பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் ……………………………………

17. பொருத்தமான மரபுச் சொற்களைத் தெரிவு செய்து கோடிடுக.

i. குயில் கூவும் என்பது போல மயில் ……………………………………

ii. தென்னையின் இளங்காய் குரும்பை போல பனையின் இளங்காய் ……………

18. பின்வரும் சொற்களை பிரித்தெழுதுக.

i. தண்ணீர் - …………………………ii. கருங்குயில் - ……………………

19. பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கில சொல்லை எழுதுக.

i. வானம் - …………………………ii. சமையலறை - ……………………

iii. அதிபர் - …………………………iv. யானை - ……………………


20. பின்வரும் படங்களின் சிங்கள கருத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.






i. …………………………… ii. ……………………………

**VI.**

21. 


இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவில் என்ன பங்காகும்?

……………………………………………………

22. 


இவ்வுருவின் சுற்றளவு எத்தனை மீற்றர் ஆகும்?

……………………………………………………

23. 

மேலே ஜனிசா தன் வீட்டிலிருந்து விளையாட்டு மைதானத்திற்கு சென்ற பாதை காட்டப்பட்டுள்ளது. இதன்படி,

i. ஜனிசா அதிக தூரம் பயணித்தது எந்தத் திசையை நோக்கி?


……………………………………………………

ii. அவள் வடக்கு நோக்கி திரும்பிய தடவைகள் எத்தனை?

……………………………………………………

24. இரண்டு தூண்களுக்கிடைப்பட்ட தூரம் 2m எனில் 4 தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு?


……………………………………………………

25. 

இவ்வுருவிலுள்ள மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது?


……………………………………………………

26. 5 cm 3 mm ஐ mm இல் எழுதினால் ……………………………………

27. 


இக்கூட்டிலுள்ள எண்களில் 5ஆல் மிகுதியின்றி வகுபடக் கூடிய எண்களை தவிர்த்து மற்றைய எண்களை கூட்டினால் வரும் விடை யாது?

……………………………………………………

28. 

ரூபாய் 60.00



ரூபாய் 160.00

மூன்று பேனா வாங்கும் பணத்துக்கு எத்தனை பந்து வாங்கலாம்?

……………………………………………………

29. 8888 – 88 = ? ……………………………………………

**VII. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. குறித்த காலத்தில் மட்டும் பூக்கும் தாவரம்?
i. தென்னை ii. செவ்வரத்தை iii. ரோஜா

31. நத்தையின் உணவு யாது?
i. பூச்சிகள் ii. தாவர இலைகள் iii. வண்டுகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

32. சூழல் நேய பூச்சி நாசினி தயாரிக்கப் பயன்படுத்தும் வித்து?
i. பப்பாசி ii. வேம்பு iii. நாவல்

33. அரச இலட்சினையில் நெற்கதிர் குறிப்பது?
i. தன்னிறைவு ii. வீரம் iii. சௌபாக்கியம்

34. கடதாசியை மடித்து விரும்பியவாறு உருவங்கள் செய்யும் ஆக்கச் செயற்பாடு?
i. அல்பனா ii. ஒரிகாமி iii. கொலாஜ்

35. நீரில் கலக்கும் பொருளாக அமையாதது?
i. தேன் ii. பால் iii. தேங்காய் எண்ணெய்

36. போமலின் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவு யாது?
i. வாந்தி ii. உதடுகள் வீங்குதல் iii. காய்ச்சல்

37. தலதா மாளிகை அமைந்துள்ள இடம்?
i. கண்டி ii. மன்னார் iii. கொழும்பு

38. மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் அலகு?
i. mm ii. ml iii. cm

39. பூச்சாடியிலுள்ள பூக்கள் வாடாதிருக்க இடவேண்டியது?
i. குளோரின் ii. அஸ்பிரின் iii. பனடோல்

40. இயற்கை துறைமுகம் உள்ள மாகாணமானது?
i. திருகோணமலை ii. கொழும்பு iii. காலி

41. கடல் உணவிலிருந்து மாத்திரம் பெறக்கூடிய கனியுப்பு?
i. அயடின் ii. இரும்பு iii. கல்சியம்

42. ஒருவரோடு ஒருவர் தகவலைப் பரிமாறிக் கொள்வதற்கு அதிகம் பயன்படுவது?
i. கடிதம் ii. கணினி iii. தொலைபேசி

43. பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழிக்கும் பறவை?
i. கிளி ii. புறா iii. செண்பகம்

44. தேசப் படங்களில் புகையிரத பாதையை குறிக்கும் நிறமானது?
i. கறுப்பு ii. சிவப்பு iii. பச்சை

45. 
அருகில் காட்டப்பட்டுள்ள குறியீடு குறித்து நிற்பது?
i. மீள் சுழற்சி
ii. கட்டாய சுற்று வட்டம்
iii. முன்னால் வளைவு

46. சுவாசித்தலுக்கும், எரிதலுக்கும் உதவும் வாயு?
i. ஒட்சிசன் ii. ஐதரசன் iii. நைதரசன்

47. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்?
i. குமண ii. தெஹிவளை iii. பின்னவலை

48. இலங்கையில் அதிக சனத்தொகை கொண்ட மாவட்டம் எது?
i. கண்டி ii. கொழும்பு iii. யாழ்ப்பாணம்

49. உடல் வளர்ச்சிக்கு அவசியமான போசனைக்கூறு அடங்கியுள்ள உணவுப் பதார்த்தம்?
i. சோயா அவரை ii. கீரை iii. சோறு

50. இலையில் முட்களைக் கொண்ட தாவரமானது?
i. சதைக்கரைச்சான் ii. தூதுவளை iii. ரோசா

51. அனேக கால்களையுடைய பிராணி யாது?
i. நண்டு ii. அட்டை iii. மரவட்டை

52. 
இவ்வகை மின்காந்தமொன்றில் கவரும் ஆற்றலை அதிகரிக்க செய்ய வேண்டியது யாது?
i. மின்கலங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்
ii. பின்களின் எண்ணிக்கை அதிகரித்தல்
iii. செப்புக்கம்பியின் சுருள்களின் எண்ணிக்கையை குறைத்தல்

53. சூழல் நேயப் பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவம் அல்லாதது எது?
i. வேப்பிலைச்சாறு ii. பூண்டு அவித்த நீர்
iii. யூரியா கரைத்த நீர்

54. அசுத்தமான நீரைப் பருகுவதனால் ஏற்படாத நோய்?
i. கழிச்சல் ii. செங்கண்மாரி iii. நீரிழிவு

55. பொசன் பண்டிகை எவ் இனத்தவர்களால் கொண்டாடப்படுகின்றது?
i. தமிழர்கள் ii. பறங்கியர்கள் iii. பௌத்தர்கள்

56. மரவேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடமானது?
i. யாப்பகூவ ii. எம்பக்க iii. இசுறுமுனி

57. மின்குமிழை கண்டுபிடித்த பெருமைக்குரியவர் யார்?
i. தோமஸ் அல்வா எடிசன் ii. ஜோன் லொகி பெயார்ட்
iii. அலெக்சாண்டர் கிரகம்பெல்

58. பின்வருவனவற்றுள் ஓரிதழ் கொண்ட பூவானது?
i. ஓர்க்கிட் ii. அந்தூரியம் iii. போகன்விலா

59. நீர் மிகக் குறைவாக தேவைப்படும் தாவரமானது
i. கொஹில ii. நாகதாளி iii. தென்னை

**VIII.**

60. 'எமது சூழலை பாதுகாப்போம்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாகப் பேணப்பட்டும் இருக்க வேண்டும்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## கடந்த வார (30.07.2023) வினாத்தாள் l இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 2 | 21. 3 | 31. 2 |
| 2. 1 | 12. 3 | 22. 2 | 32. 2 |
| 3. 3 | 13. 3 | 23. 3 | 33. 1 |
| 4. 1 | 14. 1 | 24. 1 | 34. 1 |
| 5. 1 | 15. 2 | 25. 2 | 35. 2 |
| 6. 2 | 16. 1 | 26. 1 | 36. 3 |
| 7. 3 | 17. 3 | 27. 3 | 37. 2 |
| 8. 2 | 18. 2 | 28. 3 | 38. 1 |
| 9. 2 | 19. 1 | 29. 2 | 39. 2 |
| 10. 1 | 20. 2 | 30. 1 | 40. 3 |


# அறிவித்தல்

**2015 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் மத்திய கலாசார நிதியத்தின் பணிகள் தொடர்பில் புலனாய்வு மேற்கொள்ளும் கழகம்**

**பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்**

பொது வியாபாரம் பற்றிய கலந்தாய்வு சபையின் ஆணைப்படி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட புலனாய்வு கழகமானது செத்சிறிபாய இரண்டாவது கட்டத்தின் தேசிய உரிமைகள் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மத்திய கலாசார நிதியத்தின் 2015 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் சில முறைக்கேடுகள், தவறுகள், நிதி மோசடிகள் மற்றும் சொத்து அபகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என புகார்கள் அளிக்க விரும்பும் நபர்கள் அல்லது நிறுவகங்கள், தங்களது புகார்களை வார்த்தைகள் மூலமாக, எழுத்து மூலமாக, தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக வார நாட்களில் **மு.ப 9.00** மணி முதல் **மாலை 4.30** மணி வரையில் சமர்ப்பிக்கலாம் என்பதை இத்தால் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகவரி : தலைவர், மத்திய கலாசார நிதியத்தின் பணிகள் தொடர்பில் புலனாய்வு மேற்கொள்ளும் கழகம்,
புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
தேசிய உரிமைகள், 04ஆம் மாடி
செத்சிறிபாய, இரண்டாம் கட்டம், பத்தரமுல்ல

தொலைபேசி இல : 011-2186083

மின்னஞ்சல் முகவரி : sec.nhpara@gmail.com

இவ்விளம்பரத்தின் பிரகாரம் **2023.07.14** ஆம் திகதிக்கு முன்னர் உங்களது புகார்களை புலனாய்வு கழகத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கழக தலைவர்,**
**யு.ஜீ.டப்.கே.டப்.ஜினதாச,**
**ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி.**
**2023.07.07**



**சுகாதார அமைச்சு**

# போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு

## பொது சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்வி மனுக்கோரல் –2023/2024

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பொது சிற்றுண்டிச்சாலையினை 2023/2024ஆம் ஆண்டின் ஒரு வருட காலப்பகுதிக்கு (எதிர்வரும் 12 மாதங்களுக்கு) நடாத்துவதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட மனுதாரர்களிடமிருந்து இத்தால் கேள்வி மனுக்கள் கோரப்படுகிறது.

1. ஆர்வமுள்ள கேள்விமனு கோருபவர்கள் எழுத்துமூல விண்ணப்பம் மற்றும் உணவகத்திற்குரிய வியாபார பதிவு சான்றிதழின் பிரதியினையும் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு அவர்களுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் சிற்றுண்டிச்சாலை சேவைக்கான மீளப்பெற முடியாத கேள்விக்கட்டணமாக ரூபா 1,500.00 ஐ மட்/போதனா வைத்தியசாலை நிதி உதவியாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன், தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து கேள்வியில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை 07/07/2023ஆந் திகதி தொடக்கம் 27/07/2023 ஆந் திகதி வரையான அலுவலக வேலை நாட்களில் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி மனுக்கள் அனைத்தும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொது சிற்றுண்டிச்சாலை சேவைகள் வழங்குதல் –2023/2024" என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் 28/07/2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், வைத்தியசாலை கேள்விச்சபை, போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது மட்/போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள "Tender Box" இல் இடப்படல் வேண்டும்.
3. பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விமனுக்கள் அனைத்தும் 28/07/2023ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். திறக்கப்படும் நேரத்தில் கேள்விமனு சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்க முடியும்.
4. நிராகரிக்கப்பட்டோர் பட்டியலில் உள்ளோருக்கும் மற்றும் அரச ஒப்பந்தங்களை மீறி நடந்தவர்களுக்கும் கேள்விமனுக் கோரிக்கை பற்றிய ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
5. கேள்விமனுக் கோரிக்கை ஆவணங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது அதனை நிராகரிப்பதற்குமான உரிமை கேள்விச் சபைக்குரியது.
6. மேலதிக தகவல்களை வைத்தியசாலை பிரதம கணக்காளரை 065-2222261, 065-2222262 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

**வைத்தியசாலை கேள்விச்சபை**
**போதனா வைத்தியசாலை,**
**மட்டக்களப்பு**
07.07.2023



# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**

## சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்தின் எல்லைச் சுவர்களின் திருத்தவேலைகள்

**(கேள்வி இல. C/02/2023)**

CIDA தரப்படுத்தலில் C7 அல்லது அதற்கு மேற்பட்ட வகுதியில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 3,500.00 ரூபாவை சகல வரிகளும் அடங்கலாக) செலுத்தியதன் பின் சுத்திகரிப்பு நிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் 2023 ஜூலை 25ஆம் திகதி 15.00 மணித்தியாலமாகும் என்பதுடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் திகதியானது 2023 ஆகஸ்ட் 09ஆம் திகதி 14.00 மணித்தியாலமாகும் என்பதுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்ட பின் உடன் திறக்கப்படும்.

சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் திட்டங்கள்) அவர்களிடமிருந்து விலைமனு ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்களை www.ceypetco.gov.lk எனும் இணையதளத்தில் வாசித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி: 0094-11-5668564 / 0094-11-2401359
தொலைபேசி: 0094-11-2401359 / 0094-11-2400431

**தலைவர், (DPC கீழ்நிலை),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த.**

The National Chamber of Commerce of Sri Lanka

# தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2023

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது

## தேசிய வியாபாரச் சிறப்பு விருது வழங்கலில் 6ஆவது தடவையாகவும் வெற்றிபெற்று தனது ஸ்தானத்தை உறுதி செய்தது CDB

### வங்கிசாரா நிதிச் சேவைகள் துறை மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் சிறப்பு ஆகியவற்றில் உயர் விருதுகளை சுவீகரித்திருந்தது

தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் 2023 நிகழ்வில் தொடர்ச்சியாக ஆறாவது தடவையாகவும் சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பிஎல்சி (CDB) வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதனூடாக வங்கிசாரா நிதிச் சேவைகள் துறையில் தனது தலைமைத்துவத்தை மேலும் உறுதி செய்திருந்தது. இந்த விருதுகள் வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்றது. மேலும், கூட்டாண்மை ஆளுகைச் சிறப்பு பிரிவிலும் CDB வெற்றியீட்டியிருந்ததுடன், கடந்த 28 வருட கால பயணத்தில் வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் தொடர்ச்சியாக உறுதியான வினைத்திறனான செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் 18 ஆவது வருடமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு, வியாபாரச் சிறப்பின் அடையாளமாக அமைந்திருப்பதுடன், வியாபாரத்தில் சிறப்பாக செயலாற்றியிருந்த மற்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கியிருந்த நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது. வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் வரிசையில் CDB பெற்றுக் கொண்ட வெற்றியினூடாக, நிறுவனத்தின் வியாபாரச் சிறப்பு, நிலைபேறான வியாபார மாதிரி மற்றும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையிலும் சிறந்த செயன்முறைகளை பின்பற்றியிருந்தமை போன்றன கௌரவிக்கப்பட்டுள்ளன.

CDB இன் பணிப்பாளரும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியும் பிரதம நிதி அதிகாரியுமான தமித் தென்னகோன் கருத்துத் தெரிவிக்கையில், "CDB' இன் ஆளுகை கலாசாரம் என்பது ஒழுக்கச் செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று, உறுதியான இடர் முகாமைத்துவ தந்திரோபாயங்களினூடாக ஆதரவளிக்கப்படுகின்றது. இவற்றினூடாக நெருக்கடியான காலப்பகுதியிலும் CDB ஐ உறுதியான நிலையில் இயக்கக்கூடியதாக இருந்தது. வியாபாரச் சிறப்புக்காக நாம் தெரிவு செய்யப்பட்டிருப்பதன் அடிப்படை அம்சம் இதுவாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் CDB வெளிப்படுத்தியிருந்த மீண்டெழுந்திறனுக்கு அடிப்படை சாதனமாக இந்த கலாசாரத்தைக் குறிப்பிட முடியும். அதனூடாக எம்மால் நிலைபேறான எதிர்காலத்தை நோக்கி நகர முடிந்துள்ளது. உறுதியான ஆளுகைச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, நிதி உள்ளம்சம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லல் போன்றவற்றினூடாக எமது வாடிக்கையாளர்கள், சமூகம் மற்றும் நாட்டின் எதிர்பார்ப்புகளுக்கு வலுச் சேர்க்கின்றோம்." என்றார்.

தென்னகோன் தொடர்ந்தும் தெரிவிக்கையில், "CDB அணியினர், வாடிக்கையாளர்கள், பெறுமதி வாய்ந்த வியாபாரப் பங்காளர்கள் மற்றும் பரந்தளவு பங்காளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் இணைந்து CDB இன் தொடர்ச்சியாக சிறப்புப் பயணத்துக்கு பங்காற்றியுள்ளமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன். நிதிச் சேவைகள் துறையில் CDB இன் பயணத்தில், எமது பங்காளர்கள் கொண்டுள்ள விசுவாசம், அர்ப்பணிப்பு மற்றும் உறுதித் தன்மை போன்றன முக்கிய பங்களிப்புச் செய்துள்ளன. இந்த அடிப்படை அம்சங்களின் அடிப்படையில், CDB இன் தலைமைத்துவ நிலை தொடர்ச்சியாகவும், நிலைபேறானதாகவும் பேணப்படுகின்றது." என்றார்.

தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் 2023க்கான விண்ணப்பங்கள் பரந்தளவு தொழிற்துறைகள் மற்றும் வியாபாரங்களிடமிருந்து கிடைத்திருந்ததுடன், அவற்றை சுனில் ஜி விஜேசிங்க தலைமையின் கீழான அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவினர் மதிப்பாய்வு செய்திருந்தனர். ஏழு பிரிவுகளில் இவை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. தந்திரோபாயம் மற்றும் தலைமைத்துவ சிறப்பு, கூட்டாண்மை ஆளுகை மற்றும் தந்திரோபாயம், திறன் கட்டியெழுப்பல், வினைத்திறன் முகாமைத்துவம், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை சென்றடைவு, கூட்டாண்மை சமூகப் பொறுப்பு மற்றும் சூழல் நிலைபேறாண்மை மற்றும் வியாபார மற்றும் நிதிசார் பெறுபேறுகள் போன்றனவாக அமைந்திருந்தன.



இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் பிரதித் தலைவர் கவிந்த ராஜபக்ச, CDB அணியினருக்கு வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் துறையின் வெற்றியாளருக்கான விருதை வழங்குகின்றார்.



முன்னாள் சபாநாயகரும் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான ஸ்ரீலங்காபிமான்ய கரு ஜயசூரிய, CDB அணியினருக்கு கூட்டாண்மை ஆளுகை சிறப்புக்கான இணை வெற்றியாளர் விருதை வழங்குகின்றார்.


CDB தொடர்ச்சியான சிறப்புக்கான அங்கீகாரம்

2023 தேசிய வர்த்தக சிறப்பு விருது வழங்கல் நிகழ்வில் CDB விருதுகளை வென்றது

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தால் NCCSL ஏற்பாடு செய்யப்பட்ட NBE விருதுகள், வணிக நிலைத்தன்மையை வெளிப்படுத்தும் மற்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டது

தொடர்ச்சியான சிறப்பை வழங்குவதற்கான எங்கள் பயணத்தில் எங்களுடன் இணைந்ததற்காக எமது வாடிக்கையாளர்கள், மதிப்புமிக்க வணிகப் பங்காளர்கள் மற்றும் CDB குழுவினர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.



WINNER

தொடர்ந்து 6வது ஆண்டு
வங்கி அல்லாத நிதித் துறை



WINNER

கார்ப்பரேட் நிர்வாகத்தில்
சிறந்து விளங்குதல்

CDB
உங்கள் நண்பன்

SARP

# சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம்

## விவசாய அமைச்சு

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் பதவிக்காக சேர்த்துக் கொள்ளவதற்காக சண்டே ஒப்சர்வர் பத்திரிகையில் 2023.07.02ம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. குறித்த தகைமைகள் அனுபவம் மற்றும் விண்ணப்பிக்கும் செயற்பாடுகள், சம்பள அளவு பற்றி மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக தயவு செய்து https://www.agrimin.gov.lk இணையதளத்திற்கு பிரவேசியுங்கள். குறித்த இணையதள பக்கத்தை பரிசீலித்து உங்களது விண்ணபத்தை கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு SARP கருத்திட்டம் கேட்டுக் கொள்கிறது.

**01. செயற்பாடு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் (PS03) - 01 பதவி**

**02. நிதி/ நிர்வாக அதிகாரி (PS06 A) - 01 பதவி**

**03. நிறுவன அதிகாரி (PS06 A) - 02 பதவிகள்**

**04. செயற்பாடு மற்றும் மதிப்பீட்டு உதவியாளர் (PS06 A) - 01 பதவி**

**05. அபிவிருத்தி அதிகாரி - 02 பதவிகள்**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **2023.07.17**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழர் கருத்திட்டம்**
**2/2/1, கந்தவத்த வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

# பிரசித்த ஏல விற்பனை

06ம், 07ம் ஏப்ரல் 2023, 03ம், 04ம் மே 2023, 05ம், 06ம் ஜீன் 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல, ரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 24 ஜீலை 2023 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## விலைமனுக்கோரல் முன்வைப்பதற்கான திகதியை நீடித்தல்

### சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

### இலங்கை நில அளவைத் திணைக்களம்

### வருடாந்திர தேவைப்பாட்டு பெறுகைகள் -2023

**விலைமனு இலக்கம் –SD/II/2023**

மேலே குறிப்பிடப்பட்ட பெறுகைகள் தொடர்பாக 2023.06.28 ம் திகதி நடைபெற்ற விலைமனுக் கோரலுக்கு முன்னரான ஒன்றுகூடலின் போது விபரக்குறிப்பில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அப் பொருட்களுக்கான விலைமனுக்கோரல் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2023.07.18 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**நில அளவையாளர் நாயகம்**
**கொழும்பு-05**
**தொலைபேசி. 011-2368106**
2023.07.07

# வெற்றிடங்கள்

## கொழும்பு தலைநகரம் சார்ந்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் விடய எல்லையின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற கருத்திட்ட அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | பதவிகளின் எண்ணிக்கை | தகைமைகள் |
|---|---|---|
| சிரேஷ்ட சிவில் பொறியியலாளர் - (PS 3) – (ஒப்பந்த நிர்வாகம்) | 01 | (பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03)<br>(1) குறித்த விடயத்துறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதல் பட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது குறித்த விடயத்துறையில் பட்டத்துக்குச் சமனான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகைமை அல்லது பூரண அங்கத்துவம்/ குறித்த விடயத்துறை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் பெற்றுள்ள சமமான அந்தஸ்துடைய தொழில்சார் தகைமையுடனான தகைமையொன்றினைப் பெற்றதன் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 14 வருட அனுபவம்<br>(2) குறித்த விடயத்துறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதல் பட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது குறித்த விடயத்துறையில் பட்டத்துக்குச் சமனான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகைமை அல்லது<br>பூரண அங்கத்துவம் / குறித்த விடயத்துறை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் பெற்றுள்ள சமமான அந்தஸ்துடைய தொழில்சார் தகைமை மற்றும் குறித்த விடயத்துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம், தாபன/ பட்டய அங்கத்துவம் அல்லது குறித்த விடயத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் பெற்றுள்ள இணையான தொழில்சார் தகைமையுடன் தகைமைப்பெற்றதன் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம்<br>(3) அரசாங்க நாடாளவிய சேவையொன்றில் Iஆம் வகுப்புச் சேர்ந்த உத்தியோகத்தராக இருத்தல் அல்லது குறித்த துறையில் சமனான அந்தஸ்து மற்றும் I ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவம்<br>- இதற்கு சமனான துறையில் அனுபவம் உள்ள அபேட்சகர்களுக்காக முன்னுரிமை அளிக்கப்படும். |
| **இயந்திர பொறியியல் - (PS 4) (கழிவுப்பொருள் போக்குவரத்து மற்றும் நில மீட்பு)**<br>**A தொகுதி சிரேஷ்ட முகாமையாளர் - (PS 4) - (இரசாயன மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு)**<br>**A தொகுதி சிரேஷ்ட நில அளவையாளர் -PS 4** | 01<br>01<br>01 | (1) குறித்த விடயத்துறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதல் பட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது குறித்த விடயத்துறையில் பட்டத்துக்குச் சமனான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகைமை அல்லது பூரண அங்கத்துவம்/ குறித்த விடயத்துறை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் பெற்றுள்ள சமமான அந்தஸ்துள்ள தொழில்சார் தகைமையுடன் தகைமைப் பெற்றதன் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 08வருட அனுபவம்<br>(2) அரசாங்க நாடாளவிய சேவையொன்றில் III/II அல்லது அதற்கு உயர் வகுப்பில் உள்ள உத்தியோகத்தராக இருத்தல் அல்லது குறித்த துறையில் சமனான அந்தஸ்து மற்றும் III/II ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் 08 வருட அனுபவம்<br>- இதற்கு சமனான துறையில் அனுபவம் உள்ள அபேட்சகர்களுக்காக முன்னுரிமை அளிக்கப்படும். |
| **உதவி பொறியியலாளர் - PS 5 - (மின்சாரம்)** | 01 | (1) குறித்த விடயத்துறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதல் பட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது குறித்த விடயத்துறையில் பட்டத்துக்குச் சமனான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகைமை அல்லது பூரண அங்கத்துவம்/ குறித்த விடயத்துறை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் பெற்றுள்ள சமமான அந்தஸ்துள்ள தொழில்சார் தகைமையுடன் அல்லது தொழில்நுட்ப துறைசார்ந்த பதவிக்காக, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கிய தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகளில் 07 ஆவது மட்டத்திற்கு (NVQ Level) குறையாத தேர்ச்சிபெற்ற சான்றிதழ் மற்றும் சிறப்புத் துறையில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம்<br>(2) தொழில்நுட்ப துறைசார்ந்த பதவிக்காக, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கிய தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகளில் 06 ஆவது மட்டத்திற்கு (NVQ Level) குறையாத தேர்ச்சிபெற்ற சான்றிதழ் மற்றும் சிறப்புத் துறையில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம்<br>3) தொழில்நுட்ப துறைசார்ந்த பதவிக்காக, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கிய தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகளில் 05 ஆவது மட்டத்திற்கு (NVQ Level) குறையாத தேர்ச்சிபெற்ற சான்றிதழ் மற்றும் சிறப்புத் துறையில் ஆகக் குறைந்தது 15வருட அனுபவம்<br>-இதற்கு சமனான துறையில் அனுபவம் உள்ள அபேட்சகர்களுக்காக முன்னுரிமை அளிக்கப்படும். |

மேலேயுள்ள பதவிகளுக்காக 2019.03.15ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு சம்பளங்கள் மற்றும் சலுகைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் விண்ணபத்தின் இறுதித் திகதியாகும்போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், சுய விபரத் தரவுகளைக் கொண்ட விண்ணப்பம், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரர் பற்றிய பரிந்துரைகளை வழங்கக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் விவரங்களுடன் 2023.07.22 அல்லது அதற்கு முன்னர் பதிவு தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்ற கடிதஉறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் கருத்திட்டத்தினை தெளிவாக குறிப்பிட வேண்டும். இந்தப் பதவிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த குறுக்கு பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். அரசு, அரச சார்புத்துறை சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

**செயலாளர்,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**
**17ம் மாடி, சுஹுருபாய, பத்தரமுல்லை.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசன திணைக்களம்

## ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

**செயற்றிட்ட இல.: பி166865** **கடனிலக்கம்: 6621 - எல்கே**

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## ஹத்தொட்ட அணைக்கட்டு திட்டத்தின் (1ஆம் பொதி) கட்டமைப்புக்கள் அடங்கலாக கால்வாய்க்கான மேம்படுத்தல்கள் முறைமை (1 ஆவதிலிருந்து 5ஆம் கி.மீ வரையும்)

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கமானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (உலக வங்கி) ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திட்ட ஆகுசெலவிற்காக நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்திற்கு செலவிட உத்தேசித்துள்ளது.

2. பின்வரும் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நீர்ப்பாசன திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

3. வேலைகளானது **ஹத்தொட்ட அணைக்கட்டு திட்டத்தின் (1 ஆம் பொதி) கட்டமைப்புக்கள் அடங்கலாக கால்வாய்க்கான மேம்படுத்தல்கள் முறைமை (1 இலிருந்து 5 ஆம் கி.மி. வரையும்) வேலைகளை உள்ளடக்கும்.**

**அட்டவணை: 01**

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | CIDA பதிவு | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகுசெலவு (மில்.இ. ரூபாவில்) | நிர்மாணக் கால எல்லை (நாட்களில்) | மீளளிக் கப்படாத கட்டணம் (இ. ரூபாவில்) | விலை மனுப் பிணைத் பெறுமதி (இ. ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | LK-MOMDE-305824-CW-RFB | ஹத்தொட்ட அணைக்கட்டு திட்டத்தின் (1ஆம் பொதி) கட்டமைப்புக்கள் அடங்கலாக கால்வாய்க்கான மேம்படுத்தல்கள் முறைமை (1 இலிருந்து 5ஆம் கி.மீ. வரையும்) | சி-4 அல்லது மேற்பட்டது | 62.25 | 365 | 17,000.00 | 1,075,000.00 |

4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை பெறும் பொருட்டு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், சித்திகரமான விலைமனுதாரர் **நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய்களின் விஷேடத்துவத்தின் கீழ்** 01ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுத் தரத்தை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கொண்டிருத்தல் வேண்டும்.

5. சித்திகரமான விலைமனுதாரர் கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது **93.0 மில்லியன் இலங்கை ரூபாவாகவும்** இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பண பணக்கொடுப்பனவுகள் நீங்கலாக ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் தேறிய திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகள் ஆகக் குறைந்தது **18.0 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல்** வேண்டும்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசன திணைக்கள, 2ஆம் மாடி, ஒப்பந்தம் மற்றும் பெறுகை கிளை, ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று **2023.07.07ஆம் திகதியிலிருந்து 2023.08.04ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** மேலே வழங்கப்பட்டுள்ள அதே முகவரியில் முன்னறிவித்தலின் பிரகாரம் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொடர்பிலக்கம்: 011-2582897/011-2583305)

7. **2023.07.07ஆம் திகதியிலிருந்து 2023.08.04ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230 ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசன திணைக்கள ஒப்பந்தம் மற்றும் பெறுகைக்கான நீர்ப்பாசன பணிப்பாளருக்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்காக 01 ஆம் இலக்க அட்டவணையை தயவு செய்து பார்வையிடவும்) பின்வரும் வங்கிக் கணக்கிற்கு செலுத்திய பின்னர், கம்பனி தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை வங்கித்துண்டுடன் இணைத்து **dictptirrigation2015@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக / 011-2583305 என்ற தொலைநகலூடாக கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230 ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசன திணைக்கள ஒப்பந்தம் மற்றும் பெறுகைக்கான நீர்ப்பாசன பணிப்பாளருக்கு சமர்ப்பித்த பின்னர் விலைமனுக்கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.

**அட்டவணை: 02**

| வங்கி விபரங்கள் | வங்கித் துண்டு மற்றும் கோரிக்கைக் கடிதம் ஆகியன அனுப்ப வேண்டிய முகவரி | |
|---|---|---|
| | மின்னஞ்சல் முகவரி | தொலைநகல் இலக்கம் |
| வங்கிப் பெயர்: இலங்கை வங்கி - தப்ரோபேன் கிளை.<br>கணக்கிலக்கம் மற்றும் பெயர்: 7042385<br>நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்<br>(ஒன்லைன் பணம் வைப்பிடுவது மாற்றம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) | **dictptirrigation2015@gmail.com** | **011-2583305** |

8. கீழேயுள்ள 03 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனு முன்னோடிக் கூட்டம் மற்றும் தளவிஜயம் ஆகியன நடைபெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் உரித்தான அலுவலரின் உதவியுடன் வேலைத்தளங்களை பரீட்சிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**அட்டவணை: 03**

| வேலை விளக்கம் | தளவிஜயத்தில் உதவி வழங்கும் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் | தளவிஜயத்தின் திகதி/ நேரம் மற்றும் ஆரம்பமாகும் இடம் | விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் திகதி/நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|
| ஹத்தொட்ட அணைக்கட்டு திட்டத்தின் (1 ஆம் பொதி) கட்டமைப்புக்கள் அடங்கலாக கால்வாய்க்கான மேம்படுத்தல்கள் முறைமை (1 இலிருந்து 5 ஆம் கி.மீ. வரையும்) | பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் (மாத்தளை) தொலைபேசி: 066-2222356 | மாத்தளை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் 2023.07.14ஆம் திகதியன்று மு.ப.10 மணிக்கு | கொழும்பு-07, நீர்ப்பாசன திணைக்கள தலைமையலுவக 4 ஆம் மாடி, குழு அறையில் 2023.07.17ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

9. விலைமனுக்கள் **2023.12.04**ஆம் திகதியன்று வரையும் (விலைமனுக்களை (மூடும்) திகதியிலிருந்து 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுவானது 01ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2024.01.01 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை (மூடும்) திகதியிலிருந்து 147 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் பிரதிபலிப்பு இல்லையெனக் கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.

10. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.

11. **2023.08.07ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒன்றில் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230 ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசன திணைக்கள 03ஆம் மாடி, 311 ஆம் இலக்க அறையில் (பிரதான நிதியியல் அலுவலரின் அறை) இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்** அல்லது பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரியின் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். **விலைமனுக்கள் 2023.08.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும்.** தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

12. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியனவற்றை தயவு செய்து எழுதவும்.

13. விலைமனுக்கள் தமது விருப்பத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது **அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.**

**தலைவர்,** **திகதி: 07.07.2023**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**இல.: 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது

கம்பனியின் முன்னைய பெயர்:
**வேல்நெட் சொலுஷன்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்**
கம்பனி இலக்கம்: **பிவி 94467**
பதிவு அலுவலகம் :
**இல. 231, காலி வீதி, கொழும்பு -04**
கம்பனியின் புதிய பெயர்:
**மெடிவேவ் (பிறைவட்) லிமிட்டெட்**
மாற்றப்பட்ட திகதி:
**2023.06.08**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது

கம்பனியின் முன்னைய பெயர்:
**செலான் இன்ஷூரன்ஸ் புறொக்கர்ஸ் கம்பனி (பிறைவட்) லிமிட்டெட்**
கம்பனி இலக்கம்: **பிவி 6092**
பதிவு அலுவலகம் :
**மட்டம் 26, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு -01**
கம்பனியின் புதிய பெயர்:
**செலான் இன்ஷூரன்ஸ் என்ட் ரீ இன்ஷூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிறைவட்) லிமிட்டெட்**
மாற்றப்பட்ட திகதி:
**2023.06.02**




## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

**மக்கள் வங்கி - பிராந்திய தலைமைக் காரியாலயம் - மொனராகலை**

மக்கள் வங்கி மொனராகலை பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வரும் திகதிகள் மற்றும் இடங்களில் பொது ஏல விற்பனை செய்யப்படும் இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

ஒவ்வொரு நாளும் ஏல விற்பனையானது காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 25.07.2023 மற்றும் 26.07.2023 |
|---|---|
| இந்த திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நகைகள் | 24.07.2023 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | மொனராகலை கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | பிபிலை, வெல்லவாய, மொனராகலை, புத்தளை, கதிர்காமம், தனமல்வில, மெதகம, படல்கும்புர, சியபலந்துவ |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | மொனராகலை, தம்பகல்ல, எதிலிவெவ, ஒக்கம்பிட்டிய, ஹம்பேகமுவ |

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**வெல்லவாய வீதி, மொனராகலை.**
**தொலைபேசி இல. 055-2276350/ 055-2276347**

www.peoplesbank.lk 1961
PEOPLE'S BANK
Pride of the Nation

## 2015ம் இலக்க ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 131ஆம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்

# இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

மொரகொல்லாகம நிக்கவெவவில் அமைந்துள்ள சிட்டி பார்மசி இன் உரிமையாளர் R.M. லக்சிரி பண்டார மற்றும் மருந்தாளரும், மருந்தக உதவியாளர் W.M. பபோதா கயானி ஆகிய நாம்,

மேற்படி மருந்தகத்தில் மருந்துச்சிட்டை இன்றி மருந்து விற்றல், மருந்தாளரின் நேரடி மதிப்பீட்டின் கீழ் மருந்துகளை விநியோகிக்காமை, மருந்தாளராக தமக்குள்ள பொறுப்புக்களை மீறியமை போன்ற குற்றங்கள் சம்பந்தமாக,

குருநாகல் மாவட்ட உணவு மற்றும் ஔடத பரிசோதகர் ஆர்.எஸ்.பீ. புஷ்பகுமார ராஜபக்ஷவினால் மாஹோ நீதவான் நீதிமன்றத்தில் இல. 42312இன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி குற்றங்களுக்கு, குற்றத்தை ஒப்புக் கொண்ட காரணத்தினால் கௌரவ நீதிமன்றம் 2023 ஜூன் 13ம் திகதி எமக்கு ரூபா தொண்ணூறாயிரம் (90,000/-) தண்டத் தொகையை நியமித்ததாக மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தவறு எம்மால் மீண்டும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவித்து மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக முழு இலங்கை மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறோம்.

**கைத்தொழில் அமைச்சு**

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

## ஊழியர் போக்குவரத்து சேவைக்கான வாகனங்களை வாடகைக்கு விடுவதற்கான விலைமனு அறிவித்தல்

**SUP/SD/23/119**

## தேசிய போட்டி விலைமனு (NCB) முறைமை

2023/2024ஆம் ஆண்டிற்கு கீழே விபரிக்கப்படுமாறு கொழும்பு- 07, பௌத்தாலோக்க மாவத்த, இல. 363 ITI இற்கு போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக உத்தேச மனுதாரர்களிடமிருந்து கீழே ஒப்பமிடப்படுபவரல் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ITI யினால் குறிப்பிடப்படும் ஓர் கால எல்லைக்கு ITI யுடன் ஓர் உடன்படிக்கைக்கு உட்படுமாறு தேர்ந்தெடுக்கப்படல் சேவை வழங்குநர்கள் வேண்டப்படுகின்றனர்.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தக்கூடிய இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்துடன் குறைந்தபட்சம் 90 நாட்கள் (கேள்வி மூடப்படும் தினத்தில் இருந்து) செல்லுபடியாகும் மொத்த கேள்விப் பெறுமதியின் 1%ஐக் கொண்ட ஓர் விலைமனுப்பிணையை எல்லா தகைமையான விலைமனுதாரர்களும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2023.07.07 முதல் 2023.07.26 வரை மு.ப. 9.00 இற்கு பி.ப. 3.00 இற்கும் மிடையில் வேலை நாட்களில் மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், பணிப்பாளர் நாயகத்திற்கு ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ 5,500/- காசாக செலுத்துவதன் பேரில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் பதிவுத் தபாலில் 2023.07.27 மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு அடைதல் வேண்டும். அல்லது மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், மனிதவள பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடலாம். தாமதமாக விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின்னர் உடனடியாக மாலபே தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503A, கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

ஒப்பந்தம் ரூபா ஐந்து மில்லியனுக்கு மேற்படின், 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் திர்மானமாக இருக்கும் மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து வழங்கல்கள் பிரிவு - ITI ஐத் தொடர்பு கொள்ளுங்கள்.
(தொ.பே. 011-2797314/ 0112797315)

மாலபே, ITI இன் வழங்கல்கள் பிரிவில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இலவசமாகப் பரிசீலிக்கலாம்.

| உத்தேச பாதை | ரனால, கடுவளை, பிட்டுகல, கஹன்தொட்ட ரோட், கொஸ்கந்தவில, அரங்கல, ஹோகந்தர, தலவத்துகொட, கொஸ்வத்த, வல்பொல சந்தி, IDH, ராஜகிரியவிலிருந்து ITI கொழும்பு | களுஅக்கல வில் இருந்து ITI கொழும்பு (ஹைலெவல் வீதி) | கலகெடிஹேன ஊடாக மருதானை ரயில் நிலையத்தில் இருந்து ITI கொழும்பு (கண்டி வீதி) | களுத்துறை யில் இருந்து ITI கொழும்பு (காலி வீதி) |
|---|---|---|---|---|
| ஆசன எண்ணிக்கை | 33 பஸ் | 33 பஸ் | 30 பஸ் | 30 பஸ் |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய)**
**கைத்தொழில் நுட்ப நிறுவுனம்**
**இல. 503A, ஹல்பராவ கார்டன்ஸ்**
**தலாஹேன, மாலபே.**

## மக்கள் வங்கி
## தங்க நகை அடகுப் பொருட்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் 31.03.2022ம் திகதி அடகு வைக்கப்பட்டு 11.08.2023 திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க் காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

| | கிளை/சேவை நிலையம் | ஏல விற்பனைத் திகதியும் ஸ்தாபனமும் |
|---|---|---|
| 01 | **கிளைகள்:** பதுளை, மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்டிய, லுணுகலை, கிராந்துருகோட்டை, பதுளை, முதியங்கனை **சேவை நிலையங்கள்:** பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மீகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை | 12.08.2023ம் திகதி மற்றும் 13.08.2023ம் திகதி பதுளை கிளைத் தொகுதியில் |
| 02 | **கிளைகள்:** வெளிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம, பொரலந்தை, பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்லந்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை **சேவை நிலையங்கள்:** வெளிமடை நகரம், லூணுவத்த, மெதவெல, போகஹகும்புர, பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பெரஹெட்டிய, பல்லகொட்டுவ | 12.08.2023ம் திகதி மற்றும் 13.08.2023ம் திகதி பண்டாரவளைக் கிளைத் தொகுதியில் |

மேற்குறிப்பிட்ட படி நடைபெறவுள்ள இவ் ஏல விற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருபத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏல விற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிரதேச முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிரதேச பிரதான அலுவலகம்,**
**இல. 24, R.H. குணவர்த்தன மாவத்தை,**
**பதுளை.**

www.peoplesbank.lk 1961
PEOPLE'S BANK
Pride of the Nation

**கைத்தொழில் அமைச்சு**

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

## தோட்ட சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கான விலைமனு அறிவித்தல்

SUP/SD/23/120

2023/ 2024 ஆண்டிற்கு மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ் இல. 503A இல் ITI இன் பாராமரிப்பு (தோட்ட சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகள்) இற்கு உத்தேச விலைமனுதாரர்களிடம் இருந்து கீழே குறிப்பிடப்படுபவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்படும் சேவை வழங்குநர்கள், ITI இனால் குறிப்பிடப்படும் ஓர் காலத்திற்கு ITIயுடன் ஓர் உடன்படிக்கைக்கு உற்படுமாற கேட்கப்படுகின்றனர்.

ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 1000/- செலுத்துவதன் பேரில் வழங்கல்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவங்கள் 2023.07.07 முதல் 2023.07.26 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 க்கு இடையில் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை 2023.07.27 மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழே ஒப்பமிட்டுள்ளவரை அடையுமாறு அனுப்புதல் வேண்டும். அல்லது மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், ஆளனி பிரிவில் வைக்கப்பட்டுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் 'தோட்ட சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகள் SUP/SD/23/120' என்று குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைக் குழுவின் திர்மானம் இறுதித் திர்மானமாக இருக்கும். தள விஜயம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து வழங்கல்கள் பிரிவு - ITI ஐத் தொடர்பு கொள்ளுங்கள். (தொ.பே. 0112797314/ 0112797315)

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு (சிறிய)**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்,**
**இல. 503A, ஹல்பராவ கார்டன்ஸ்,**
**தலாஹேன**
**மாலபே.**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் நிழ்வான் பள்ளி வீதி. மீறாவோடை- 05 எனும் விலாசத்தில் வசிக்கும் நான் கடந்த 2017.03.09ம் திகதி புனித இஸ்லாத்தை தழுவிக் கொண்டு சந்தியா என்ற எனது பெயரை **பாத்திமா ஆயிஷா** என்று மாற்றியுள்வேன். அதன் பின்னர் எனது அனைத்து ஆவணங்களிலும் பாத்திமா ஆயிஷா என்று உள்ளதால் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பாத்திமா ஆயிஷா என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.
**சோமசுந்தரம் பாத்திமா ஆயிஷா**

# பெறுகை அறிவித்தல்

**வனவிலங்குகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

## தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

## மாட்டிறைச்சி வழங்குதல் – 2023/2024

**IFB NO - DNZG/A/07/22/119**

1. ஒரு வருட காலத்திற்கு கீழ்க்காணும் விலங்குகள் பூங்காக்களுக்கு மாட்டிறைச்சியை வழங்டகுவதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல | ஒப்பந்தத்தின் பெயர் | விலைமனுப் பிணை பெறுமதி ரூபா. | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| 1 | தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு மாட்டிறைச்சி வழங்குதல் | 940,000.00 | 13,000.00 |
| 2 | பின்னவல மிருகக் காட்சி சாலைக்கு மாட்டிறைச்சி வழங்குதல் | 292,000 | 4,000.00 |
| 3 | ரிதியகம சபாரி பூங்காவிற்கு மாட்டிறைச்சி வழங்குதல் | 1,930,000.00 | 15,000.00 |

2. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் ஊடாக நடத்தப்படும்.

3. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் தெஹிவளை, அநகாரிக் தர்மபால மாவத்த, தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே. 2896779, 2710807 மற்றும் 2023 ஜுலை 7 முதல் 2023 ஜுலை 27 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் கீழக்காணும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.

4. 2023 ஜுலை 27 வரை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் மற்றும் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஒவ்வொரு வகுதிக்கும், ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் செலுத்தும் முறை காசாக இருக்கும்.

5. விலைமனுக்கள் 2023.07.28 மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்கானும் முகவர்க்கு கீழ்க்காணும் முகவரிக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 ஜுலை 28 மு.ப. 10.30 இற்கு கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். எல்லா விலைமனுவுடனும் ஓர் விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும்.

6. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களம்.**
**அநகாரிக்க தர்மபால மாவத்த,**
**தெஹிவளை.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

## ஒரு வருட காலத்திற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் 04 எண்ணிக்கையான VX Rail Cluster Server அமைப்புக்களின் சேவை மற்றும் பராமரிப்பிற்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்வதற்கான பெறுகை ஒப்பந்த

**(IFB) இல.: DIE/PRO/07/2017/36-VOL-III**

1. ஒரு வருட காலத்திற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் 04 எண்ணிக்கையான **VX Rail Cluster Server** அமைப்புக்களின் சேவை மற்றும் பராமரிப்பிற்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்வதற்கான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
3. 2023.07.07ஆம் திகதியிலிருந்து 2023.07.28ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐந்தாயிரம் ரூபாவை (5,000 ரூபா) செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, ''சுஹுருபாய'', 05 ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள பெறுகைப் பிரிவின் பெறுகைக்கான பிரதி கட்டுப்பாட்டாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112-101559 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். விலைமனு ஆவணங்கள் 2023.07.07ஆம் திகதியிலிருந்து 2023.07.28ஆம் திகதியன்று வரையும் மேலேயுள்ள 3 ஆம் பந்தியின் முகவரியில் குறிந்துரைக்கப்பட்டுள்ள அமைவிடத்திலும் **www.immigration.gov.lk** என்ற திணைக்களத்தின் இணையதளத்தினூடாகவும் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தயாரிக்கப்பட்டு தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர், இவ்விரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு உரித்தான ஒப்பந்தப் பெயர் மற்றும் IFB இலக்கம் ஆகியன முத்திரையிடப்பட்ட இந்த தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2023.07.31ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது 3 ஆம் பந்தியில் குறிந்துரைக்கப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவானது அதனை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து அல்லது பெறுகையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு நீடிக்கப்பட்ட திகதியிலிருந்து எழுபத்தேழு (77) நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

   தலைவர்,
   திணைக்கள பெறுகைக் குழு,
   குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்,
   05 ஆம் மாடி, ''சுஹுருபாய'',
   ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்ல.
6. 2023.07.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பத்தரமுல்ல, ஸ்ரீ சுப்ஹுத்திபுர வீதி, ''சுஹுருபாய'', 05 ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்,**
**05 ஆம் மாடி, ''சுஹுருபாய'',**
**ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்ல.**

மாகாண கல்வித் திணைக்களம்

வடமேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அலுவலக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் வழங்குதல் மற்றும் விநியோகித்தல் மேசைக் கனனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் ஸ்மார்ட் போர்ட்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்

## WEMDC க்கு ஒலி முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் மல்டிமீடியா புரஜெக்டர்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்

**செயற்றிட்டத்தின் பெயர்: பொதுக் கல்வியை நவீனமயப்படுத்தப்படும் திட்டம் (GEMP) மற்றும் இலங்கை அரசாங்க நிதியம்**

பின்வரும் 1ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அலுவலக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் வழங்குதல் மற்றும் விநியோகித்தல், மேசைக் கணனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல், ஸ்மார்ட் போர்ட்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல், WEMDC க்கு ஒலி முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல், மல்டிமீடியா புரஜெக்டர்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் என்பவற்றுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாகாண கல்விப் பணிப்பாளரின் (வட மேல் மாகாணம்) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

**அட்டவணை 01**

| தொகுதி (Lot) | உருப் படி இல. | விபரங்கள் | எண்ணிக்கை (அலகுகள்) | விலைக் கோரல் பிணை முறி இல.ரூ. | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | நிதி வளம் | மதிப்பிடும் முறை |
|---|---|---|---|---|---|---|---|
| | **அலுவலகத் தளபாடங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்** | | | | | | |
| 01. | i. | கணனி கதிரை | 21 | 41,500.00 | 3,500.00 | GOSL | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். ஒவ்வொரு உருப்படியும் வெவ்வேறாக மதிப்பிடப்படும் |
| | ii | கணனி மேசை | 07 | | | | |
| | iii | அலுவலகக் மேசை | 54 | | | | |
| | iv | அலுவலகக் கதிரை | 88 | | | | |
| | v | நிறைவேற்றுநர் கதிரை | 03 | | | | |
| | vi | நிறைவேற்றுநர் மேசை | 03 | | | | |
| | vii | உருக்கு கப்போர்ட் | 50 | | | | |
| | viii | கோவை இராக்கை | 13 | | | | |
| | ix | Pedestal Fan (சிறியது) | 01 | | | | |
| | x | Stand Fan | 02 | | | | |
| | **அலுவலக உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்** | | | | | | |
| 02. | i. | புகைப்படப் பிரதி | 03 | 18,500.00 | 1,500.00 | GOSL | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். ஒவ்வொரு உருப்படியும் வெவ்வேறாக மதிப்பிடப்படும் |
| | ii | வர்ண அச்சுப்பொறி | 01 | | | | |
| | iii | அச்சுப்பொறி (லேசர்) | 10 | | | | |
| | iv | Dot Matrix அச்சுப்பொறி | 01 | | | | |
| | v | மடிக்கணனி | 01 | | | | |
| | vi | ஸ்கேனர் | 01 | | | | |
| | vii | டுப்ளிகேட்டிங் இயந்திரம் | 01 | | | | |
| | viii | மல்டிமீடியா புரஜெக்டர் | 01 | | | | |
| | **மேசைக் கணனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்** | | | | | | |
| 03. | i | மேசைக் கணனிகள் | 88 | 344,000.00 | 3,500.00 | GEMP | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். உருப்படி ஒன்றாக மதிப்பிடப்படும் |
| | ii | UPS | 88 | | | | |
| | **ஸ்மார்ட் போர்ட்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்** | | | | | | |
| 04 | i | ஸ்மார்ட் போர்ட்கள் | 13 | 129,000.00 | 3,500.00 | GEMP | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். |
| | **WEMDC இற்கான ஒலி முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்** | | | | | | |
| 05 | i | Transmitter & Receiver | 01 | 1,000.00 | 1,000.00 | GEMP | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். உருப்படி ஒன்றாக மதிப்பிடப்படும் |
| | ii | Mixer Amplifier | 01 | | | | |
| | iii | Microphones | 05 | | | | |
| | iv | Colum Speaker | 04 | | | | |
| | **மல்டிமீடியா புரஜெக்டர்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்** | | | | | | |
| 06 | i. | மல்டிமீடியா புரஜெக்டர்கள் | 02 | 6,000.00 | 1,000.00 | GEMP | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம் (வட மேல் மாகாணம்), பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/தொலைநகல் இலக்கம் 037-2222422) மற்றும் மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை)

05. தகைமைத் தேவைப்படுத்தல்களில் உள்ளடங்குபவை:

(i) கடந்த மூன்று வருடங்களில் இதனையொத்த பொருட்களை வழங்குவதில் பின்வருமாறான ஆகக் குறைந்த நிதிப் புரள்வுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (2020-2022)

| தொகுதி இல. | 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
|---|---|---|---|---|---|---|
| சராசரி புரள்வு | ரூபா 2.4 மில்லியன் | ரூபா 1.1 மில்லியன் | ரூபா 20.6 மில்லியன் | ரூபா 7.7 மில்லியன் | ரூபா 0.1 மில்லியன் | ரூபா 0.6 மில்லியன் |

(ii) தேவைப்படும் பொருட்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம்.

(iii) விலைமனுதாரர் தொழில்நுட்ப தகைமை மற்றும் தேர்ச்சி பெற்ற பணியாட்கலுள்ள வேலைத்தளத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iv) விலைமனுதாரர் முன் கையிருப்பு வைத்திருத்தல் வேண்டும்.

06. 1ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை மாகாண கல்விப் பணிப்பாளரிடம் செலுத்திய பின்னர், கீழேயுள்ள 8ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 2023 ஜூலை 07ஆம் திகதி முதல் 2023 ஜூலை 27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப்பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

கீழே 7 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் (வமேமா) 2023 ஜூலை 21ஆம் திகதி 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**அட்டவணை - 02**

| தொகுதி இல. | 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
|---|---|---|---|---|---|---|
| நேரம் | 9.15 மணி | 9.30 மணி | 9.45 மணி | 10.00 மணி | 10.15 மணி | 10.30 மணி |

07. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "………… தொகுதி இலக்கத்திற்கான விலைமனு" என குறிப்பிட்டு 2023 ஜூலை 28ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வட மேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் "கேள்விப் பெட்டியில்" உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 ஜூலை 28ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடியதும் உடனடியாகத் திறக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விலைமனுக்களும் "விலைமனுப்பிணையொன்றுடன்" இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**J.A.M.P. ஜயதிலக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி, குருநாகல்.**

**தொலைபேசி : 037-2222422 / 037-2220221**
**தொலைநகல் இலக்கம் : 037-2222422**
**இணையதள முகவரி : www.nwpedu.lk**

**திகதி: 2023-07-07.**

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை — 2023

இப் பரீட்சைக்காக நிகழ்நிலை (Online) முறைமையில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (https://donets.lk) அல்லது நிகழ்நிலை பரீட்சை இணையத்தளத்தில் (https://onlineexams.gov.lk/eic) அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் செல்லிடத் தொலைபேசி செயலிக்குள் ('DoE' Mobile app) நுழைவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்க முடியும்.

இப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றவுள்ளவர்களின் விண்ணப்பங்கள் 2023 ஜூலை 07ஆம் திகதியிலிருந்து ஜூலை 28ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக்கொண்டு மேற்படி இணையத்தளத்தினுள் நுழைந்து நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த நகரத்தையும் பாடங்களையும் குறிப்பிடும் போது சரியாகக் குறிப்பிட வேண்டுமென்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஒரு பரீட்சார்த்திக்கு ஆகக்கூடியது பிரதான பாடங்களில் 03 பாடங்களுக்கு மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும். அதற்கு மேலதிகமாக அவசியமேற்படுமிடத்து பாட இலக்கம் 12 - பொதுச் சாதாரண பரீட்சைக்கும், பாட இலக்கம் 13 - பொது ஆங்கிலம் பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

**பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் போது இரண்டு பிரதான படிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.**

**1வது படிமுறை** - விவரங்களை உள்ளடக்கி 'குறிப்பு இலக்கத்தை' (Reference number) பெற்றுக்கொள்ளல் உங்களது தனிப்பட்ட விவரங்களையும் பரீட்சை தொடர்பான விவரங்களையும் பாடங்கள் தொடர்பான விவரங்களையும் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான விவரங்களையும் உள்ளடக்குக. நீங்கள் அஞ்சல் அலுவலகம் மூலம் கொடுப்பனவு செய்யின் குறிப்பு இலக்கம் (Reference number) ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2வது படிமுறை** - பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'குறிப்பு இலக்கத்தை' (Reference number) அஞ்சல் அலுவலகத்தில் வழங்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) உள்ள இணைப்பை (link) செயற்படுத்தியோ அல்லது மீண்டும் வலைத்தளத்தில் நுழைந்தோ உங்களுக்கு கிடைக்கப்பெறும் "Download AL 2023 Application" ஐ தெரிவு செய்து (Click) உங்களது விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். நீங்கள் வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்துவதாயின் அது சரியாக நிறைவுற்ற பின்னர் மேலேயுள்ள icon ஐ பயன்படுத்தி விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**பரீட்சைக் கட்டணத்தை அஞ்சல் அலுவலகம் மூலம் அல்லது எந்தவொரு வங்கி அட்டைகள் மூலமாகவும் செலுத்த முடியும்.**

**02. விண்ணப்பப்படிவம்**

**அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதனை அச்சுப்பிரதியெடுத்துக் கொள்ளவும். அச்சுப் பிரதியை தங்கள் பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து அதனை சமர்ப்பிப்பதற்கு தயாராகவும் இருத்தல் வேண்டும்.**

**அரச பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பிக்குமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

**2.1 முறைமைக்குள் பிரவேசித்தல் - 1வது படிமுறை**

(i) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் இணையத்தளத்தில் நுழைந்து 'எமது சேவை' என்பதின் கீழுள்ள 'நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)' Click செய்க. அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (Mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து 'நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)'ஐ Click செய்க. அல்லது
- https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

(ii) "G.C.E. AL - 2023 Application for student Registration" (Private) எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

(iii) உங்களின் தனிப்பட்ட தகவல்கள், தோற்றவுள்ள நகரம், மொழிமூலம் என்பவற்றை தெரிவு செய்த பின்னர் தோற்றவுள்ள பாடங்களை தெரிவு செய்து உள்ளடக்க முடியும்.

(iv) (அ) **(13) பொது ஆங்கிலம்:**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கு மேலதிகமாக பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். இப்பாட பெறுபேறு பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது. இப் பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த. (உ.தரப் பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடப்படும்.

(ஆ) **(12) பொதுச் சாதாரண பரீட்சை:**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெற எதிர்பார்த்திருப்பின் கட்டாயமாக குறைந்தது 30 புள்ளிகளைப் பெறல் வேண்டும். இதற்கு முன்னர் (உ.தரப்) பரீட்சைக்குத் தோற்றி அவர் 30 புள்ளிகளுக்கு அதிகம் பெற்றிருப்பாராயின் மீண்டும் தோற்ற வேண்டிய கட்டாயமில்லை.

(இ) **செய்முறைப் பரீட்சையுடன் கூடிய பாடங்கள்**

பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இவ்விரு வகைப் பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் இப்பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும். செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதியில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். உரிய தினத்தில் தோற்றத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் செய்முறைப் பரீட்சை முழுமையாக நிறைவுற்ற பின்னர் மீண்டும் ஒருமுறை செய்முறைப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது.

(ஈ) கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் 'குறித்த பாடத்துறைகளில் எதிலும் அடங்காத' (Nonstream) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் 'நாடளாவிய தரம் (Island Rank) மற்றும்' மாவட்ட தரம் (District Rank) வெளியிடப்படமாட்டாது. அச்சுற்று நிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்க வேண்டியேற்படும் பிரச்சினைகள் தொடர்பான எந்த பொறுப்புக்களையும் இத்திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2 2023.07.28ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பிக்க முடியாது.

2.3 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப முடியும். தகவல்களை மாற்றி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் சந்தர்ப்பத்தில் அவரது சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் சட்டநடவடிக்கைகளுக்கமைய தண்டணைக்குள்ளாவார்.

**03. பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் - 2வது படிமுறை**

பரீட்சைக் கட்டணம் அஞ்சல் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

3.1 அஞ்சல் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் "Payment method" இன் கீழுள்ள "Pay by postal Department" எனும் இணைப்பைத் தெரிவு செய்க. உங்களுக்கு அங்கு கிடைக்கப்பெறும் 'குறிப்பு இலக்கத்தை' (Reference number) தபால் அலுவலகத்தில் வழங்கிய உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். பணத்தை செலுத்திய பின்னர் பரீட்சைத் திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்ய முடியும்.

**கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள இணைப்பை (Link) செயற்படுத்துவதன் மூலம் உரிய விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.**

3.2 வங்கி அட்டைகள் (Credit / Debit Card) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit/ debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் (ரூபா) | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

04. உங்கள் விண்ணப்பத்திலுள்ள தகவல்களுக்கு அமைய பரீட்சை அனுமதிப்பத்திரம் உங்களுக்கு கிடைக்கப்பெறும். பரீட்சை அனுமதி அட்டையில் ஏதேனும் மாற்றம் செய்யவே வேண்டியிருப்பின் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்னர் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினுள் நுழைந்து (07) நாட்களுக்குள் உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

05. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு கிடைக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்திற்குமிடையே வேறுபாடுகள் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் உங்களுக்கு அனுமதிப்பத்திரம் கிடைத்தவுடன் உடனடியாக கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு கிளைக்கு தொடர்பு கொள்ள வேண்டும்.

06. **சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் தமது நிரந்தர வதிவிட முகவரியையும் தமது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்ற தனியார், சர்வதேச பாடசாலைகள்/ தனியார் நிறுவனங்களால் நடாத்தப்படும் பெயர், முகவரியையோ, தொலைபேசி இலக்கத்தையோ குறிப்பிடலாகாது**

07. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் எல்லா சந்தர்ப்பத்திலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு தாமதமின்றி சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

08. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும்/ கட்டணம் அறவிடும்/ அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும்/ அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

09. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் "Candidats with Special Education Needs" இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

**குறிப்பு:** இப்பரீட்சை தொடர்பாக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும்மாட்டாது.

**இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திற்கோ அல்லது ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கோ தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டுமே, பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது என்பதால் அதற்காக எந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் அவசியமற்றது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும். இது தொடர்பாக வைத்திய சான்றிதழ்களையோ வேண்டுகோள்களையோ திணைக்களத்திற்கு அனுப்புவது அவசியமற்றது.**

2022(2023) க.பொ.த. (உ.தரப்) பரீட்சைக்குத் தோற்றி இம்முறை பரீட்சைக்கு இரண்டாவது அல்லது மூன்றாவது தடவையாக தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு இப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் : 011-2784208/011-2784537/ 011-2786616 தொலைநகல் இலக்கம் : 011 - 2784422**

**தொடர்பு எண் : 6/3/AL/2023**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**த.பெ.1503, கொழும்பு.**
2023.07.06

**எச்.ஜே.எம்.சீ. அமீத் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்.**

## மீட்டெடுக்கப்படாத அடகு தங்க ஆபரண ஏல விற்பனை

மக்கள் வங்கியின் கேகாலை பிராந்தியத்துக்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2022ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டுள்ள 21.07.2023 திகதி வரை மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| ஏல விற்பனை திகதி | 2023.07.22 (சனி தினம்)<br>2023.07.23 (ஞாயிறு தினம்) | | | |
|---|---|---|---|---|
| ஏல விற்பனை இடம் | கேகாலை கிளை வளாகம் | ருவன்வெல்ல கிளை வளாகம் | மாவனெல்லை கிளை வளாகம் | வரக்காப்பொல கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளை | கேகாலை, கேகாலை கடை வீதி, புலத்கொஹுபிட்டிய. ரம்புக்கன, கொட்டியாகும்புர | ருவன்கெல்ல, எட்டியாந்தோட்டை, தெரனியகல, தெஹிஓவிட்ட | மாவனெல்லை ஹெம்மாத்தகம, அரநாயக்க | வரக்காபொல, துல்ஹிரிய, கலிகமுவ, கோனகல்தெனிய |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் | மொரொன்தொட்ட, தேவாலகம, பத்தம்பிட்டிய | கரவனல்லை, கித்துல்கம | மாவனெல்லை, அலுத்நுவர | அல்கம, கலப்பிட்டமட, ஹொரகஸ்மங்கட, நெலந்தெனிய, அமித்திரிகல |

மேற்குறிப்பிட்ட பிரகாரம் நடைபெறவுள்ள இந்த ஏல விற்பனை மறுஅறிவித்தல் ஏதுமின்றி வங்கியின் விருப்பத்திற்கு ஏற்ப இரத்துச் செய்தல், ஒத்தி வைத்தல் அல்லது ஒன்றினைத்து நடாத்தல் ஏல விற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைத்தல் போன்ற எந்த நடவடிக்கையையும் எடுக்கும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல.17, வின்ஸ்ட்டன் விக்கிரமசிங்க மாவத்தை,**
**கேகாலை.**
**தொலைபேசி இல. 035-2222300, 035-2222396**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மேல் மாகாண உயர் நீதிமன்றம் - கொழும்பு 12

## கேள்வி அழைப்பு

### தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குதல் — 2023/ 2024

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக கொழும்பு உயர் நீதிமன்றத்தின் பெறுகைக்குழுவினால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | Name of Bidder / Name of Courts | Estimated Amount (Rs.) | Non Refundable Bid Document Fee (Rs.) |
|---|---|---|---|
| 01 | கொழும்பு உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி | 7,260,000.00 | 2500/- |

மேற்படி வேலை சம்பந்தமான சகல விபரங்களையும் கேள்வி ஆவணங்களுடன் பெற்றுக் கொள்ளலாம், கேள்வி ஆவணங்களை கொழும்பு உயர் நீதிமன்ற கணக்குப் பிரிவில் 2023.07.07 முதல் 2023.07.28 வரை கடமை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடையில்) பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள், 2023.07.28 பி.ப. 2.00 வரை ஏற்கப்படும். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் கொழும்பு உயர் நிதிமன்றத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அதற்காக கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து, கொழும்பு உயர் நீதிமன்றத்தின் பிரதம பதிவாளரை அழையுங்கள். தொலைபேசி 011-2438893, எந்த கட்டணமும் இன்றியே கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயர் நீதிமன்றம்**
**கொழும்பு-12**

## கைத்தொழில் அமைச்சு

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

### Core Switch And Network ITems களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் இயக்குவதற்கான விலைமனுக்கோரல்

### விலைமனு இல - SUP/SD/23/121

### தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) முறைமை

Core Wsitch and Network Items களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் இயக்குவதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார். விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) முறைமையூடாக நடத்தப்படும்.

1. அரச நிறுவனங்களுக்கு சமமான உபகரணங்களை வழங்குதலில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தக்கூடிய இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஓர் நிபந்தனையற்ற உத்தரவாதத்துடனான ரூ. 100,000/- (ரூபா. ஒரு லட்சம்) பெறுமதியான விலைமனுப்பிணையுடன் எல்லா தகைமையான விலைமனுக்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கல்கள் பிரிவு, சிரேஷ்ட வழங்கல்கள் அலுவலரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல. 0112797314 அல்லது 0112797315, பெக்ஸ் 0112379832, email: sso@iti.lk அல்லது வழங்கல்கள் பிரிவில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரிசீலிக்கலாம்.
4. 2023.07.07 முதல் 2023.07.26 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இற்கு இடையில் வேலை நாட்களில் மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்ட்ன்ஸ், இல. 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், பணிப்பாளர் நாயகத்திற்கு, ஓர் மீளளிக்கப்படாத ரூபா 2500/- ஐ காசாக செலுத்துவதன் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து விலைமனு ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் ஓர் வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். ஓர் வங்கி வரைவு இன்றி கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக்கள், மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ் 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம். பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டு விலைமனு ஆவணத்தின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், மனிதவள பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.07.27 மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு, பொறியிடப்பட்ட உறையில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'விலைமனு இலக்கம் மற்றும் விலைமனு மூடப்படும் திகதி' குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. ஒப்பந்தம் ஐந்து மில்லியன் ரூபாவிற்கு மேற்படுமாயின் 1987ஆம் ஆண்டின் இல. 03, பொது ஒப்பந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலைமனு ஆவணங்களை, நிறுவன இணைய தளம் www.iti.lk இலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.
9. பெறுகைக் குழுவின் தீர்மானம் எல்லா வேளைகளிலும் இறுதித் தீர்மானமாக இருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்,**
**இல. 503A, ஹல்பராவ கார்ட்டன்ஸ், தலாஹேன, மாலபே.**

## மல்வத்தவெலி பிளான்டேஷன்ஸ் பிஎல்சி

தலவத்துகொட - ஹோகந்தர - பன்னிப்பிட்டிய - குடியிருப்புப் பிரதேசங்களுக்கு அருகில் வசிக்கும் அனுபவமுள்ள ஓர் நடுத்தர வயது சாரதியின் சேவை தேவை.

ஆர்வமுள்ளோர் தமது விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ்/ தே.அ.அட்டை மற்றும் முன்னைய தொழில் வழங்குநர்களால் வழங்கப்பட்ட ஏனைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**"நிறைவேற்றுப் பணிப்பாளர் - நிர்வாகம் மற்றும் தோட்டங்கள்**
**M/s மல்வத்தவெலி பிளான்டேஷன்ஸ் பிஎல்சி,**
**தலைமையகம் - இல. 280, டாம் வீதி, கொழும்பு-12"**

## வட மேல் மாகாண சபை
## பிரதம செயலகம்
## திட்ட ஆலோசனைகளைக் கோரல்

வடமேல் மாகாண சபைக்குச் சொந்தமான அரச கட்டிடங்களின் கூரைமேல் வாடகை அடிப்படையில் சூரிய சக்தி வோல்ட் உற்பத்தி அமைப்பினை பொருத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மற்றும் தனி நபர்களிடமிருந்து 2023 ஓகஸ்ட் 23ம் திகதி வரை செயற்றிட்ட ஆலோசனைகள் கோரப்படுகின்றன.

மேற்படி துறையில் அனுபவமுள்ள கம்பனிகள் மற்றும் தனி நபர்களுக்கு அவர்களது ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது இதற்குத் தேவையான ஆவணங்களை 2023 ஜுலை 07 முதல் 2023 ஓகஸ்ட் 22 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான அலுவலக நேரங்களில் பிரதம செயலகம், பொறியியல் சேவைகள் பிரிவு, 3ஆம் மாடி, E கட்டிடம், வடமேல் மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, குருநாகளையில் இலங்கை ரூபா ஐயாயிரம் (ரூ. 5000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ளலாம்.

**ஆலோசனை பிணை முறி**
இலங்கையில் செயற்படும் எந்த வர்த்தக வங்கியிலிருந்து அல்லது காசாக, இலங்கை ரூபா. ஒரு இலட்சம் (ரூ. 100,000.00) தொகையை ஆலோசனை பிணைமுறியாக ஆலோசனையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். ஆலோசனை செல்லுபடிக் காலம் 2023 நவம்பர் 21 வரையானதாக இருப்பதுடன் ஆலோசனை பிணை முறி 2023 டிசம்பர் 19 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஆலோசனை கம்பனிகள் அல்லது தனிநபர்கள் தமது கேள்வி ஆலோசனைகளை 2023 ஓகஸ்ட் 23 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பிரதம செயலகம், பொறியியல் சேவைப் பிரிவு, 3ஆம் மாடி, E கட்டிடம், வடமேல் மாகாண சபை கட்டிடத் தொகதி, குருநாகல் இற்கு ஒப்படைத்தல் வேண்டும். ஆலோசனைகள் சமர்ப்பிக்கும் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக ஆலோசனைகள் திறக்கப்படும். ஆலோசனை வைப்போர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதி நிதிகளுக்கு ஆலோசனை திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.

ஆலோசனைகளை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் சம்பந்தமாக ஆலோசனை சமர்ப்பிப்போரினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் பற்றி வடமேல் மாகாண சபையினர் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

**கேள்விக்கு முன்னரான கூட்டம்**
கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023 ஜுலை 24ம் திகதி மு.ப. 10.00 இற்கு, கூட்ட மண்டபம், 2ஆம் மாடி, E கட்டிடம், வடமேல் மாகாண சபை கட்டிடத் தொகுதி, குருநாகலில் நடைபெறும் ஆலோசனை சமர்ப்பிப்போருக்கு மேலதிக தகவல்களை பெற்றுக் கொண்ட பின்னர் குறித்த கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்த்து அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**அலுவலக முகவரி:-** பிரதம செயலகம், பொறியியல் சேவைப் பிரிவு, 3ஆம் மாடி, E கட்டிடம், வடமேல் மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, குருநாகல்.
தொலைபேசி இலக்கம் 037-2227664

**பிரதம செயலாளர்/ தலைவர்,**
**பெறுகைக் குழு, பிரதம செயலகம்,**
**வடமேல் மாகாண சபை குருநாகல்**
**2023.07.07**

## மக்கள் வங்கி
### ஹிக்கடுவை (136)

### 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாரான 1961 ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டீ (29D) எனும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி (29D) எனும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2023.03.31ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

பலப்பிட்டிய வக்கீல் பிரசித்த நொத்தாரிசு அஜந்தா கபுகமகே என்பவரால் 2016.10.10 திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 12090 காலி பிரசித்த வக்கீல் மற்றும் பிரசித்த நொத்தாரிசு டப்ளியு.ஜீ.ஜீ.ஐ. குணரத்ன என்பவரால் 2018.08.24ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 7910 ஈட்டு முறிகளின் பிரகாரம் கொடுப்பனவில்

ஹிக்கடுவை ஆராச்சி கந்தையில் குடியிருக்கும் நானாயக்கார விதானகே லாலனி மற்றும் அகம்பொடி அஜித் எதய குமார என்பவர்களால் தவணை தவறியுள்ளார்கள் ஆதலால் மேற்படி முறியின் கீழ் தற்பொழுது தொன்னூறு லட்சத்து அறுபத்தாறாயிரத்து நானூற்றி அறுபத்தாறு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 9,066,466.56) மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2023.02.23ஆந் திகதியில் இருந்து கிழமைக்கு சாதாரண முதன்மை கடன் கொடுப்பனவின் படி (Weekly AWPLR) + 6.5% வீதப்படி நாற்பத்தொரு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எண்ணூற்றி ஐம்பது ரூபா தொன்னூறு சதம் (4,168,850.90) பணமும் வருடத்திற்கு கிழமைக்கு சாதாரண முதன்மை கடன் கொடுப்பனவின் படி (Weekly AWPLR) + 4.5% வீதப்படி இருபது லட்சத்து தொன்னூற்றி ஒன்பதாயிரத்து ஒன்பது நூற்றி ஐம்பது (2,090,950.00) பணத்துக்காக ஏல விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கி சட்டத்தின் (29L) 29எல் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து தொன்னூறு இலட்சத்து அறுபத்தாராயிரத்து நானூற்றி அறுபத்தாறு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 9,066,466.56) பணமும் அறவிடுவதற்காக இல. 11/55 போகஹவத்தை குடா புத்கமுவ, அங்கொடயில் குடியிருக்கும் அதிகாரம் பெற்ற ஏலதாரர் எரன்ததி சமன்மலீ ராமநாயக என்பவரால் மேலே குறிப்பிட்ட இலக்கம் 12090 மற்றும் 7910 என்ற ஈட்டு முறிகளின் பிரகாரம் ஈடு வைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தல் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 இலக்கம் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின் விபரம்**

தென் மாகாணம் காலி மாவட்டம் வெல்லபட பத்துவே கோணபினுவல பிரதேச செயலாளர் பிரிவு அம்பலாங்கொடை பிரதேச சபை எல்லைக்குள் 59A, ஆரச்சிகறந்த கிராம சேவகர் பரிவு ஆரச்சிகந்தயில் அமைந்துள்ள படல்கொட ஆரச்சிகே கந்த என்ற காணிக்கு வேறாக்கிய இலக்கம் 14 என்ற துண்டுக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் என்.ஸி.ஏ. இந்ரரத்ன என்பவரால் 2013.07.22 திகதிய இலக்கம் 1625/2013 என்ற வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய இலக்கம் 5 என்ற துண்டுக்கான எல்லைகள்:-

**வடக்கிற்கு:** எல் லியனகே எண்பவருக்கு உரித்தான இக்காணியின் இலக்கம் 8 என்ற துண்டும்
**கிழக்கிற்கு:** மில்டன் என்பவருக்குச் சொந்தமான துண்டும்
**தெற்கிற்கு:** சந்தியா பண்டித என்பவருக்கு சொந்தமான இக்காணியின் இலக்கம் 3 என்ற துண்டு மற்றும் ஏ. பீ. ஏ. எதய குமார என்பவருக்கு சொந்தமான இக்காணியில் இலக்கம் 4 துண்டும்
**மேற்கிற்கு:** இக்காணியின் இலக்கம் 13 என்ற அடி 12 அகல வீதியும்

இதன் எல்லைகளாகும் இந்த நான்கு எல்லைகளுக்குள்ளும் பர்ச்சஸ் இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (ஏ.00 றூ.00 பர்.29.25) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள மரம் மட்டைகள், கட்டடங்கள் பழங்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

**இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் M52/74 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**மேலே குறிப்பிட்ட இலக்கம் 1625/2013 வரைபடத்தில் இக்காணியின் இலக்கம் 13 என்ற அடி 12 அகல வீதியின் உரிமையும் உண்டு**

**பணிப்பாளர் சபை கட்டளைப்படி**

**மக்கள் வங்கி,**
**பிரதேச பிரதான காரியாலயம்,**
**இல. 22, கீழ் டிக்ஸ்ன் வீதி, காலி.**

**பிரதேச முகாமையாளர்,**
**காலி**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப.9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 01/04/2023 | 01/05/2023 | 24, 25, 28 /07/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் றகுமத் நகர், நாவலடி, தியாவட்டுவான் எனும் விலாசத்தில் வசிக்கும் நான் கடந்த 2021.12.23ம் திகதி புனித இஸ்லாத்தை தழுவிக் கொண்டு வனிதா என்ற எனது பெயரை பாத்திமா சப்னா என்று மாற்றியுள்ளேன். அதன் பின்னர் எனது அனைத்து ஆவணங்களிலும் பாத்திமா சப்னா என்று உள்ளதால் எனது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் பாத்திமா சப்னா என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.
**- குலராஜன் பாத்திமா சப்னா**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் பஸார் பள்ளி வீதி. ஓட்டமாவடி-01 எனும் விலாசத்தில் வசிக்கும் பஸ்றியா ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் 'பஷிரியா' என வைக்கப்பட்டுள்ளது எனது குடும்பத்தாராலும் உறவினர்களாலும் பஸ்றியா என அழைக்கப்படுவதாலும் எனது சகல ஆவணங்களிலும் பஸ்றியா என்று உள்ளதாலும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பஸ்றியா என மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.
**- ஏ.யூ. பஸ்றியா**

### 1986 இன் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை

## மக்கள் வங்கி
### (பெருநிறுவன வங்கியியல் பிரிவு)

### நாஉல, மாத்தளையில் உள்ள பெறுமதிமிக்க சொத்தொன்றின் ஏல விற்பனை

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திலுள்ள மாத்தளை கிழக்கின் அம்பன்கங்க கோறளையில் நாஉல பிரதேச சபை எல்லைகளுக்கிடையே நாஉல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அண்டவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹெல்ம் பிளான்டேசன் என தற்போது அழைக்கப்படுவதும், முருங்ககஹமுலஹேன பதுல்லஹமுலஹேன மஹேத்தம்பஹேன். தெட்டவகெஹேன். கிரிவனஹெலவத்த எம்பில்லவெலாகொல்ல, முதுனேபிட்டஹேன, திவுறும்மெடெல்லேயாய, வெலிகந்தவத்த, ரிலவத்த தொடங்கஹமுலத்தென்னேவத்த, பிற்றகந்த, போகலவத்த தொடங்கஹமுலத்தென்னேகும்புர மற்றும் கலபிற்றகெதரவத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணிக்கு, உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் காமினி பீ தொடங்வல என அழைக்கப்படுபவரினால் தயாரிக்கப்பட்ட 2010.12.03ஆம் திகதிய 8177ஏ ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் விவரிக்கப்பட்ட "லொட் ஏ" எனக் குறிக்கப்பட்ட சகல பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணி

**ஐம்பத்தியொன்பது ஏக்கர்கள் ஒரு ரூட் மற்றும் ஆறு தசம் ஆறு ஐந்து பேர்ச்சுகள் (A59.R1.P.6.65) அல்லது 23.9944 ஹெக்டேயர்கள் பரப்பளவைக் கொண்டது** அத்துடன் கட்டடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திலுள்ள மாத்தளை கிழக்கின் அம்பன்கங்க கோறளையில் நாஉல பிரதேச சபை எல்லைகளுக்கிடையே நாஉல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அண்டவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹெல்ம் பிளான்டேசன் என தற்போது அழைக்கப்படுவதும், முருங்ககஹமுலஹேன பதுல்லகஹமுலஹேன, மஹேத்தம்பஹேன, தெட்டவகெஹேன, கிரிவனஹெலவத்த எம்பில்லவெலாகொல்ல முதுனேபிட்டஹேன திவுறும்மெடெல்லேயாய, வெலிகந்தவத்த, ரிலவத்த தொடங்கஹமுலத்தென்னேவத்த, பிற்றகந்த, போகலவத்த. தொடங்கஹமுலத்தென்னேகும்புர மற்றும் கலபிற்றகெதரவத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணிகளின், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் காமினி பீ தொடங்வல என அழைக்கப்படுபவரினால் தயாரிக்கப்பட்ட 2010.12.03ஆம் திகதிய 8177ஏ ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் விவரிக்கப்பட்ட "லொட் பீ" எனக் குறிக்கப்பட்ட சகல பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணி

**இரண்டு ஏக்கர்கள் ஒரு ரூட் மற்றும் இருபது தசம் ஆறு ஐந்து பேர்ச்சுகள் (A2. R1.P20.65) அல்லது 00.9628 ஹெக்டேயர்கள் பரப்பளவைக் கொண்டது** அத்துடன் கட்டடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திலுள்ள மாத்தளை கிழக்கின் அம்பன்கங்க கோறளையில் நாஉல பிரதேச சபை எல்லைகளுக்கிடையே நாஉல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அண்டவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹெல்ம் பிளான்டேசன் என தற்போது அழைக்கப்படுவதும், முருங்ககஹமுலஹேன பதுல்லகஹமுலஹேன, மஹேத்தம்பஹேன, தெட்டவகெஹேன, கிரிவனஹெலவத்த. எம்பில்லவெலாகொல்ல, முதுனேபிட்டஹேன, திவுறும்மெடெல்லேயாய, வெலிகந்தவத்த ரிலவத்த தொடங்கஹமுலத்தென்னேவத்த பிற்றகந்த போகலவத்த தொடங்கஹமுலத்தென்னேகும்புர மற்றும் கலபிற்றகெதரவத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணிகளின், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் காமினி பீ தொடங்வல என அழைக்கப்படுபவரினால் தயாரிக்கப்பட்ட 2010.12.03ஆம் திகதிய 8177ஏ ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் விவரிக்கப்பட்ட "லொட் சி" எனக் குறிக்கப்பட்ட சகல பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணி

**இருபத்திமூன்று ஏக்கர்கள் மூன்று ரூட்கள் மற்றும் இருபத்தேழு தசம் மூன்று பூச்சியம் பேர்ச்சுகள் (A23.R3.P27.30)** அல்லது 09.6803 ஹெக்டேயர்கள் பரப்பளவைக் கொண்டது அத்துடன் கட்டடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திலுள்ள மாத்தளை கிழக்கின் அம்பன்கங்க கோறளையில் நாஉல பிரதேச சபை எல்லைகளுக்கிடையே நாஉல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அண்டவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹெல்ம் பிளான்டேசன் என தற்போது அழைக்கப்படுவதும், முருங்ககஹமுலஹேன பதுல்லகஹமுலஹேன், மஹேத்தம்பஹேன், தெட்டவகெஹேன. கிரிவனஹெலவத்த, எம்பில்லவெலாகொல்ல, முதுனேப்பிட்டஹேன, திவுறும்மெடெல்லேயாய, வெலிகந்தவத்த, ரிலவத்த தொடங்கஹமுலத்தென்னேவத்த, பிற்றகந்த, போகலவத்த தொடங்கஹமுலத்தென்னேகும்புர மற்றும் கலபிற்றகெதரவத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணிகளின், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் காமினி பீ தொடங்வல என அழைக்கப்படுபவரினால் தயாரிக்கப்பட்ட 2010.12.03 ஆம் திகதிய 8177ஏ ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் விவரிக்கப்பட்ட "லொட் டி" எனக் குறிக்கப்பட்ட சகல பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணி

**பத்து ஏக்கர்கள் ஒரு ரூட் மற்றும் பூச்சியம் பூச்சியம் தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (A10.R1.P00.25) அல்லது 4.1487 ஹெக்டேயர்கள் பரப்பளவைக் கொண்டது** அத்துடன் கட்டடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக

**மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், 2023 யூலை 21ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 இற்கு ஆரம்பித்து அவ்விடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**குறித்த ஆதனத்திற்கு செல்லும் வழி**
மாத்தளையிலிருந்து தம்புள்ளை பிரதான வீதியூடாக மடவளை உல்பொத மக்கள் வங்கி அடகு வைப்பு நிலையம் வரை சுமார் 16 கிலோமீற்றர் செல்லவும். பின் அண்டவெல வீதியில், மேற்கூறிய அடகு நிலையத்திற்கு முன்னால் உள்ள புத்தர் சிலையிலிருந்து வலதுபுறம் திரும்பி, மேலும் 12 கிலோமீட்டர் தொலைவில் அண்டவெல பேருந்து நிலையத்திற்குச் செல்லவும். விடயத்திற்குரிய சொத்து அதிலிருந்து தொடங்குகிறது.

**தீர்மான அறிவித்தல் பொருட்டு**
2018 நவம்பர் 09ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018 ஒக்ரோபர் 26ஆம் திகதிய டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**
வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை பணமாக, ஏலத்தின்போது சம்மட்டி ஒலி எழுப்புகையில் செலுத்துதல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10% (பத்து சதவீதம்)
2. உள்ளூராட்சி அதிகாரசபைக்கு செலுத்தத்தக்க உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
3. கொள்வனவு விலை மீது ஏலதாரரின் தரகுத்தொகை 2 1/2 % (இரண்டு தசம் ஐந்து சதவீதம்)
4. விற்பனைச் செலவு மற்றும் ஏனைய சகல கட்டணங்கள். ஏதேனும் இருப்பின்
5. கொள்வனவு விலையின் மீதி 90% இனை ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் உதவிப் பொது முகாமையாளர், மீள்அறவீடுகள் திணைக்களம், மக்கள் வங்கித் தலைமை அலுவலகம், 10 ஆம் மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 (தொலைபேசி இல. 011-2481613, 011-2481514) இற்குச் செலுத்துதல் வேண்டும்.
6. விற்பனைச் சான்றிதழிற்கான முத்திரைத் தீர்வை வரி

மேலே விதித்துரைக்கப்பட்டவாறு, 30 நாட்களுக்குள் குறித்த தொகை செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10%ஐ பறிமுதல் செய்து சொத்தை மீள்விற்பனை செய்ய வங்கிக்கு அதிகாரம் உண்டு. மேற்குறிப்பிட்ட முகவரியிலிருந்து தலைப்புக் காணி உறுதிகள் மற்றும் வேறு ஏதேனும் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம். முன்னறிவித்தலின்றி மேற்படி ஏல விற்பனையை நிறுத்துவதற்கோ அல்லது ரத்து செய்வதற்கோ வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**டளஸ் கெலார்ட்**
**சிறப்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர்**
**இல. 146/3, கல்தெர கார்டின்ஸ்,**
**துட்டுகெமுனு வீதி, கொஹுவல**
**தொலைபேசி இல: 011-4357467, 011-4367111**

PEOPLE'S BANK
Pride of the Nation

# கால்பந்து தடை தொடர்பில் பிஃபாவுடன் அமைச்சர் ஜூலை 10இல் பேச்சுவார்த்தை






இலங்கை கால்பந்து மீதான சர்வதேச தடையை அகற்றுவது தொடர்பாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள் சூம் தொழில்நுட்பம் வழியாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளன அதிகாரிகளுடன் வரும் ஜூலை 10 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

கடந்த வாரம் சுவிட்சர்லாந்தில் உள்ள பிஃபா தலைமையகத்திற்கு விஜயம் மேற்கொண்ட விளையாட்டுத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகள், தடைக்குக் காரணமான விடயங்கள் பற்றி பிஃபா அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடந்த ஆண்டு இலங்கை வந்த பிஃபா அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவாதங்களை அளித்த நிலையிலேயே, அவர் சூரிச் வரை சென்று பேச்சுவார்த்தைக்குக் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

"தேர்தல் மூலமாக தேர்வு செய்யப்படும் நிர்வாகத்தின் பதவிக் காலத்தை நான்கு ஆண்டுகளாக்குவதற்கும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்தலை நடத்துவதற்கும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அதேபோன்று செயலாளர் நாயகம் பதவிக்கு பதில் தலைமை நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிப்பதும் அவர்களின் கோரிக்கையில் உள்ளது" என்று அமைச்சர் தெரித்துள்ளார்.

"2014 ஆம் ஆண்டிலேயே இந்த மாற்றங்கள் இலங்கை கால்பந்து யாப்பில் இணைக்கப்பட வேண்டும் என்று பிஃபா கோரியிருந்தபோதும், அது தொடக்கம் வந்த எந்த ஒரு விளையாட்டு அமைச்சரும் இந்த மாற்றத்தை செயற்படுத்தவில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"துரதிருஷ்டவசமாக இன்று இருவர் பேசும் உண்மையை விடவும் 100 திருடர்களின் வார்த்தைகள் அதிக நம்பகமாக பார்க்கப்படுவதோடு உலக ரக்பி சம்மேளனத்தினால் இலங்கை ரக்பிக்கு தடை விதிக்கப்படுவதற்கும் இதே நிலை தான் காரணமாகும்" என்று ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

"இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் பிஃபா தடை விரைவில் அகற்றப்படும் என்றும் நான் உறுதியாக உள்ளோன்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அரச தலையீட்டை காரணம் காட்டியே சர்வதேச கால்பந்து சம்மேளனம் இலங்கை கால்பந்து சம்மேளத்தின் மீது தடையை கொண்டுவந்தது. இந்தத் தடையால் இலங்கைக்கு சர்வதேச கால்பந்து போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை நீடித்து வருகிறது.

# தமீம் இக்பால் திடீர் ஓய்வு



ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கும் நிலையில் பங்களாதேஷ் ஒருநாள் அணித் தலைவர் தமீம் இக்பால் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சிட்டகோனில் நேற்று (06) செய்தியாளர்கள் முன் தோன்றிய தமீம் உணர்ச்சிவசப்பட்டவராக கண்ணீருடன் இந்த அறிவிப்பை வெளியிட்டார். கடந்த புதன்கிழமை நடந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 17 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

"இது எனது முடிவாகும். என்னால் முடிந்ததை நான் கொடுத்துள்ளேன். இந்தத் தருணத்தில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து நான் ஓய்வு பெறுகிறேன்" என்று அவர் தெரிவித்தார்.

"இது திடீர் முடிவாக இருக்கவில்லை. பல்வேறு காரணங்களால் இது பற்றி சிந்தித்து வந்தேன். அது பற்றி இங்கு கூற விரும்பவில்லை. இது பற்றி எனது குடும்ப உறுப்பினர்களுடன் நான் பேசினேன். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற இது சரியான நேரம் என்று நான் நினைக்கிறேன்" என்றும் இக்பால் தெரிவித்தார்.

34 வயதான தமீம் இக்பால் கடந்த ஆண்டு டி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்கு பதில் புதிய ஒருநாள் அணித் தலைவரை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இன்னும் அறிவிக்கவில்லை. டி20 போட்டிகளில் ஷகீப் அல் ஹசன் அணித் தலைவராக செயற்படுவதோடு டெஸ்ட் அணித் தலைவராக லிட்டோன் தாஸ் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியனானது சோபர்



சினத் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் அனுசரணையில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அதா உல்லாஹ் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற இறுதிப் போட்டியில் நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட சோபர் அணி 52 ஓட்ட வெற்றி இலக்கை நிர்ணயித்த நிலையில் எதிரணியை 31 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது.

சோபர் அணி இதுவரை மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தொடர்ச்சியாக ஆறு வெற்றிக் கிண்ணங்களை வென்றுள்ளது.

# சுப்பர் யூத் அணி வெற்றி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**




கெக்கிராவ உடநிதிகம அல் இம்ரான் விளையாட்டு கழகத்தின் 31 ஆவது வருட நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட 64 ஆவது கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கெக்கிராவ சுப்பர் யூத் விளையாட்டு கழகம் சம்பியனானது.

உடநிதிகம அல் இம்ரான் விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை (03) நடைபெற்ற இறுதிப் போட்டியில் விஜதபுர விளையாட்டு கழகத்தையே சுப்பர் யூத் அணி வீழ்த்தியது. இதன் தொடர் நாயகனாக சுப்பர் யூத் அணியின் அருஸ் தெரிவானார்.

# நேகம ரோயல்ஸ் சம்பியன்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் நான்காவது முறையாகவும் நடாத்தப்பட்ட நிவ் ஸ்டார் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டியில் நேகம ரோயல்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரில் ஆறு அணிகள் கலந்து கொண்டன. கடந்த திங்கட்கிழமை (03) நடைபெற்ற இறுதிப் போட்டியில் பெங்டவுன் பேயார் பொயிஸ் அணியினரை ரோயல்ஸ் அணி ஐந்து ஓட்டங்களால் வென்றது.

# உக்ரைனில் தொடர்மாடி மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## நான்கு பொதுமக்கள் பலி



மேற்கு உக்ரைனிய நகரான லெவிவில் உள்ள தொடர்மாடி குடியிருப்பு ஒன்றின் மீது ரஷ்ய ரொக்கெட் குண்டு விழுந்து குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டதாக உக்ரைன் உள்துறை அமைச்சர் இஹோர் கிலிமென்கோ தெரிவித்துள்ளார்.

இதில் மேலும் 32 பேர் காயமடைந்திருப்பதோடு நகரின் சிவில் உட்கட்டமைப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவென்று அந்த நகர மேயர் தெரிவித்துள்ளார். எனினும் இந்த தாக்குதல் பற்றி ரஷ்ய தரப்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

இந்த தொடர்மாடியின் இடிபாடுகளில் இருந்து ஏழு பேர் மீட்கப்பட்டதாகவும் மேலும் பலர் சிக்கி இருக்க வாய்ப்பு உள்ளதாகவும் கிலிமென்கோ டெலிகிராமில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 60 வீடுகள் சேதம் அடைந்திருப்பதோடு பல கட்டடங்களின் கூரைகள் உடைந்துள்ளன.

கறுங்கடலில் இருந்து ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியதாக உக்ரைன் விமானப்படை குறிப்பிட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக உக்ரைனிய நகரங்கள் மீது ரஷ்யா தொடர்ச்சியாக ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தி வருவதோடு பெரும்பாலான தாக்குதல்களில் பொது மக்கள் நிலைகளே இலக்கு வைக்கப்பட்டுள்ளன.

# சர்வதேச செய்திகள்

## பஸ் 75 அடி பள்ளத்தில் விழுந்ததில் 29 பேர் பலி



தெற்கு மெக்சிகோவில் கட்டுப்பாட்டை இழந்த பயணிகள் பஸ் ஒன்று 75 அடி ஆழமான பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் குறைந்தது 29 பயணிகள் உயிரிழந்திருப்பதோடு 20 பேர் காயமடைந்துள்ளனர். மெக்சிகோவின் பழங்குடி பிராந்தியமான ஒசாகா மாநிலத்தில் கடந்த புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர்களில் ஒன்றரை வயது குழந்தை ஒன்றும் உள்ளது.

ஓட்டுநரின் போதிய திறமையின்மை மற்றும் களைப்பே இந்த விபத்துக்குக் காரணம் என்று அந்த மாநில உள்துறை செயலாளர் ஜேசுஸ் ரமேரோ தெரிவித்துள்ளார். பொலிஸார் வெளியிட்ட படங்களில் மலை அடிவாரத்தில் சிதைந்த வாகனம் கிடப்பது தெரிந்தது.

கடந்த ஏப்ரலில் மேற்கு மெக்சிகோவில் பஸ் பள்ளத்தில் விழுந்து 18 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாயு கசிவால் 16 பேர் பலி



தென்னாபிரிக்காவில் நைட்ரேட் ஒக்சைடு வாயு கசிவினால் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜொஹன்னஸ்பேர்க்கின் கிழக்காக உள்ள சட்டவிரோத குடியிருப்பு ஒன்றில் கடந்த புதன் (05) இரவு ஏற்பட்டிருக்கும் இந்த வாயு கசிவில் உயிரிழந்தவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் உள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள தங்கச் சுரங்கம் ஒன்றுடன் தொடர்புபட்டே இந்த கசிவு ஏற்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட தங்கச் சுரங்கங்களில் திருடப்பட்ட மண்ணில் இருந்து தங்கத்தை பிரிப்பதற்காக சட்டவிரோத தங்கச் சுரங்கங்களில் நைட்ரேட் ஒக்சைடு வாயு பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே நகரில் ஆறு மாதத்திற்கு முன் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்த சம்பவத்தில் 41 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க ஆளில்லா விமானங்களுடன் மோத வந்த ரஷ்ய போர் விமானங்கள்



சிரியாவில் தனது ஆளில்லா விமானங்களுக்கு நெருக்கமாக ஆபத்தான வகையில் ரஷ்யப் போர் விமானங்கள் பறந்துசென்றதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

வொஷிங்டனின் ஆளில்லா விமானத்திற்கு நெருக்கமாக மொஸ்கோவின் எஸ்.யு 35 ரகப் போர் விமானம் பறக்கும் வீடியோவை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது. ரஷ்யாவின் அத்தகைய செயலால் வான்குடையை திறக்க நேர்ந்தது என்றும் ஆளில்லா விமானம் மோதாமல் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான பணியில் ஈடுபட்டிருந்தபோது ரஷ்யப் போர் விமானங்கள் ஆளில்லா விமானத்தை அச்சுறுத்தியதாக அது கூறியது. ரஷ்யப் போர் விமானத்தின் செயல்பாடுகள் இரு நாட்டுப் படையினரின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்று அமெரிக்க விமானப் படை தெரிவித்தது. சிரியாவில் இருக்கும் ரஷ்யப் படையினர் பொறுப்பற்ற நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அது வலியுறுத்தியது.

# 11 ஆண்டுகளின் பின்னர் ட்விட்டர் வந்தார் சக்கர்பேர்க்






பேஸ்புக் நிறுவனரான மார்க் சக்கர்பேர்க் 11 ஆண்டுகளின் பின்னர் ட்விட்டர் சமூகதளத்திற்கு பிரவேசித்துள்ளார்.

நேற்று (06) ட்விட்டரில் பிரவேசித்த அவர் எதுவும் குறிப்பிடாது, ஸ்பைடர் மேன் கதாபாத்திரம் தன்னைப் போன்றே இன்னொரு உருவத்தை எதிர்கொள்வது போன்ற படம் ஒன்றை கேலியாக பதிவிட்டுள்ளார்.

பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெடா ட்விட்டருக்கு போட்டியாக த்ரீட்ஸ் என்ற செயலியை நேற்று வெளியிட்டதை அடையாளப்படுத்தும் வகையிலேயே அவர் ட்விட்டரில் இந்தப் பதிவை இட்டுள்ளார்.

அந்த புதிய செயலி வெளியிடப்பட்டு ஏழு மணி நேரத்திற்குள் அதில் பத்து மில்லியன் பயனர்கள் இணைந்ததாக சக்கர்பேர்க் தெரிவித்துள்ளார்.

ட்விட்டரை எலொன் மஸ்க் கடந்த ஒக்டோபரில் வாங்கிய பின் அதில் பல கட்டுப்பாடுகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதனால் அதிருப்தி அடைந்திருக்கும் ட்விட்டர் பயனர்கள் புதிய த்ரீட்ஸ் சமூக தளத்தில் இணைய வாய்ப்பு உள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எழுத்து மூலம் கருத்தை பகிரும் ட்விட்டரை ஒத்த த்ரீட்ஸ் சமூகதளத்தை இன்ஸ்டாகிராம் கணக்கின் வாயிலாக ஒருவர் ஆரம்பிக்க முடியும். இதில் புகைப்படங்கள், குறுகிய, உயர் தர வீடியோக்களையும் பகிரலாம்.

மேலும் ட்விட்டரில் 280 வார்த்தைகள் வரம்பு இருந்து வரும் நிலையில், இந்த த்ரீட்ஸ் செயலியில் 500 வார்த்தைகள் வரை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தப்பது.

2009 ஆம் ஆண்டு ட்விட்டரில் இணைந்த சக்கர்பேர்க் கடைசியாக 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதமே ட்விட் பதவி ஒன்றை செய்திருந்தார்.

மெடா தலைவர் மார்க் சக்கர்பேர்க் மற்றும் ட்விட்டர் உரிமையாளர் இலொன் மஸ்க் இடையிலே நீடிக்கும் மோதலின் தொடர்ச்சியாகவே இந்த செயலி வெளியாகியுள்ளது. கடந்த மாதம் இருவரும் நேரடியாக சண்டையிட இணங்கிய நிலையில் இருவரது மோதல் எந்த அளவு தீவிரமானது என்பது தெளிவின்றி உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.